

இலங்கை ஏமாற்றுகிறது!

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI ● 20.06.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



இன்னுமா....
இந்தத் திருமணம்?

காசிக்கு இணையான
சந்திர சூடேஸ்வரர்

கலெக்டர் அய்யா....
கவனிங்க....

மல்கோவா கோபுரம்!

ருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல்-II



Visit us today for Complete Hearing Care.

• Qualified Professional Services • Computerised Audiometry • Counselling • Hearing Aid Trial & Fitting • Complete Range of Digital Hearing Aids from Siemens - the World Leader in Hearing Instrument Technology • Digital BTE, ITE, ITC and almost invisible CIC models with remote control • Ear Moulds • Batteries • Other Hearing Instrument Accessories

சென்னையில் வயதானவர்களுக்கு வீட்டில் வந்து காது கருவி பொருத்தப்படும்.

கங்கா ஹியரிங் கேர் சென்டர்,

59, தானா தெரு, புரசைவாக்கம், சென்னை - 7. பாலாஜி ஓட்டல் எதிரில்,
தொ.பே. : 26426598, 044-32479855. செல் : 93818 - 00298.

ஹியரிங் கேர் சென்டர்

நெ. 1, பழைய பேங்க் ஆப் பரோடா தெரு,
செக்ரட்டிரியட் காலனி, அம்பத்தூர் O.T.,
சென்னை - 53.
(பாரத் பெட்ரோல் பங்க் அருகாமையில்)
போன் : 32427776,

Better Hearing is Better Living



SIEMENS

Authorised Hearing Care Centre

Email - gangahac@yahoo.com,
www.gangahearingcare.com

Call for appointment : **Cell : 9381800298**

கல்கி

20.06.2010

ஆன்மிகம்

அமரர் கல்கி பக்கம்

அரசியல்

தொடர்கள்

சினிமா

சிறுகதைகள்

மாவட்ட ஸ்பெஷல்





மத்திகிரி கால்நடை

இந்தியாவிலேயே பராமரிப்புக்கெனச் சிறப்பு விருது பெற்ற மத்திகிரி கால்நடை பண்ணை, இப்போது அவ்வளவாகப் பராமரிப்பின்றி கிடக்கிறது. கால்நடை மேயும் இடங்கள் கட்டாந்தரையாகக் காட்சி தருகின்றன. முன்பிருந்த கால்நடைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டதாவும் குறைபட்டுக் கொள்கிறார் மத்திகிரிவாசி ஒருவர். பொறுப்பாகப் பராமரித்தால், ஆசியாவிலேயே பெரிய கால்நடைப் பண்ணையாவும், சிறந்ததாகவும் உருவாக்க முடியும் என்கின்றனர். செய்வார்களா?

வாசகர் யோசனை : செல்லம்மா, ஓசூர்

ஒன்பது நட்சத்திரம்



* ராஜேந்திரன்

படிப்பு கசந்துபோன கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கொட்டுக்காரம் பட்டி அரசினர் நடுநிலைப் பள்ளி, யூனிசெஃப் நிறுவனத்தின் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. ஒன்றோ இரண்டோ அல்ல. ஒன்பது நட்சத்திர அந்தஸ்து. சுகாதாரமான பள்ளிக்கு நட்சத்திர அந்தஸ்தை வழங்கி வருகிறது யூனிசெஃப் அமைப்பு. அரசுப் பள்ளி நான்கு அல்லது ஐந்து நட்சத்திரங்களைப் பெற்றாலே சுகாதாரத்தில் தன்னிறைவு பெற்றதாகக் கொள்ளலாம். இப்படியிருக்க, கொட்டுக்காரம் பட்டி சென்ற ஆண்டு பத்து நட்சத்திர அந்தஸ்தும், இந்த ஆண்டு ஒன்பது நட்சத்திர அந்தஸ்தும் பெற்றிருக்கிறது. தலைமையாசிரியர் ராஜேந்திரன், கவி செங்குட்டுவன் என்ற பெயரில் கவிதைகளை எழுதிவருபவர்.



வாசகர் யோசனை : ரமேஷ், ஊத்தங்கரை

காலை நான்கு மணிக்கு ஆரம்பித்து பத்து மணிக்கு முடிந்து விடுகிறது. என்னன்னு கேட்கறீங்களா...? ஒசூர் உழவர் சந்தை. பெஸ்ட் காய்கறிச் சந்தைன்னு பெயர் வாங்கிருக்கு. ஃப்ரஷ்ஷான காய்கறிகளோட ஒசூர் குளிரும் சேர்ந்து வியாபாரத்தையே ரம்யமாக்குது. குண்டூசி முதல், குட்டி விமானம் வரை ஒசூரில் தயாராகுதுன்னு மார்த்தட்டிக் கொள்ளும் உள்ளூர்வாசிகள், உழவர் சந்தை விஷயத்தில் மிகவும் பெருமையடைகின்றனர். அருகிலிருக்கும் பெங்களூருவிலிருந்து தக்காளி, உருளை, பீன்ஸ்... இங்கு மலிவோ மலிவு.

வாசகர் யோசனை : மாதவராமன், கிருஷ்ணகிரி



தருமபுரியின் இலக்கியம்பட்டியில் மௌன சாட்சியாக நிற்கிறது தன் மேனியெங்கும் நெருப்பின் வடுக்களைச் சுமந்தபடி ஓர் புளிய மரம். அதென்ன புளிய மரத்தின் மௌன சாட்சி என்கிறீர்களா...? ஹேமலதா, கோகில வாணி, காயத்ரி... என்ற மூன்று இளங் குருத்துகள் பஸ்ஸில் வைத்து எரிக்கப்பட்டது இந்தப் புளிய மரத்தின் அடியில்தான். சிலரின் லாப - நஷ்டங்களுக்காக மூன்று உயிர்கள் பலியானதை இதயம் உள்ள எவராலும் ஏற்றுக் கொள்ளவும் மறக்கவும் முடியாது. "அந்தப் பொண்ணுங்க நெருப்புல மாட்டிக்கிட்டு எழுப்புன அலறல் இன்னும் என் காதுல ஒலிச்சிக்கிட்டே இருக்கு" என்கிறார் பஸ் எரிந்ததை நேரில் பார்த்த ஒருவர்.



வாசகர் யோசனை : **டிரைவர் சேகர், தருமபுரி**

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

நீங்கள் கேட்டவை

தராசு



சினிமாவுக்கு ஒத்திகை கேட்கிறாரே கமல்?

● ஜி.மாரியப்பன், சின்னமனூர் ❐

? நண்பனை அதிகமாக நம்பி ஏமாறுபவர்களுக்குத் தங்களின் அறிவுரை?

! 'நாடாது நட்டலிற் கேடில்லை; நட்டபின் / வீடில்லை நட்பாள் பவர்க்கு' - என்பது தமிழ்மறை! இதற்கு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி உரை எழுதியுள்ளனர். ராமதாஸைக் கேட்டால் புத்தம்புது உரை கிடைக்கும்!

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தாலும் நக்ஸல்களைத் தொடர்ந்து ஆதரிப்பேன் என எழுத்தாளர் அருந்ததி ராய் தெரிவித்துள்ளாரே?

! சிறைவாசமாவது சுரைக்காயாவது! தமது கருத்துச் சுதந்திரத்துக்காக கம்பி எண்ண நேராது என்பது அருந்ததி ராய்க்கு நன்கு தெரியும். அவரது ஆதரவு பெற்ற மக்களுக்கான நக்ஸல் இயக்கம், இப்போது மக்கள் விரோத இயக்கமாக மாறிவிட்டது என்பதை அவர் உணராதது தான் ஆச்சர்யம். மனித உரிமை நக்ஸல்களுக்கு மட்டும்தானா? மக்களுக்கும் உண்டல்லவா!

● இரா.சக்கரபாணி, மதுரை

? மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் அதிகப்படியான இடங்களைக் கைப்பற்றியுள்ளதே - இதற்கு மமதா பானர்ஜியின் திறமைதான் காரணமா?

! இல்லை; மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பல்முனை தோல்விகளே காரணம் - மாவோ பயங்கரவாதத்தைக்

கட்டுப்படுத்த இயலாமை அவற்றுள் ஒன்று.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

? தம் மீது குற்றம்சாட்டப்பட்டபோது பதவி விலகாத ஜெ; எந்த முகத்துடன் மத்திய அமைச்சர் ராஜா பதவி விலக வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்?'' என தமிழக முதல்வர் கேள்வி எழுப்பியுள்ளாரே?

! கலைஞருடைய வாதம், ராஜாவைக் காப்பாற்ற ராஜ்யத்தையே பறிகொடுப்பது போலிருக்கிறது. 'ராஜா ராஜினாமா செய்யவேண்டும்தான்; ஆனால், முன்பு ஜெ.ராஜினாமா செய்யாததால் ராஜாவும் செய்ய வேண்டாம்' என்பதாக அர்த்தமாகிறது. முன்னுதாரணங்கள் நல் மரபுகளுக்குத்தானேயொழிய, தப்பான காரியங்களுக்கு அல்ல.

● எஸ். ராமசாமி, வடக்கு தயிர்பாளையம்

? ஜனாதிபதி பிரதிபா பாட்டீலுடன் சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சி எம்.பி. ரகுவன்ஸ் பிரசாத் தாமதமாக வந்ததால் ஜனாதிபதி இருபது நிமிடங்கள் காத்திருக்க வேண்டியதாகிவிட்டதாமே?

! தாமதமாக வந்ததற்குத் தவிர்க்க முடியாத நியாயமான காரணம் இருந்தாலன்றி, 1. நன்கு ஆராயாமல் இத்தகைய நபரை ஜனாதிபதியுடன் அனுப்பியது மத்திய அரசின் குற்றம். 2. ஜனாதிபதியைக் காக்க வைத்தது ரகுவன்ஸ் பிரசாத்தின் மன்னிக்க முடியாத குற்றம். 3. ஆர்.ஜே.டி. கட்சி அவர் மீது நடவடிக்கை எடுக்காதது பெருங்குற்றம்.

● தேனி முருகேசன், தேனி

? 2011ல் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அ.தி.மு.க. அரசு அமையும் என்கிறாரே ஜெ?

! அரசியல் அறைகூவல் என்பதைக் காட்டிலும் பகையுணர்வின் பிரகடனமாகத்தான் இது தொனிக்கிறது. அதனால்தான் புதிய சட்டமன்ற வளாகத்தைப் புறக்கணிக்க நினைக்கிறார்.

● பி.தர்சினி, குடந்தை

? நமது இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்காவிட்டால், இங்குள்ள இலக்கியச் செழுமை வெளிநாடுகளுக்குத் தெரியாமலே போய்விடும். எனவே இந்திய இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படவேண்டும் என்கிறாரே துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி?

! மொழிபெயர்ப்பின் தரம் அதைவிட முக்கியம். தரமற்ற மொழிபெயர்ப்பு, அன்சாரியின் நோக்கத்தைத்




● ராஜாவுக்காக ராஜ்ஜியம்!




● புது உரை



● உணராத உண்மை



● பனித்துளி பரிகாரம்



● அபாயகர ஆசை



● பேச்சிலும் சாமர்த்தியம்



● பகையுணர்வுப் பிரகடனம்!

தலைகீழாக்கிவிடும்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? "ஒரு ரூபாய் செலவு செய்தேன்... வந்ததோ இரண்டாயிரம் கோடி முதலீடு என்று குஜராத் முதல்வர் நானோ தொழிற்சாலை தொடக்க விழாவில் சொல்லியுள்ளாரே?

! நானோவை குஜராத்துக்கு வளைத்துப் போட்டது மோடியின் சாமர்த்தியம்தான். ஆனால், டாடா நிறுவனத்துக்கு வழங்கியுள்ள நிலமும் சலுகைகளும் பல்லாயிரம் கோடி பெறும். ஒரு ரூபாய் என்பது பிள்ளையார் பூஜைக்குத் தந்த தக்ஷிணை மட்டுமே!

● மிக்கேல் ராஜ், சாத்தூர்

? "செம்மொழி மாநாட்டை, கட்சி மாநாடுபோல் ஆக்கிவிடக் கூடாது," என்று முதல்வர் உடன்பிறப்புகளுக்கு அறிவுரை கூறியுள்ளாரே?

! மாநாட்டுக்கு மட்டுமின்றி, அரசு விழாக்கள் அனைத்துக்கும் ஏற்ற, ரொம்ப நல்ல, சரியான அறிவுரைதான். ஆனால், இது மீறப்படவேண்டிய அறிவுரை என்பது, கலைஞரைத் திருப்திப் படுத்த நினைக்கும் அனைவருக்கும் தெரியும்!

● கண்.சிவகுமார், திருமருகல் ★

? உமது சமீபத்திய பாராட்டு யாருக்கு நண்பா...?

! உலக சுற்றுச் சூழல் தினத்தன்று, அச்சிடப்பட்ட நாளிதழ்களின் எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நடுவதற்கு உறுதிபூண்ட ஹிந்து நிறுவனத்துக்கு. பத்திரிகைக் காகிதம் தயாரிக்க அழிக்கப்படும் மரங்களுக்கு ஈடுகட்டும் பனித்துளி முயற்சி.

● எஸ்.முரளி, ஸ்ரீரங்கம்

❑ ரூ.150/- பரிசு பெறுபவர் :
ஜி.மாரியப்பன், சின்னமனூர்

★ ரூ.75/- பரிசு பெறுபவர் :
கண்.சிவகுமார், திருமருகல்

?' 'நாடகத்துக்கு எப்படி ஒத்திகை முக்கியமோ அப்படித்தான் சினிமாவுக்கும் ரிகர்சல் தேவை,'' என்று ஒலித்த கமலின் குரல், எந்த அளவுக்கு சினிமா வட்டாரத்தில் பிரதிபலிப்பை ஏற்படுத்தும்?

! நடிப்புத் திறனை அதிகரிக்கச் செய்து செலவைக் குறைக்கும் இந்த நல்ல யோசனை, அவர் தயாரிக்கும் திரைப்படங்கள் அளவிலாவது செயல்பட்டால்கூட மகிழ்ச்சிதான்!

● பார்வதி மணாளன், பெங்களூரு

? ராஜ்யசபாவுக்கு தி.மு.க. அறிவித்த மூன்று வேட்பாளர்களும் அ.தி.மு.க.விலிருந்து வந்தவர்கள்தானே?


! கட்சி மாறினதுக்கு வெகுமதிதான், வேறென்ன! கட்சி விசுவாசிகள் முணுமுணுத்தால், கலைஞர் பைபிள் கதை கூறக்கூடும்!


Pears
சருமத்தைப் பாதுகாக்க சிறந்த வழி அதை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுதான்.
வழங்குகிறோம் பேர்ஸ் ஜெர்ம்ஷீல்டு. இது 99.9% கிருமிகள் வரை அகற்றும் இதமான க்ளென்சராகும். மேலும், இதன் க்ளீசரின் *பார்முலா ஆற்றல்மிக்க மாய்ஸ்ச்சரைசேஷன் அளித்து, சருமத்தை 10 மடங்கு* சிறந்ததாக ஆக்குகிறது. ஆரோக்கியமான மாய்ஸ்ச்சரைஸ் செய்த சருமம், கிருமிகள் உடலுக்குள் புகாமல் தடுக்கும் ஓர் கேடயம் போன்றது.** எனவே, இன்னும் என்ன தயக்கம்? அவர்களின் சருமத்திற்கு ஈடுஇணையற்ற பாதுகாப்பை அளியுங்கள்.
Germshield™
www.masoompears.com

அவர்களைப் போலவே அவர்களுடைய சருமமும் பரிசுத்தமாக இருக்கட்டும்.

ஃபுட்பால், கிரிக்கெட், லாங் சைக்கிள் ரைட்ஸ், மணல் வீடு, கண்ணாமூச்சி. இதெல்லாம் கோடை காலத்தில் உங்கள் குழந்தைகளை பிசியாக வைக்கும் சில விஷயங்கள் ஆனால், இந்த விளையாட்டுகள் அனைத்திலும் பொதுவாக இருக்கும் ஓர் விஷயம் அவர்களை அழுக்காக்கும் ஒன்று, கிருமிகள். உங்கள் குழந்தைகள் நாள் முழுவதும் நன்றாக விளையாடி விட்டு வீடு திரும்பும்போது நிச்சயம் கூடவே கொண்டு வருவது. அது உங்கள் குழந்தைகளுக்கு, அதாவது அவர்கள் சருமத்திற்கு ஏதேனும் தீங்கு விளைவிக்குமா, விளைவிக்காதா என்பது நீங்கள் கையாள்வதைப் பொறுத்தது.

உங்கள் குழந்தையை தினமும் ஓர் ஆன்டிசெப்டிக் சோப்பால் குளிப்பாட்டினால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால், ஓர் ஆன்டிசெப்டிக் சோப் கிருமிகளை அழிக்கும்போது சருமத்தின் தனி தன்மையையும் சேர்த்து அழித்து விடும். சருமத்தின் அத்தியாவசிய விஷயங்கள் அனைத்தையும் பறித்து விடும். அதன் மென்மையையும்தான்! இதற்காக, உங்கள் குழந்தைகள் வெளியில் சென்று விளையாடி மகிழ்வதைத் தடுக்க முடியாது. பிறகு, என்னதான் செய்வீர்கள்? உங்களுக்குத் தேவை, கிருமிகளுக்கு எதிராக ஆற்றலுடன் செயல்புரியும் அதே சமயம் சருமத்தின் மீது கடுமை காட்டாத ஓர் சோப்.



Pears

Germshield™



புதினா சத்துக்களின் நற்குணங்களுடன் பேர்ஸ் ஜெர்ம்ஷீல்டு 99.9% கிருமிகளை அகற்றுவதுடன் சருமத்திற்கு 10 மடங்கு* சிறந்தது.
மேலும், ஹ்யூமெக்டன்ட்ஸ் சருமத்தை நன்கு மாய்ஸ்ச்சரைஸ் செய்து அதை மென்மையாக பரிசுத்தமானதாக ஆக்கும்.

பேர்ஸ் ஜெர்ம்ஷீல்டு உங்கள் குழந்தையின் சருமம் ஆரோக்கியமாவதற்கு உதவி செய்து கிருமிகளுக்கு கேடயம் போன்ற பாதுகாப்பை அளிக்கும். இது சருமத்தை மாய்ஸ்ச்சரைஸ் செய்வதன் மூலம் அதை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்கும்.

உங்கள் குழந்தையின் சருமத்திற்குத் தேவையான பாதுகாப்பை எவ்வளவு சுலபமான வழியில் அளிக்கலாம் என்பது உங்களுக்கு இப்போது தெரிந்திருக்கும். உங்கள் குழந்தைகளும் கிருமிகளைப் பற்றிக் கவலைப்படாமல் கோடை விடுமுறையை இனிதே கழிக்கட்டும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் பேர்ஸ் ஜெர்ம்ஷீல்டை மறக்காமல் பயன்படுத்த வேண்டியதுதான். நீங்கள் குழந்தைகளை பராமரிப்பது போல், பேர்ஸ் ஜெர்ம்ஷீல்டு உங்கள் குழந்தைகளை பராமரிக்கும். மிக இதமாக, ஆனால் தேவைப்படும் இடத்தில் கடினமாக. எல்லாம் எதற்காக? கிருமிகளுக்கு பாடம் புகட்டும்போது சருமத்தை தண்டிக்கக் கூடாது, அல்லவா?

*இது சரும தன்மைகள் மற்றும் மாய்ஸ்ச்சரைசர்களின் நிலைகளைப் பொறுத்தது

www.masoompears.com


‘ஆல் இன் ஆல்’ ஊர்வசி அசத்தலாய் எழுதும்
காலை எழுந்தவுடன்
சிரிப்பு!
11.07.10 கல்கி இதழிலிருந்து...
முந்தானை முடிச்சு–விருந்து...
இன்றைய முதல்வர் வரை!
எல்லாமும்
கலந்துகட்டி வரும்
கலக்கல் தொடர்
தவறவிடாதீங்க!

லதாசேகர்

டல்லா ஃபீல் பண்றீங்களா? மழை ஜோவென்று கொட்டுகிறதா, கறுகறுப் பாகணுமா, சீரியல் பார்க்கும்போது கம்பெனி வேணுமா, தூக்கத்தை விரட் டணுமா, பரீட்சைக்குப் படிக்கணுமா (அரி யர்ஸுக்கும்தான்) மூடு வரமாட்டேன்னு அடம்பிடிக்கிறதா, எக்ஸ்ட்ராவா வேலை பண்ணணுமா... கவலையை விடுங்க. ஒரு கப் சூடான தேநீர் குடித்தால் போதும். ஜகஜகன்னு ஸ்பிரிங் மாதிரி குதித்து வேலை செய்ய முடியும்.

டீ, சாய், சாயா, சாஹா, ச்சா... எனப் பல திருநாமம். நாம் தினமும் குடிக்கும் தேநீர் சுமார் 5,000 வருடங்களாக பழக்கத் திலிருக்கிறதாம்.

முதலில் சீனாவில்தான் ஷென் நாங் என்ற மன்னனால், தேநீர் என்ற பானம் கண்டுபிடிக்கப்பட்டதாம். மன்னர் ஒரு விஞ்ஞானி(!) கூடவே செம்மையான அரசாட்சியும்! குடிநீரைக் காய்ச்சிதான் குடிக்க வேண்டும் என அதிரடி ரூல். வேலையாட்களுக்கு+மக்களுக்கு. அப்படி ஒரு ஹெல்த் கான்ஷியஸ். ஒருமுறை தொலைதூரப் பயணம்போது, திறந்த வெளியில் நீரைக் காய்ச்ச அதில் மரத்தி லிருந்து சில இலைகள் விழுந்து கொதித்த தில், பிரௌன் நிறமாக மாறிப் போனது. மன்னர் அதைக் குடித்து மிகவும் எனர் ஜெட்டிக்கா ஃபீல் பண்ணி, அன்றிலிருந்து தேநீர் தோன்றியது.

மெதுவாக சீனா முழுவதும் தேநீர் கலாசாரம் பரவ ஆரம்பித்து விட்டது. 800 ஏ.டி.யில் லூ யூ என்று ஓர் அற் புதமான துறவி. அநாதையான இவர் புத்த துறவிகளால் வளர்க்கப்பட்டார். ஆனாலும், இவருக்குக் கட்டுப்பாடான வாழ்க்கை பிடிக்கவில்லை. தன் வாழ் நாளில் ஏதேனும் சாதிக்க வேண்டும், புதி தாக ஏதேனும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தேடல். தேநீர், டீ இலைகள், அதன் விவசாயம் என பல்வேறு பரிமா ணங்களில் ஆராய்ந்து 'சா சிங்' என டீ புத்தகமே எழுதி விட்டார். ஜென் புத்தத் துறவிகளின் டீ சர்வீஸ் என்ற கலாசாரம் தோன்றியது லூ யூவினால்தான்!

ஜப்பானில் தேநீர் வந்ததும் புத்த துறவிகளால்தான். 'தியானம் செய்ய மிக ஏதுவான பானம் தேநீர்' என யெய்லேய் என்ற பௌத்த துறவி அறிமுகப்படுத்த, 'தேநீரின் தந்தை' என ஜப்பானியர்கள் டைட்டில் கொடுத்து போஸ்டர் அடித்து ஒட்டி விட்டார்கள்.

சீனா, ஜப்பானுக்குப் பிறகே யுரோப், அமெரிக்கா, ரஷ்யா, ஃபிரான்ஸில் தேநீர் பழக்கம் வந்தது.

இந்தியாவில் தேநீர் இராமாயண காலத்திலிருந்தே உண்டாம். அநுமன் வாயுமார்க்கமாகப் பறந்து, சஞ்சீவினி மலையைப் பெயர்த்தது இலைகளின் சாறுக்காகத்தானே! மருத்துவ இலை களின் டிகாக்ஷனினால்தான் லட்சுமணன் எழுந்தான்.

கமர்ஷியலாகத் தேநீர் தோன்றியது 1820-ல் பிரிட்டிஷ் ஈஸ்ட் இண்டியா கம்பெனியினால்! அஸ்ஸாம் டீ என்றால் மிகவும் ஓசத்தி. டார்ஜிலிங் தேநீரும் உலகப் பிரசித்தி பெற்றது.

நாம் தேநீரின் டாப் புரொட்யூசர் மாத் திரமல்ல. உலகிலேயே மிக அதிகமாகத் தேநீர் குடிப்பவர்களும் நாம்தான்!

தேநீரில் ஏகப்பட்ட நன்மைகள்.

இராமாயணக்



"ஒரு கப் டீயில், கப்பு கப்பா இவ்வளவு பெனிஃபிட்ஸா..." என மலைத்துப் போகும் அளவுக்குப் பலனோ பலன்.

- எப்படி ஒரு ஃபர்னிச்சருக்கு துருப் பிடிக்காமலிருக்க பெயிண்ட் என்ற பூச்சு தேவைப்படுகிறதோ, உடலுக்கும் தேநீர் ஆன்டி ஆக்ஸிடண்ட்ஸாக இருந்து கவசமாகச் செயல்படுகிறது.

- தேநீர் குடித்தால் என்றும் இளமைதான். ஏஜாவது ஒண்ணாவது!

- காஃபியை விட டீயில் காஃபின் எண்ணிக்கை குறைவு. தலை வலி, அஜீரணம், தூக்கமின்மை என்று காஃபியினால் ஏற்பட்டால், டீக்கு மாறிவிடவும்.

- ஒருநாளைக்கு மூன்று கப் டீ குடித்தால் ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக் வராமல் தடுக்கப்படலாம் என ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

- க்ரீன் டீ குடித்தால் நன்மையோ நன்மை. கான்ஸர், மூட்டு வலி எல்லாம் உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் கிட்டே



காலத்து பானம்!

தருமபுரி-கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல்களைச் சிறப்பாகத் தயாரிக்க ஆலோசனை வழங்கிய வாசகர்கள் விவரம் கீழே. (ஆ.ர்).

- செல்லம்மா ராமமூர்த்தி-ஒசூர்
- இரா. கணேசன்- சேலம்
- மு.மதிவாணன், அரூர்
- கே. ஆனந்தன் - பி.பள்ளிபட்டி
- கே.வெங்கட்ரமணன் - தருமபுரி
- கே.சீனிவாசன் -தருமபுரி
- ப.கோபிபச்சமுத்து - கிருஷ்ணகிரி
- மலைரத்தினசாமி - மத்தூர்
- கோவிந்தசாமி - ஊத்தங்கரை
- ஆர்.கீதா - சென்னை,
- ஆதி.வெங்கடேசன் - மாரண்டஅள்ளி
- ம.திருவேங்கடம் - ஊத்தங்கரை
- மாதவராமன் - கிருஷ்ணகிரி
- மு.மார்ட்டீன் ஜோதிக்குமார் - சென்னசந்திரம்
- ராமமூர்த்தி -ஒசூர்



வரக்கூடப் பயப்படும்.

● பற்சிதைவு, பாக்டீரியாக் களிலிருந்து தேநீர் காப்பாற்று கிறது.

● பெண்களுக்கு வரும் ஓவேரியன் கான்ஸரிலிருந்து தப்பிக்க முடியும்... ரெகுலராக டீ குடித்தால்!

● பொதுவாக ப்ளாக் அல் லது க்ரீன் டீயினால் அதிகப் பலன்பெற முடியும். பாலையும் சர்க்கரையும் விட்டு, திக்காகக் குடிப்பதைத் தவிர்க்கவும்.

சில சுவையான சூடான தேநீர்த் தகவல்கள்:-

● காமிலியா சினென்ஸிஸ் என்ற தேநீர்ச் செடி சுமார் 50 வருடங்களுக்கு தேயிலை தந்து கொண்டேயிருக்குமாம்.

● தேயிலை தொழிலாளி அனுபவசாலி யாக இருந்தால், ஒருநாளைக்கு 70 பவுண்டு தேயிலை பறிக்க முடியும். இத னால் சுமார் 14,000 கப் தேநீர் தயாரிக்க முடியும்.

● உலகில் பாப்புலர் + சீப்பானவர் திருவாளர் தேநீர்தான்!

● தேயிலையினால் துர்நாற்றத்தை விரட்ட முடியும். கையிலிருந்து வரும் மீன், மசாலா, குருமா வாடை போக வேண்டுமானால், தேயிலையைப் போட் டுப் பாருங்கள். நாற்றம் போயே போச்!

● மிகப் பிரபலமான 'டீ ஸாங்ஸ்' உண்டு. டீ ஃபார் டூ மற்றும் 'வென் ஐ டேக் மை ஷ்கர்டு டீ' என்ற பாடலும் முறையே 24, 31லிருந்து பிரபலம்.

● ஆசிய நாடுகளான சீனா, இந்தியா, இலங்கை, ஜப்பான், தைவான்தான் மிக அருமையான தேநீர் தயாரிக்கும் பிரம்மாக்கள்.



கல்கி



2010 ஜூன் 20
விக்ருதி ஆனி 6
மலர் : 68
இதழ் : 47

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியன்

கொச்சைப்படுத்தும் தீர்ப்பு!


போபால் விஷ வாயு கசிவு தொடர்பான வழக்கில் இருபத்தாறு ஆண்டுக் கால கொடிய காத்திருப்புக்குப் பிறகு வெளியாகியுள்ள தீர்ப்பு, நமது நாட்டின் மனித வளத்தை, நாமே மலினப்படுத்துவதாக அமைந்திருக்கிறது!

இதுபோன்ற வழக்குகளில் சட்டங்கள் கடுமையானதாக இல்லை; பலப்படுத்தப்பட வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, தொடக்கம் முதலே மத்திய - மாநில அரசுகள் தொடர்ந்து பல தவறுகளை இழைத்துள்ளன என்பது தெளிவு.

கடைநிலைக் குடிமகனையும் கண்ணும் கருத்துமாகக் காக்க வேண்டிய பொறுப்பு அரசினுடையது. ஆனால், நமது நாட்டு அரசு (அடுத்தடுத்து பதவியில் இருந்த அரசுகள்), அமெரிக்க யூனியன் கார்பைட் நிறுவனத்தில் நிலவும் அளவுக்குக் கடும் பாதுகாப்பு நெறிகளை வற்புறுத்தாமல், ஏனோதானோ அணுகுமுறையுடன் அந்நிறுவனம் இந்தியாவில் இயங்க அனுமதித்திருக்கிறது.

இந்த அலட்சியப் போக்கினால் உலகின் மிகக் கொடிய ஆலை விபத்து நிகழ்ந்தது. ஆலை அமைப்பில் உள்ள பலவீனத்தை நன்கு அறிந்திருந்த யூனியன் கார்பைட் சர்வதேச தலைவர் வாரன் ஆன்டர்சன் இவ்வழக்கிலிருந்து தப்பிக்கவும் அரசு அனுமதித்திருக்கிறது! யூனியன் கார்பைடின் இந்தியப் பிரிவுத் தலைவரான இந்தியர் கேசப் மகேந்திராவும் வேறு





சிலரும் மட்டும் பெயரளவில் தண்டனை விதிக்கப்பட்டு ஜாமீனிலும் வெளியேறி விட்டனர்! இதுவும் போதாதென்று, யூனியன் கார்பைட் நிறுவனத்திடம் நியாயமான நஷ்டஈடு கேட்ட பிறகு, அது வழங்கிய அற்பமான நஷ்ட ஈடை அரசு ஏற்றுக் கொண்டது! கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையுமாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் வற்புறுத்தப்பட்டுள்ளனர். இந்திய அரசுக்குத் தனது மக்களின் நலனைக் காட்டிலும், ஓர் அமெரிக்க முதலீட்டு நிறுவனத்தைக் காப்பாற்றுவது முக்கியமாகியிருக்கிறது. அரசின் நாணயம் - நேர்மை குறித்துச் சந்தேகங்களுக்கு இடங்கொடுக்கிறது இந்தச் சூழ்நிலை.

அயல்நாடுகளில் மக்களின் கல்வியறிவும் விழிப்புணர்வும் அதிகம் என்பதால், அபாயகரமான தொழில் திட்டங்களுக்கு உடனடி எதிர்ப்பு எழுகிறது. இங்கோ, மக்கள் அறியாமையில் உழல்பவர்கள். மனித உழைப்புச் செலவும் குறைவு. அரசு அமைப்புகளை லஞ்சத்துக்கு வாங்கிவிட முடிகிறது. அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்குப் பல வகைகளில் லாபம்! எனவே இங்கே சுலபமாக தொழிற்சாலை நிறுவி கொள்ளை லாபம் அடைகின்றன.

இந்த வழக்கில் இனி மேல்முறையீடு செய்து போராடுவது, மேலும் தாமதத்துக்கும், பாதிக்கப்பட்டவர்களின் நீடித்த துன்பத்துக்குத்தான் வழி வகுக்கும். கால் நூற்றாண்டு கடந்த பிறகும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சந்ததியினர்கூட ரசாயன வதையினாலும் மன வதையினாலும் அவதியுற்று வருகின்றனர்.

இவ்விஷயத்தில் யூனியன் கார்பைடுடன் கைகோத்துத் தவறிழைத்த ம.பி. அரசும், மத்திய அரசும்தான் நியாயமானதொரு நிவாரணத் தொகையை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உடனே வழங்க வேண்டும். நீதிதான் கிடைக்கவில்லை; நிதியையேனும் பெற்று அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஓரளவேனும் செப்பனிட்டுக் கொள்ளட்டும்.

“தாகம் தீர்ப்பேன்!”

- ஸ்டாலின் கனவுத் திட்டம்

கைக்கு எட்டும் தூரத்தில் காவிரி இருந்தாலும், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு இதுவரை அது குடிநீராகப் பயன்படவில்லை. காவிரி தமிழகத்தினுள் நுழையும் தலைவாயிலில் இந்த மாவட்டங்கள் இருந்தாலும், ஆற்றை விட மிக உயரத்தில் அமைந்திருப்பதால், குடிநீராகப் பயன்படுத்த முறையான திட்டங்கள் போடப்படவில்லை. இந்த நிலையில், நிலத்தடி நீரைப் பயன்படுத்திய மக்கள் அதில் உள்ள நச்சுப் பொருட்கள் காரணமாகப் புளோரோஸிஸ் என்ற நோயால் தாக்கப்பட்டார்கள். பற்களின் ஈறுகளைப் பாதித்து எலும்புகளைப் பல வீனமாக்கும் நோய்தான் புளோரோஸிஸ். தமிழகத்திலேயே இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இங்குதான் அதிகம்.



பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப்படும் குடிநீர் மட்டுமே, இந்த மாவட்ட மக்களை புளோரோஸிஸ் நோயிலிருந்து காப்பாற்றும் என்ற அடிப்படையில் உருவானதுதான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஜப்பான் வங்கி இதற்கான நிதி உதவியைச் செய்கிறது. மூன்று நகராட்சிகள், 17 நகரப் பஞ்சாயத்துகள், மற்றும் 6755 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இந்தத் திட்டத்தால் பயன் பெற இருக்கிறார்கள்.


2008 பிப்ரவரியில் துவங்கிய திட்டப் பணிகள் வேக வேகமாக நடக்கின்றன. 2012 டிசம்பருக்குள் பணிகள் முடிய வேண்டும். ''ஆறு மாதங்களுக்கு முன்னரே முடிப்போம்'' என்று சொல்கிறார் துணை முதல்வர் ஸ்டாலின். அவருக்கு, இது கனவுத் திட்டம். ஆற்றை ஒட்டி ஒகேனக்கலில் சுத்திகரிப்பு நிலையம், நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அருகிலுள்ள 'மடம்' என்ற இடத்தில், இரண்டரை கோடி லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கம் ஒன்று பூமிக்கடியில் கட்டப்பட்டு வருகிறது.



இந்த நிலையில், திட்டப் பணிகள் நடக்கும் இடம் ''எங்களுக்குச் சொந்தமானது'' என்று முட்டுக்கட்டைப் போடுகிறது கர்நாடக அரசு. 1998-லேயே இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ள கர்நாடக அரசு, வீண் வம்பாகப் பிரச்னைகளை எழுப்புகிறது. இந்தத் திட்டத்தைத் தொடர வேண்டுமெனில், சிவசமுத்திரம் என்ற இடத்தில், கர்நாடக அரசு நீர் மின் நிலையம் அமைக்க, தமிழகம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது! ஆனால், இவ்வளவு கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும் திட்டத்தில், எந்தவித நெருடலும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தமிழக அரசின் கடமை. ''எப்படிப்பட்ட எதிர்ப்பு வந்தாலும், தடைகளைத் தாண்டி தர்மபுரி மக்களின் தாகத்தைத் தீர்த்து வைப்பேன்'' என்கிறார் ஸ்டாலின்.

- ப்ரியன்







ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501. திருவாரூர் மாவட்டம்.

ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

24.6.2010 வியாழக்கிழமை

அன்புடையீர்,

பாடல்பெற்ற இத்தலத்தின் ஆலயம் கால வெள்ளத்தினால் சிதிலமுற்றிருந்ததைக் கண்டு கருவேலி குழந்தை அய்யர் அவர்களின் சந்ததியினர் மேற்கொண்ட பெரும் முயற்சியினால் அழகுற திருப்பணிகள் செய்விக்கப் பெற்று 1997ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. அதன்பின் மீண்டும் சமீபத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன் திருப்பணிகள் துவங்கி, முக்கியமாக ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத சுப்ரமண்யர், ஆஞ்சநேயர், சிம்மவாஹினி ஸன்னதிகள், ஸ்வாமி அம்பாள் ராஜகோபுரங்கள், கட்டப்பட்டு, ஸர்வதாரி ஆண்டு ஆனி மாதம், 30ந் தேதி 14.7.2008 திங்கட் கிழமை மீண்டும் கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தற்பொழுது இதன் **இரண்டாம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகம் மங்களகரமான விக்ருதி வருஷம், ஆனி மாதம், 10ம் தேதி,** 24.6.2010 **வியாழக்கிழமை** அனுஷ நக்ஷத்திரம், சித்தயோகம் கூடிய சுபதினத்தில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறுகிறது. ஆன்மிக அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஸ்ரீஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீசற்குணேஸ்வரப் பெருமானின் பேரருளை பெற வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல் : காலை 8 மணி - அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, கணபதி ஹோமம், கடஸ்தாபனம் ஹோமங்கள் ஆரம்பம். பகல் 12 மணி - பூர்ணாஹுதி, கடங்கள் புறப்பாடு - அபிஷேகம் அலங்காரம் - தீபாராதனை. மாலை 5 மணி - திருக்கல்யாண நிகழ்ச்சிகள் ஆரம்பம். இரவு 7 மணி - திருக்கல்யாணம் பூர்த்தி

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
தலைவர்: ஸ்ரீ ராமசர்மா, (போன்:94434 05965)
செயலாளர்: திரு ஜீ.குஞ்சிதபாதம் (97864 61493)
மற்றும்
கருவிலி கிராமவாசிகள்

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்


மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்க:


திரு. ஜீ.கண்ணன், Secretary, Sri Sarguneswarar Temple Management Committee, கே.கே.நகர், சென்னை - 600 078. போன் : 98840 34020

திரு. ஆர்.சின்னதுரை, மேனேஜர், ஸ்ரீ சற்குணேஸ்வரர் ஆலயம், போன் : 04366 - 273900

திரு. வைத்தியநாத ஸ்வாமி, கும்பகோணம், போன் : 0435 - 2403772

திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயர், கும்பகோணம், போன் : 0435 - 2443388,செல்:9443 384845





“காமிக்ஸ்தான் குரு!”









* செந்தில் குமார்

''என் ஓவியத்துக்கு குரு, காமிக்ஸ் புத்தகம் தான்'' என்கிறார் குலவை நா.செந்தில்குமார். சேலம் மாவட்டத்தின் அதிகாரப் பட்டிக்காரர். அதென்ன குலவை? இவர் ஓவியர் மட்டுமல்ல... 'குலவை' என்கிற காலாண்டிதழையும் நடத்தி வரும் தமிழாசிரியர். ''எங்க வீட்டுல எல்லோருமே வாரத்துல ரெண்டு சினிமாவாவது பார்த்துடுவோம். பார்த்த படத்தின் கதாபாத்திரங்களை வரைந்து காட்டி, நண்பர்களிடம் பெற்ற கைதட்டல்தான், என்னை ஓவியம் நோக்கி வெகுவா இழுத்துடுச்சி. வணிகப் பத்திரிகைகளில் என்னை வெகுவாகக் கவர்ந்த ஓவியர் மணியம் செல்வன்தான். அவரின் கலரிங் சென்ஸ், மென்காற்று போல மனசுக்கு ஒத்தடம் கொடுக்கும். நவீன இதழ்களில் ஆதிமூலம், மருது... இவர்களின் ஓவியங்களைப் பார்த்த பின்புதான் ஒரு கோட்டின் அர்த்தமே எனக்கு விளங்க ஆரம்பித்தது. இவர்களின் பாதிப்பில்லாமல் என் ஓவியம் இல்லை'' என்கிறார் செந்தில் குமார்.

- மகிமைராஜன்



நால்வர் காட்டிய நல்வழி

2 கோபுரம்



வானைக் கீறுவது போலவே, நிமிர்ந்து நிற்கின்றன கலசங்கள். கிழக்கைக் கீறி வெளிப்படும் சூரியனின் ஒளிக் கற்றைகள் பட்டு, அவை ஜொலிக்கின்றன. 'ஞானம் என்பது அறிவின் வெளிச்சம்; அதில்தான் உண்மைகளைப் பற்றிய தெளிவு உண்டாகிறது' என்று அறிவிக்கிறது கலசங்களின் காட்சி!

அந்தக் கலசங்களைத் தாங்கி நிற்கின்றன பெரும் கோபுரங்கள். மூன்று நிலை, ஐந்து நிலை, ஏழு நிலை, ஒன்பது நிலை... என்று உயரத்திற்கேற்ப இவை மாறுபடுகின்றன. அவற்றில் பலப்பல கதை வடிவங்கள். ஆலயம் என்பது ஓரளவு முழுமை பெற்றுவிட்ட நிலையில், நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட வடிவம்தான், பிரதான வாயிலில் அமைக்கப்படும் ராய கோபுரம் என்று சொல்லப்பட்ட ராஜகோபுரம். எகிப்தியப் பிரமிடுகளை நினைவுபடுத்தும் இந்தக் கோபுரங்கள், பரந்த மனமும், கூரிய அறிவும், உயர்ந்த குணமும் வேண்டும் என்று உணர்த்துகின்றன. காலங்கடந்து நிற்கும் புகழும், சிறப்பும் அப்படிப்பட்டவருக்கே வாய்க்கின்றன என்பதை மௌனத்தால் பேசிக்கொண்டேயிருக்கின்றன.

'கோபுரத்தைப் பொம்மையா தாங்குகிறது!' என்பது வழக்கில் சொல்லும் வார்த்தை. கோபுரத்தின் வலிமையைப் 'பொம்மை'கள் கூட்டவில்லைதான்; என்றாலும், கோபுரத்தின் அழகாக விளங்குபவை அந்தப் பதுமைகள்தான். 'எண்ணங்களால் நீ வலிமை பெற்றிருந்தாலும், குணங்களாலேயே நீ அழகு பெறுகிறாய்' என்று, அந்தப் பதுமைகள் உபதேசம் செய்வது போன்ற பிரமை ஏற்படுகிறது.

கல்லும், சாந்தும் சேர்த்துக் கட்டிய கலவையல்ல, கோபுரங்கள். அவை ஒவ்வொன்றும் வரலாற்றின் சாட்சியங்கள்!

கோபுரம் என்பது தமிழ்ச் சொல்லா இல்லையா என்பதிலேயே ஒருமித்த கருத்தில்லை. என்றாலும், தமிழகத்தின் மிகப் பழைமையான கோபுரம் என்று காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தின் முகப்பைச் சொல்லலாம். இது இன்றைய கோபுரங்களின் எளியவடிவம். இதை எழுப்பியவன், ராஜசிம்ம பல்லவன் என்கிற இரண்டாம் நரசிம்மவர்மன்.

அனாதிகாலமாக ஆனந்தத் தாண்டவத்தை நிகழ்த்தி வரும் கூத்தபிரானின் பொன்னம்பலம் அமைந்திருக்கும் தில்லைச் சிதம்பரம் திருக்கோயிலுக்கு, நான்கு திசைகளிலும் கோபுரங்கள் உண்டு.

அவற்றில், மேற்கு வாயில் வழியே நாவுக்கரசரும், தெற்கு வாயில் வழியே ஞான சம்பந்தரும், வடக்கு வாயில் வழியே சுந்தரரும், கிழக்கு வாயில் வழியே மணி வாசகப் பெருந்தகையும் பிரவேசித்து ஆடல்வல்லானைத் தரிசித்தார்கள் என்பது செய்தி.

அவற்றில், கிழக்கு மற்றும் மேற்குக் கோபுரவாயிலில் பரத நாட்டியத்தின் 108 கரணங்கள் (வகை மைகள்) சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் செதுக்கியவன், காடவ மன்னனான கோப்பெருஞ்சிங்கன். சோழ மன்னனான மூன்றாம் ராஜராஜனைச் சிறைப்படுத்தி, தன் தலைநகரான சேந்த மங்கலத்தில் காவலில் வைத்தவன் இவன் என்பதும், போசள மன்னனான வீர நரசிம்மன் சோழனைச் சிறைமீட்டான் என்பதும் வரலாறு.

ஸ்ரீநிவாச ராகவன்

கடலூருக்கு அருகில் உள்ள திருவந்திபுரம் ஆலயத்தின் கல்வெட்டும் இதை உறுதி செய்கிறது.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளின் அவதாரத் தலமான திருநாவலூருக்கு அருகில் இருக்கிறது சேந்தமங்கலம். இன்றும் அங்கே கோட்டையின் இடிபாடுகளைக் காண



லாம். பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கோப்பெருஞ்சிங்கன்தான் திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தில் உள்ள பழமலைநாதர் ஆலயத்தின் கோபுரத்தில் காணப்படும் நடனச் சிற்பங்களையும் அமைத்தவன்.

இந்தப் பழமலைநாதர், சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடன் நடத்திய திருவிளை



சிவனிடமே கேட்டார் சுந்தரர். உடனே, 'நானளித்த பொன்னை, அருகிலுள்ள மணிமுத்தா நதியில் போட்டு விட்டு, திருவாரூரிலுள்ள கமலாலயத் திருக்குளத்தில் தேடி எடுத்துக் கொள்' என்றார் சிவன். சுந்தரரும் அப்படியே எடுத்துக் கொண்டார் என்பது தலபுராணம். 'ஆத்துல போட்டுவிட்டு குளத்துல தேடுறது' என்கிற வழக்கு மொழி வேர்ப்பிடித்தது இங்கு தான்.

ஆச்சர்யம் இதுவல்ல; சிவ னளித்த பொன்னின் மாற்று எப்படி என்று சோதித்தறிய விநாயகரை நாடினார் சுந்தரர். அப்படிச் சோதித்துச் சொன்ன விநாயகர், 'மாற்றுரைத்த விநா யகர்'. இந்த முதுகுன்றத்தில் மட்டுமல்ல; திருவாரூர்க் குளத்தில் இருந்து எடுத்த பொன்னை உரசிப் பார்த்துச் சொன்ன வரும் விநாயகர் தான். எனவே, அங்கும் 'மாற்றுரைத்த விநாயகர்'.

கோபுரங்களுக்கு மீண்டும் வருவோம்... கோபுரங்களால் பெருமை படைத்த ஆலயம் என்று சொன்னால், நாகாபரணனான கயிலைநாதனை - தம் வளைக் கரங்களால் வளைத்து, சொக்க

யாடல் சுவாரஸ்யமானது. வழக்கம்போல சிவபிரானிடம் உதவி வேண்டினார் சுந்தரர். சிவனோ பொன் கட்டியாகக் கொடுத்து விட்டார். 'இதை எப்படிப் பத்திரமாக எடுத்துப் போவது?' என

நாதனாக்கிய கூடலின் மகாராணி மதுரை மீனாட்சியின் ஆலயம் தான். ஒன்றிரண் டல்ல; 24 கோபுரங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது அன்னை சொக்கியின் திருக்கோயில். பாண்டியர்கள், சோழர்கள்,

நாயக்கர்கள் என்று பலரின் திருப்பணிகளைக் கொண்டு விளங்குகிறது இந்த ஆலயம்.

கோபுர வரிசையில் முதலிடம் பெறுவது, திருவரங்கம் ராஜகோபுரம். பெரிய பெருமாள், பெரிய பிராட்டியார், பெரிய திருவடி, வாத்தியம் பெரிய மேளம், நைவேத்தியம் பெரிய அவசரம்... என்பது போலவே, கோபுரமும் அமைந்தது தனிச் சிறப்பு. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரம் இதுதான். ஸ்ரீ அஹோபில மடத்தின் 44வது பட்டம் ஜீயர் ஸ்வாமிகள் முயற்சியால் உருவான அற்புதம் இது. இந்த ராஜகோபுரத் திருப்பணியில், பல மாநில அரசுகள் பங்கேற்றன. அவை மட்டுமல்ல: பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவும், அதன் ஒரு நிலையை நிர்மாணிக்கும் செலவை ஏற்றார்.

> **அனாதி காலமாக, ஆனந்த தாண்டவமாடும் கூத்தபிரானின் தில்லைச் சிதம்பரம் கோயிலுக்கு நான்கு திசைகளிலும் கோபுரம் உண்டு.**

ராஜகோபுர விஷயம் இப்படியென்றால், அங்குள்ள வெள்ளைக் கோபுர வரலாறு இன்னும் சுவாரஸ்யமானது.


திருவரங்கம் ஆலயத்தைச் சீர்குலைக்க முற்பட்ட ஓர் அந்நியனை, அந்த கோபுரத்தில் ஏறச் செய்து, அங்கிருந்து கீழே தள்ளிக் கொன்றாள் வெள்ளையம்மாள் என்கிற தேவதாசிப் பெண். அவளின் நினைவாகவே, வெள்ளைக் கோபுரம் என்று அது பெயர் கொண்டது.

'மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில் லேன் கண்டாய்' என்று நினைத்துப் பார்க்கவே முடியாத ஒரு பிடிவாதத்தை / வைராக்கியத்தைக் கைக்கொண்டு, எம்பெருமானையே மணாளனாக அடைந்த கோதை நாச்சியாரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது, திருவில்லிப் புத்தூரில் விளங்கும் கோபுரம். அது மட்டும்தானா? 'உங்கள் பக்தியும், அன்பும் பவித்திரமாயிருந்தால், பரமன் உங்களைக் கட்டாயம் ஏற்றுக் கொள்வான்' என்றும், இது நம்பிக்கையூட்டிக் கொண்டிருக்கிறது. அதனாலேயே, ஆண்டாள் கோயில் கோபுரம், ஆளும் அரசின் சின்னமாகத் திகழ்வதில் சாலப் பொருத்தமாயிருக்கிறது.

இது இப்படியென்றால், திருவண்ணாமலை இன்னமும் வித்தியாசமானது. கிளி வடிவில் அருணகிரி நாதர் தங்கியிருந்ததும் இறுதியில் இறையடிச் சேர்ந்ததும் இங்குள்ள கிளிக் கோபுரத்தில்தான். தவிர, ஆரம்பத்தில் உயிர் துறப்பதற்காக ஆலய கோபுரத்தைத் தேர்வு செய்த முதல் நபர் தான் பின்னர் அருணகிரியாக உருமாறியது.

அருணகிரியார் அனுபூதி ஞானம் பெற்றது அண்ணாமலை கோபுரத்தில் என்றால், தாம் பெற்ற ரகசிய ஞான உபதேச மந்திரத்தை உலக நலனுக்காக ஊர் அறிய ராமானுஜர் அளித்தது திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்திலிருந்து! தான் மட்டும் நலமடைவது முக்கியமல்ல; தமக்கு நரகம் வாய்த்தாலும் பரவாயில்லை. மற்ற அனைவரும் நலம்பெற வேண்டுமென விழைந்தார் ஸ்ரீமத் ராமானுஜர். அந்தப் பேருள்ளத்தின் விளைவாகவே 'எம்பெருமானார்' என்றும் கொண்டாடப்பட்டார். அவர் மேற்கொண்ட சமயப் புரட்சியின் சின்னமாக இன்றும் திருக்கோஷ்டியூர் கோபுரம் கம்பீரமாக நிற்கிறது!

(அடுத்தவாரம் கொடிமரம்)




நாதியற்ற நடுகற்கள்!

கிருஷ்ணகிரியின் நவகொண்டபாளையம் கிராமத்தில் மட்டும், ஒரே இடத்தில் ஐம்பத்து நான்கு நடுகற்கள் காணக் கிடைக்கின்றன.

இவ்வாறு, ஒரே இடத்தில் இத்தனை நடுகற்கள் காணக் கிடைப்பது அரிதாகும்.





தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல்

இந்த ரயில் நிலையத்தின் வயது நூற்றைம்பது. கன்னியாகுமரி - காஷ்மீர் வழித்தடத்தில், மொரப்பூர் ரயில் நிலையம் உள்ளது. 1.6.1982-ல் பயன்பாட்டுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டத்துக்காரர்கள் சென்னை செல்ல வேண்டுமெனில், மொரப்பூர் ரயில் நிலையமே நுழைவாயில். தினசரி பதினாறு விரைவு ரயில்கள் மொரப்பூர் வழியாகச் செல்கின்றன.

- டிரைவர் சேகர், தருமபுரி

மொரப்பூர் ரயில் நிலையம்!

"என் தாத்தா-அப்பா காலத்துலேர்ந்து எங்களுக்கு இது பரம்பரை வைத்தியம். டெய்லி இருபது முப்பது பேரு வந்து போறாங்க. சுத்துபட்டு கிராமங்கள் லேர்ந்துனு மட்டுமில்லே, ரொம்ப தூரத்து ஊர்லேந்தும் கேள்விப்பட்டு வந்துட்டுப் போறாங்க'' என்கிறார் ஆ.கே.ராமன். தருமபுரி-அரூர் சாலையில் ராஜாபேட்டை கிராமத்திலிருக்கும் தம் வீட்டிலேயே மஞ்சள் காமாலைக்கு இலவசமாக மருத்துவம் பார்க்கும் இவருக்கு வயது 75.



காமாலை ஆரம்ப நிலையில உள்ளவங்களுக்கு மூணு நாள்ல குணமாயிடும்.

அந்த நடுகற்கள் கேட்க நாதியற்றுக் கிடக்கின்றன. அவ்வூரார்க்காரர்கள் அந்தப் பகுதியில் புதிதாகக் கோயில் ஒன்று கட்டி வருகின்றனர். கோயில் கட்டு மானங்களுக்கு இடையூறாக உள்ளது என எண்ணி, பெரும்பாலான நடுகற்களைப் பெயர்த்து எடுத்து கண்ட இடங்களில் போட்டு வைத்துள்ளனர்.

''எது எப்படியோ! பெயர்த்து எடுக்கப்பட்ட நடுகற்களை அக்

நியூஸ் ஏந்தி பவன்

கோயிலின் எதிரே திடலில் பொருத்தி வைத்தல் வேண்டும் என்பதே நடுகல் ஆய்வாளர்களின் விருப்பம்!'' எனக் குறிப்பிடுகிறார் நடுகல் ஆய்வாளர்களில் ஒருவரான சந்தியூர் கோவிந்தன்.

வாசகர் யோசனை:
இரா. கணேசன், சேலம்

ஒகேனக்கலை நீங்க திருப்திகரமா சுத்திப் பார்க்கணும்னா... இந்தத் தொங்கு பாலம் வழியா கடந்து போயாகணும். மெயின் அருவியிலேர்ந்து தண்ணீர் குதித்தோடி வர்ற எடத்துல, ஐம்பதடி உயரத்துல இருக்கு இந்தத் தொங்கு பாலம். மெயின் அருவியோட வியூவை இங்கேருந்தும் காணலாம். பாலம் வழியாகச் சென்று மேடுபள்ளங்கள் தாண்டிப் போயும் பார்க்கலாம். எந்த இடத்தில் நின்று பார்த்தாலும், அதன் அழகே தனிதான். பெரிய தோணி எனப்படும் கால்வாய் பள்ளத்தாக்கில் படகு சவாரி கண்டு ரசிக்கலாம். தூரத்தே கர்நாடகா எல்லை தெரிகிறது. திரும்பி நடந்தால் கண்ணில் படுவது, நம் மக்கள் குளியல் ஆடுவதற்கான சின்ன அருவி. பாதுகாப்பான குளியல் ஆடலாம் அங்கே.


- டிரைவர் சேகர், தருமபுரி.

தொங்கு பாலம்!



முத்திப் போனவங்களுக்குப் பதினைஞ்சு நாள்ல நோய் மறைஞ்சு போயிரும். இதுக்குன்னு நா இதுவரைக்கும் யார்ட்டயும் கைநீட்டிப் பணம் வாங்குனது இல்லை. அவங்களா விருப்பப்பட்டு பணம் காசு தந்தாலும், அதை என் மருமகன் மகன்தான் வாங்குவாங்க. இந்த மருந்துக்கு இவ்வளவுதான் பணம்னு இதுவரைக்கும் நாங்க நிர்ண யம் பண்ணினது இல்ல'' என்கிறார்.

வாசகர் யோசனை: மு.மதிவாணன், அரூர்



மறையுது மஞ்சள் காமாலை!

ஊத்தங்கரைக்கு வேண்டும் உழவர் சந்தை!

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல்



காய்கறிச் சந்தைக்குன்னு தனி இடம் இல்லே. எல்லாம் ரோட்டோரம்தான். அதிகாலை மூனு மணியிலேர்ந்து காய்கறிகளும், கீரை வகைகளும் வந்து குவிய ஆரம்பிக்கும். எல்லாமே காலம்பற ஒம்பது மணிக்குள்ளார வித்து தீர்ந்துடும். தினசரி பத்து லட்ச ரூபாய் அளவுக்கு வியாபாரம் நடக்கற ஊர்ல, ஒரு உழவர் சந்தை தேவைதானே?' என உரிமைக் குரல் கொடுக்கின்றனர் ஊத்தங்கரை கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற விவசாயிகள்.

திண்டிவனம் - கிருஷ்ணகிரி என்ஹெச் 66 தேசிய நெடுஞ்சாலையில், இருக்கு ஊத்தங்கரை கிராமம். நெடுஞ்சாலையின் விளிம்பில் முனியப்பன் கோயில் அருகே, தினசரி அதிகாலையில் கூடுகிறது தற்காலிகக் காய்கறிச் சந்தை.

''தக்காளியும் கீரை வகைகளும் இங்க நிறைய விளையுது. பணப் பயிர்களான காய்கறி வகை சாகுபடியும் அதிகம். கத்திரி, புடலை, பாகற்காய், பீர்க்கன், மொச்சை மற்றும் மிளகாய்... சுத்துவட்டாரம் முப்பது கி.மீ. தொலைவிலிருந்து வெள்ளாமையாகும் காய்கறிகள் அத்தனையும் இங்கதான் வந்து சேருது. என்னோட தோட்டத்துல தக்காளி சாகுபடி நெறையவே பண்ணிட்டு வர்றேன். ஊத்தங்கரைக்கு, பெரிய காய்கறி வியாபாரிங்க வந்து, கொறைஞ்ச விலையில எங்கள்ட்ட கொள்முதல் பண்ணிட்டுப்போய், அதிக விலைக்கு வித்து லாபம் பார்க்கறாங்க!'' எனக் குறைபட்டுக் கொள்கிறார் படபள்ளி கிராம விவசாயி ராஜா.



✱ விவேகானந்தன்



✱ ராஜா

''நூறு கிலோ தக்காளி கொண்டு வந்திருப்பாரு விவசாயி. அவுரு நிர்ணயிக்கற விலைக்கு வித்துட்டுப் போய்ட முடியாது. வியாபாரிங்க வந்து கேட்டுத் தகையிற ரேட்டுக்குத்தான் உற்பத்தி பண்ணின விவசாயி தன் உற்பத்திப் பொருளை விற்க முடியும். இது விவசாயிகளுக்குப் பெரிய பின்னடைவு. உழவர் சந்தை இருந்துச்சுன்னா இந்த நிலை நீடிக்குமா?



● முத்துவேலு

வாய்ப்பே இருக்காது. பொது மக்கள் நிறைய திரண்டு வரு வாங்க. ஏவாரிக்கு தர்றதை விடக் கொஞ்சம் ரேட் உசத்தி. பொதுமக்களுக்கு விற்க முடியும். ஆனா அவங்களுக்கோ, வெளி மார்க்கெட்ல வாங்குறதைவிட இங்க எல்லாமே விலை கம்மியா இருக்கும்!'' என்கிறார் கணக்கம்பட்டி முத்துவேலு.

''ஊத்தங்கரைக்கு முப்பது கி.மீ. சுற்றளவில் வேறு எங்கும் உழவர் சந்தை இல்லை. இந்தப் பகுதி மக்களோட கோரிக்கைகள்ல இதுவும் ஒண்ணு. பொது மக்களுக்குக் குறைஞ்ச விலையில காய்கறி, கீரைகள் கிடைக்கும். உற்பத்தி செய்து உழவர் சந்தைக்குக் கொண்டு வர்ற விவசாயிகளுக்கும் மனசுக்கு நிறைவான ரேட்டு கிடைக்கும். எப்போ வரும் உழவர் சந்தை? என்பதே எங்க ஏக்கம்!'' எனக் கூறுகிறார் மத்தூர் - ஊத்தங்கரைப் பகுதி ஏரிப்பாசன விவசாயிகள் கூட்டுக் குழுத் தலைவர் விவேகானந்தன்.

வாசகர் யோசனை :
கவி செங்குட்டுவன்,
ஊத்தங்கரை



கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் செல்லும் சாலையில், ஒசூருக்கு நெருக்கத்தின் பதினைந்தாவது கிலோ மீட்டரில் ஓர் நினைவு வளைவு அழைக்கிறது, மூதறிஞர் ராஜாஜி பிறந்த ஊர் தொரப்பள்ளியின் நுழைவாயில் இது என்று. உள்ளே நுழைந்தால், மூன்றாவது கிலோ மீட்டரில் ஆரம்பிக்கிறது ராஜாஜி பிறந்த தொரப்பள்ளி கிராமம். தொரப்பள்ளியின் முன்சீஃப்பாக இருந்தவர், ராஜாஜியின் தந்தை சக்கரவர்த்தி வேங்கடாச்சார்யா. மூன்றாவது மகனாகப் பிறந்த ராஜாஜி தொடக்கக் கல்வி ஓசூரில் பயின்றிருந்தாலும், திண்ணைக் கல்வி என்ற தொடக்கப்புள்ளி தொரப்பள்ளியில்தான். ''ராஜாஜி வீடு?'' - ஊருக்குள் கேட்டோம். ஒரு சிறுவன் வழிகாட்டி அழைத்துப் போகிறான். சுத்துக்கட்டு வீடு என்பார்களே அதுபோல ஒரு வீடு மண் சுவரால் எழுப்பப்பட்டிருக்கிறது. நுழை



தொரப்பள்ளிதான் தொடக்கப்புள்ளி!








வாயிலில் மூதறிஞர் ராஜாஜியின் நினைவு இல்லம் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. நடுவில் வெண்கலத்தினால் ஆன ராஜாஜி சிலை. சிலையைச் சுற்றிலும், அபூர்வப் புகைப்படங்கள். குடும்பம், அரசியல், ஆன்மிகம், சமூகம்... என அவரது சாதனைப் பதிவின் சுவடுகளாக... வீட்டுக்குள் நெல் கொட்டி வைக்கும் 'தொம்பை' ஒன்று இருக்கிறது. அதில்தான் ராஜாஜி தனக்குக் கொடுக்கப்படும் காசுகளைச் சேமித்து வைப்பாராம். படிப்பின் நிமித்தம் ஒசூர் சென்ற ராஜாஜி குடும்பம், ராஜாஜி சேர்மனான பிறகு, சேலத்துக்கு குடிபெயர்ந்திருக்கிறது. அதன் பிறகு ராஜாஜியின் செயல்பாடுகளும், பணிகளும் வரலாற்றுச் சுவடுகளின் பொன்னெழுத்துகள்.

வாசகர் யோசனை : **செல்லம்மாள், ஒசூர்**



நாம் உணவு அருந்துவதற்குச் சரியான காரணம் ஒன்றே ஒன்றுதான். வயிறு பசிக்கிறது என்பதுதான். 'ஏன் சாப்பிடுகிறாய்?' என்ற கேள்விக்கு, ஒருவன், 'இந்த அரிசி மிகவும் மேலான அரிசி. அதற்கு சீரகச் சம்பா என்று பெயர். குருவை, ஒட்டடையன், சிகப்புச் சம்பா, வெள்ளைச் சம்பா, வாடஞ் சம்பா, கொத்தமல்லிச் சம்பா முதலியவைகளைவிட இது உயர்ந்தது. உலக ஆரம்பத்தில், முதல் முதல்



மொழி மோகம்

சிவபெருமானுக்குப் பார்வதி தேவி சமைத்துப் போட்ட அரிசி இதுதான். பார்ப்பதற்கு அழகாகயிருக்கிறது. ஆகையால் சாப்பிடுகிறேன்' என்று சொல்வானாயின், அவனைச் சுத்தப் பைத்தியம் என்று சொல்ல மாட்டோமா? பைத்தியக்காரத்தனம் என்பது மட்டுமல்ல; அதில் அபாயமும் இருக்கிறது. பசிக்காகச் சாப்பிடாமல் ருசிக்காகச் சாப்பிடுபவன் நாவுக்கு அடிமையாகி, உடல் சுகத்தைக் கெடுத்துக்கொள்வான். அதுபோலவே, பாஷைக்கு அதிக முக்கியம் கொடுப்பதனால், அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது.

பாஷைக்கு அடிமைப்படுவதில், தாய் மொழிக்கு அடிமைப்படுவதையாவது ஒருவாறு சகித்துக் கொள்ளலாம். அன்னிய பாஷைக்கு அடிமைப்படுவதை எப்படிச் சகிக்க முடியும்? உள்நாட்டில் உண்டாகும் கோழிமுட்டையின்றி, உயிர் வாழ முடியாதென்று ஒருவன் பிரமை கொண்டிருந்தால், போனால் போகட்டும். ஆனால், அயல்நாட்டு ஒவல்டினுக்கு இவ்வாறு ஒருவன் அடிமையாவதைப் பார்த்துக் கொண்டு எவ்வாறு சகித்திருப்பது? தமிழுக்கு அடிமைப்பட்டவர்களைப் பார்த்து நாம் இரக்கப் படலாம். ஆனால், ஆங்கில மொழியின் அடிமைகளை நினைத்தால், அடிவயிற்றிலிருந்து ஆத்திரந்தான் உண்டாகிறது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்றாக, ஆங்கில பாஷா ஞானத்தைக் குறிப்பிடுவதுண்டு. இதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆங்கில பாஷையிலுள்ள இலக்கியச் செல்வங்களும், பௌதிக ஞானங்களும், அளவிலாத பெருமையுடையவை. அவற்றால் நாம் சிறந்த நன்மையடையக் கூடும். அறிவை பாஷைக்கு அடிமைப் படுத்தி விட்டதன் காரணத்தினால், அந்த நன்மைகளையெல்லாம் நாம் அடையவில்லை. அதற்கு மாறாகத் தீமைகளையே அடைந்திருக்கிறோம்.

'பாஷைக்கு அடிமைகள்'
கட்டுரையிலிருந்து...



கண்ணாமூச்சி
ஆடிய பழக்கம் உண்டா?
அதையே கொஞ்சம்
மாத்தி ஆடுவோமா?

கண்டுபிடிச்சேன்...
கண்டுபிடிச்சேன்...

செந்தமிழ்ப் போட்டி—3

ஒரு பிரபல தமிழ்ப் பாடலின் ஒற்றை ஒரு வரியைத் தேர்வு செய்திருக்கிறோம். அந்த வரியிலிருக்கும் சொற்கள் 6.6.10 தொடங்கி நான்கு வாரங்கள் (27.6.10 இதழ் முடிய) கல்கியில் இடம் பெறும் தலைப்புகளில் கலந்து இடம் பெறுகின்றன. குறிப்புகளைக் கொண்டு ஒவ்வொரு வாரமும் அந்தச் சொற்களைக் கண்டுபிடித்துச் சரியாக வரிசைப்படுத்தி அந்தப் பாடல் வரியைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாகச் சேர்த்து வைத்து நான்காவது வாரம், நாங்கள் தேர்வு செய்து வைத்திருக்கும் அந்தப் பாடல் வரியையும், அதை எழுதியவரின் பெயரையும் குறிப்பிட்டு, உங்கள் புகைப்படத்தோடு சுயமுகவரியுடன் அனுப்பி வைக்க வேண்டும். சரியான விடை எழுதிய 5 நபர்களுக்கு (குலுக்கல் முறையில் தேர்வு செய்து) பரிசு அளிக்கப்படும். வெற்றி பெற்றவர்களைப் புகைப்படத்தோடு அறிவிப்போம். கூடுதலாக, நான்காவது வாரம் இடம் பெறும் படைப்புத்திறன் போட்டியிலும் பங்கேற்று வெற்றி பெறும் ஒரு நபருக்கு லேப் டாப் பரிசு! ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

இந்த வாரக் குறிப்பு :

ஸ்தம்பித்துப் போனேன் என்பதை இப்படியாகவும் சொல்லலாம்!



SRI LAKSHMI SYSTEM PRODUCTS வழங்கும்

லேப் டாப் பரிசு!

அருள்வாக்கு



இரண்டாவது கிடையாது!

ஜலத்துக்கு நிறைவு சமுத்திரம். டம்ளரில், செம்பில், குடத்தில், அண்டாவில், கிணற்றில், குளத்தில், நதியில் என்று ஒன்றைவிட ஒன்று ஜாஸ்தியாக இருக்கிற ஜலம், கடைசியில் சமுத்திரம் என்று முடிகிறது. இப்படியே ஞானத்துக்கும் கிருபைக்கும் நிறைவான சமுத்திரம் பராசக்தி. நமக்குக் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அன்பு இருக்கிறது. பிராணிகளுக்கு நம்மைவிடக் குறைவு. நம்மை விட ஜாஸ்தி அறிவுள்ள, ஜாஸ்தி கிருபா சக்தி உள்ள தேவ ஜாதிகள் இருக்கின்றன. நம்மிலேயே மஹான்களானவர்கள் மகா ஞானிகளாக, பரம காருண்யத்தோடு இருக்கிறார்கள். இந்த ஞானம், கிருபை பூரணமாக நிறைந்த இடத்தைத்தான் ஸ்வாமி, பரமாத்மா, பராசக்தி என்று சொல்கிறோம்.

எல்லாவற்றையும் அறிகிற ஞானம் அது. அறிகிறது மட்டுமில்லை, அறியப் படுகிற எல்லாமுமே அதுதான். அதற்கு வேறாக இன்னொன்று இருந்து, அதை இது அறிகிறது என்றில்லை. அப்படி இன்னொன்று இருப்பதற்கு இடம் இருந்து விட்டால், இது எங்கும் நிறைந்த பூரணம் ஆகாது. இன்னொன்று துளித்துளி இருந்துவிட்டால் கூடச் சரி, இதற்குக் குறைதான் - இது அந்தத் துளியில் இல்லாததால் இது பூரணமில்லை; நிறைந்த ஒரே நிறைவில்லை என்றுதானே அர்த்தம்? இதனால் என்ன முடிவாகிறது என்றால், பரமாத்மாவைத் தவிர அறியப்படுகிற வஸ்து என்று இரண்டாவது பதார்த்தமே கிடையாது.

அப்படியானால், இத்தனை ஜீவாத்மாக்கள் வேறு வேறாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோமே இது என்ன? இது ஒரு பெரிய வேஷம்தான், மாயா நாடகம்தான். வேஷம் கலைந்துவிட்டால், நிறைந்த நிறைவான ஒன்றே ஒன்றுதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



வண்ணநிலவன்



அன்று இரவு, சுசீலா சென்ற பிறகு வீட்டில் யாருமே சரியாகச் சாப்பிடவில்லை. மனமும், உடலும் சோர்ந்து போய், கிருஷ்ணபாரதி வருணின் அருகிலேயே கட்டிலில் படுத்துக் கொண்டான். சிறிது நேரம் வருணுடன் படுத்துக் கொண்டே பேசிக்கொண்டிருந்தான். இடையே மனோகரி அவசர அவசரமாக எழுந்து வந்து சண்முகத்திடம் வருணுக்குக் கொடுக்க வேண்டிய மாத்திரைகளைப் பற்றிக் கேட்டாள்.

''நானே கொடுத்துட்டேன் அம்மா... நீயும் அவனும் ஏன் சாப்பிடாமே இருக்கீங்க? கார்த்திகாவும் சாப்பிடலை போல. மணி ஒன்பதரைக்கு மேலே ஆச்சே...'' என்று வருத்தப்பட்டார் சண்முகம். மனோகரி அவருக்குப் பதில் சொல்லவில்லை. டீ.வி.யில் பி.பி.சி. பார்த்துக்கொண்டிருந்தார் சண்முகம். பாப்பம்மாளும் அவரும் ஹாலில் தான் படுத்துக் கொள்வார்கள். பாப்பம்மாள் ஏற்கெனவே வடக்குப் பக்கமாகப் படுத்து உறங்கிக்கொண்டிருந்தாள். சோபாவை நகர்த்திப் போட்டு, சண்முகம் படுப்பதற்குத் தயாராகப் படுக்கையை விரித்துப் போட்டிருந்தார். தெருவில் ஏதோ ஆட்டோ கர்ணகடூர சத்தத்துடன் போயிற்று.

படித்துக்கொண்டிருந்த புத்தகங்கள் விரித்தபடியே கிடக்க, கார்த்திகா கட்டிலில் கால்களைக் கீழே தொங்கப் போட்ட நிலையில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தாள். குனிந்து கார்த்திகாவை முத்தமிட்டாள் மனோகரி. விரித்துக் கிடந்த பாடப் புத்தகம், நோட்டுக்களை எல்லாம் எடுத்து ஒரு ஓரமாக அடுக்கி வைத்தாள். ''அவ வந்தாலே வீட்டிலே இருக்கிற அருளெல்லாம் போயிருது...''

உள்ளும்

என்று சொல்லிக் கொண்டே கார்த்திகாவை எழுப்பினாள். அவளை மடியில் போட்டுக் கொண்டு கன்னத்தில் தட்டினாள். கார்த்திகாவை எழுப்ப முடியவில்லை. அவளை ஃபேனுக்கு நேரே படுக்க வைத்து விட்டு காம்ப்ளான் போடுவதற்காகச் சமையலறைக்குப் போனாள்.

சமையலறை விளக்கைப் போட்டதும், அடுப்புப் பக்கமிருந்து கரப்பான் ஒன்று ஓடியது. அத்தை எல்லாவற்றையும் ஃப்ரிட்ஜில் எடுத்து வைத்து விட்டுத்தான் படுத்திருக்கிறாள் என்பதைப் பார்த்ததும் மனோகரிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. சமையலறையில் எண்ணெய்ச் சிக்கு வாசனை அடித்தது. அது நிரந்தரமான வாசனை. என்ன கழுவினாலும், ஜன்னல்களைத் திறந்து விட்டாலும், அந்த வாசனை போவதில்லை.

சண்முகம் டீ.வி.யை அணைத்து விட்டுப் படுப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். மனோகரி ஹாலுக்கு வந்தாள். அவரிடம், ''மாமா காம்ப்ளான் குடிக்கிறீங்களா?'' என்று கேட்டாள்.

''இப்போ எதுக்கும்மா காம்ப்ளான்? அதைக் குடிச்சா தூக்கம்

புறமும்



வராது. கிருஷ்ணனும் சாப்பிடலை... நீயும் அவனும் சாப்பிட்டுட்டுப் படுங்க...'' என்றார் சண்முகம். மெதுவாக எழுந்து போய் தெருவிலுள்ள கிரில் கேட், வீட்டுக் கதவு எல்லாவற்றையும் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, ஹால் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தார். வாய் தானாகவே ''சண்முகா...'' என்றது. அவருக்குப் படுத்ததுமே தூக்கம்



வருணுக்கு மாமா மனோகரைப் பார்த்ததும் வலியெல்லாம் காணாமல் போனது மாதிரி இருந்தது.

வந்துவிடும். எங்கோ கொசு ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. அதைக் கேட்டுக் கொண்டே தூங்கிப் போனார்.

வெந்நீர் சுடவைக்கும் போது, கிருஷ்ணபாரதிக்கும் காம்ப்ளான் கொடுக்க வேண்டும் என்றுதான் சுடவைத்தாள். காம்ப்ளானைக் கலந்து கார்த்திகாவுக்கும் கொடுத்து விட்டு, அவளும் குடித்த பிறகு 'அவனுக்கு எதற்குக் கொடுக்க வேண்டும்' என்று தோன்றியது. அவன் மீதிருந்த கோபம் மீண்டும் கனன்றது. அவனுக்கு வைத்திருந்த காம்ப்ளானையும் அவளே குடித்து விட்டுப் பாத்திரங்களை சிங்க்கில் போட்டாள். விளக்கை அணைத்து விட்டுக் கார்த்திகாவினருகே அவளை அணைத்துக் கொண்டு படுத்தாள். நாளை காலை மனோகர் வரப் போகிறான் என்பது நினைவுக்கு வந்ததும், கிருஷ்ணபாரதி மீதிருந்த வெறுப்பு மறைந்து விட்டது.

நெல்லை எக்ஸ்பிரஸ் முப்பது நிமிடம் தாமதமாகத்தான் வந்தது. அது பிப்ரவரி மாதக் கடைசி. வெயில் காலையிலேயே அதிகமாக இருந்தது. மனோகர் இரண்டே இரண்டு நாட்கள்தான் அக்கா வீட்டில் தங்கப் போகிறான். அவனுடைய மொத்த உடைகளும் சிறு ப்ரீப்கேஸில் அடங்கி விட்டன. ஆனால் அம்மா, அக்கா வீட்டுக்கு என்னவெல்லாமோ வாங்கி அவனிடம் கொடுத்து விட்டிருந்தாள். எப்போதோ மனோகரி போனில் கேட்டிருந்த செங்கோட்டை தோசைக் கல், வீட்டில் பின்புறத்தில் காய்த்த யாழ்ப்பாணத்து முருங்கைக் காய்கள், குழந்தைகள் இரண்டு பேருக்கும் ட்ரஸ்கள், இருட்டுக் கடை அல்வா என்று ஒரு பெரிய பையே மனோகரிடம் சேர்ந்திருந்தது.

ஒரு கையில் பெட்டியையும், இன்னொரு கையில் பெரிய பையையும் தூக்கிக் கொண்டு மேம்பாலம் ஏறுவது கஷ்டமாகத்தான் இருந்தது. நல்லவேளையாக, ப்ரீப்கேஸ் அதிகக் கனமில்லை. காலையிலேயே மாம்பலம் டிக்கெட் கவுண்டரில் சிறு க்யூ நின்றது. பழவந்தாங்கலுக்கு டிக்கெட் எடுத்துக் கொண்டு பிளாட்ஃபாரத்தில் இறங்கவும், ரயில் வரவும் சரியாக இருந்தது. ரயிலில் அவ்வளவாகக் கூட்டமில்லை. உட்காரச் சௌகரியமாக இடம் கிடைத்தது.

பழவந்தாங்கலில் இறங்கி, திரும்பவும் ஒரு மேம்பாலம் ஏறி இறங்கி, ஆட்டோ பிடித்து அக்கா வீட்டு வாசலில் வந்து இறங்கும்போது எட்டாக ஐந்து நிமிடமிருந்தது. இரவுத் தூக்கத்தில் அவனுடைய சுருட்டை முடித் தலையெல்லாம் பம்மென்று கலைந்து விரிந்து கிடந்தன. வீட்டில் மனோகரிக்கும் அவனுக்கும்தான்

சுருள்முடி. ரஞ்சனிக்கு அப்பாவுடைய முடி வாகு.

தினசரிகளைப் புரட்டிக் கொண்டிருந்த கிருஷ்ண பாரதிதான் வாசலில் ஆட்டோ நிற்கிற சத்தம் கேட்டு எழுந்து வந்தான். சண்முகம் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். அதுவரை அடிக்கொரு தடவை வாசல் பக்கம் வந்து வந்து பார்த்துவிட்டுப்போன மனோகரி, கார்த்திகாவைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். பாப்பம்மாள் ஹாலில் உட்கார்ந்து காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தாள்.

ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு கிருஷ்ணபாரதியைப் பார்த்துக் கும்பிட்டான். ''சௌக்யமா அத்தான்...'' என்றான். அதற்குள் பின் பக்கமிருந்து சண்முகமும் வந்து விட்டார். அவனைப் பார்த்ததும் தூரத்திலிருந்தே சந்தோஷத்துடன், ''வாங்க... வாங்க...'' என்று வரவேற்றுக் கொண்டே வந்தார். கிருஷ்ணபாரதி அவனிடமிருந்து பையை வாங்கப் போனான்.

''பரவாயில்ல அத்தான்... இருக்கட்டும்...'' என்றான் மனோகர். வலுக்கட்டாயமாகப் பையை வாங்கிக்கொண்டு முன்னால் நடந்தான் கிருஷ்ண பாரதி.

''மாமா, அத்தை, உமா எல் லோரும் சௌக்கியமா?'' என்று கேட்டுக் கொண்டே முன்னால் போனான் கிருஷ்ணபாரதி. பின்னால் ஆட்டோ திரும்பிச் செல்கிற சத்தம் கேட்டது. காய்கறி நறுக்கிக் கொண்டிருந்த பாப்பம்மாள் அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே நலம் விசாரித்தாள். ''உக்காரு மனோகர்...'' என்று அவனை உட்காரச் சொன்னான் கிருஷ்ணபாரதி.

''வருண் எங்கே இருக்கான்?'' என்று கேட்டான் மனோகர். ப்ரீஃப்கேஸை ஒரு ஓரமாக வைத்தான். கிருஷ்ணபாரதி அவனை வருண் படுத்திருந்த அறைக்கு அழைத்துச் சென்றான். வருணுக்கு மாமாவைப் பார்த்ததும் வலியெல்லாம் காணாமல் போன மாதிரி இருந்தது. மனோகரைப் பார்த்துச் சிரித்தான் வருண். கார்த்திகாவும் குளித்துவிட்டு இடுப்பில் மனோகரி கட்டி விட்டிருந்த துண்டுடன் வந்தாள். ''அய்... மாமா...'' என்று ஆச்சரியத்தோடு இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்றாள். மனோகரியும் வந்து விட்டாள்.

பரஸ்பரம் விசாரணைகள் எல்லாம் முடிந்தவுடன், பையிலிருந்த பொருட்களை எடுத்து மனோகரியிடம் கொடுத்தான். அதற்குள் கிருஷ்ணபாரதி குளிக்கச் சென்று விட்டான். சிறிது நேரம் தம்பியிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு மனோகரி தனது வழக்கமான காலைப் பரபரப்புகளில் மூழ்கினாள். கிருஷ்ணபாரதி குளித்து விட்டு வந்த பிறகு



இளவரசர் குருகுலத்தில் குருவை ஏமாற்றிவிட்டு வகுப்பை கட் அடித்துவிட்டு, நண்பர்களுடன் வெளியே செல்கிறார் என புகார் வந்துள்ளது மன்னா...''

''அப்படியா...?''

''ஆமாம்... அவர் 'கற்றலை' விட 'சுற்றல்'தான் அதிகம் என்கிறார்கள்...''

-கே.ஆனந்தன்

மனோகர் குளிக்கச் சென்றான். இடையே அத்தானிடம் தன்னுடைய ஆஃபீஸ் வேலையைப் பற்றிச் சொன்னான். ஹைகோர்ட் வரை போக வேண்டும் என்றான். எல்லோருமே பரபரவென்று இயங்கினார்கள்.

வீட்டை விட்டு முதலில் கிளம்பியது கார்த்திகாதான். பள்ளிக்கூட ரிக்ஷா வந்ததும், ரெடியாக இருந்த கார்த்திகா அதில் ஏறிப் பள்ளிக்கூடத்துக்குப் போனாள். சண்முகம், கிருஷ்ணபாரதி, மனோகர் மூன்று பேருமே ஒன்றாக



"நானும் மனோகரியும் பைக்லே போறோம். நீ ஆட்டோலப் போ!"

உட்கார்ந்து சாப்பிட்டார்கள். மனோகரி தம்பியிடம்தான் அவ்வப்போது பேசினாளே தவிர, கிருஷ்ணபாரதியிடம் பேசவில்லை. பரிமாறும்போது மட்டும் அவனிடம், ''இன்னொரு இட்லி போடட்டுமா'' என்று கேட்டாள்.

மனோகரி சாப்பிட்டு விட்டு டிஃபன் பாக்ஸையும் நிரப்பிக் கொண்டாள். கிருஷ்ணபாரதி மனோகரியை அழைத்துச் செல்வதற்காகத் தயாராக இருந்தான். பாப்பம்மாள் வருணுக்கு இட்லி ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

''டேய் மனோகர்... நீ உங்க ஆஃபீஸ் வேலை முடிஞ்சதும் நேரே எங்க ஆஃபீஸுக்கு வந்துரேன். என்னோட ஆஃபீஸ்லே சேர்ந்து சாப்பிடலாம். ஒனக்கும் சேர்த்துச் சாப்பாடு எடுத்துக்கிறேன்...'' என்றாள் மனோகரி.

''இல்லக்கா... கோர்ட்லே எப்போ வேலை முடியும்னு சொல்ல முடியாது. நான் வெளியிலேயே பார்த்துக்கிடுதேன்...'' என்றான் மனோகர்.

மனோகரிடம் தனியாகப் பேசுவதற்கு அவளுக்கு எவ்வளவோ விஷயங்கள் இருந்தன. மத்தியானம் லஞ்ச் டயத்தில் ஆஃபீஸுக்கு வந்தால், அவனிடம் பேசலாம் என்று நினைத்தாள் மனோகரி. ஆனால் இவன் வெளியே சாப்பிட்டுக் கொள்கிறேன் என்கிறானே? சட்டென்று மனோகரிக்கு ஒரு யோசனை தோன்றியது.

''சரி... அப்போ வேலையெல்லாம் முடிச்சிட்டு எங்க ஆஃபீஸ் பக்கம் வா... சாயந்திரம் ரெண்டு பேரும் சேர்ந்தே வந்திரலாம்...'' என்றாள் மனோகரி.

''சரிக்கா...'' என்றான் மனோகர். ஆஃபீஸ் வேலை சம்பந்தப்பட்ட பேப்பர்களை எடுத்துக் கொண்டான். மனோகரியும் தன் ஹேண்ட் பேக், சாப்பாட்டுப் பை இரண்டையும் எடுத்துக் கொண்டாள்.

''நானும் அக்காவும் பைக்லே போறோம்... போற வழியிலே ஆட்டோ ஸ்டாண்டிலே சொல்லிட்டுப் போறேன். நீ ஆட்டோவிலே ஸ்டேஷனுக்குப் போயிரு...'' என்றான் கிருஷ்ணபாரதி.

கால்களில் செருப்பை மாட்டிக் கொண்டு கிருஷ்ணபாரதியைப் பார்க்காமலேயே, ''நானும் அவனும் ஆட்டோவிலே வர்றோம்... நீங்க பைக்லே கிளம்புங்க...'' என்று சொல்லிவிட்டு மனோகரிடம் ''வாடா... ஆட்டோவிலே போயிரலாம்...'' என்றாள் மனோகரி.

(தொடரும்)

இரா.எட்வின்

கிராமத்தின் ருசி!

"ருசி என்பது பண்டத்தில் மட்டுமல்ல ருசிக்கும் நாக்கின் தன்மையிலும்தானே இருக்கிறது" என்கிறார் பாரதி பாலன் முன்னுரையில். படைப்பாளி மற்றும் படைப்போடு வாசகனும் சேர்ந்தே ஒரு படைப்பின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கிறான் என்கிற சரியான புரிதலோடுதான் இந்த புதினத்தை அவர் நெய்திருக்கிறார். வாசிக்கும் ஒவ்வொருவரும் புதினத்தில் வரும் ஏதோ ஒரு பாத்திரத்தோடு பொருந்திப் போவதே இதன் விளைவுதான்.

இந்தப் புதினத்தின் மையம் எதைச் சுற்றி?

கோவிந்து பஞ்சவர்ணம் காதலைச் சுற்றியா? குடியானத் தெருவுக்கும் வடக்குத் தெருவுக்கும் இடையே பேயாட்டம் போடும் சாதி மோதலைச் சுற்றியா? என்றால் இந்தப் புதினம் தனித்த எது குறித்தும் பேசவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தின் சீலையம்பட்டி கிராமத்தின் ஒட்டுமொத்த வாழ்க்கைப் பதிவாகவே இந்தப் புதினத்தைப் பார்க்க முடிகிறது.

கொல்லப்பட்ட கோவிந்துவின் அண்ணன் ஜெயபாலின் உடல் ஊருக்குள் கொண்டு வரப்பட்டபோது, "எவன் அடிச்சானோ அவன் சங்க நெறிச்சுக் கொல்லுங்கப்பா. நான் கண்ணுல கண்டேன் வெளெக்க மாத்துக் கட்டையைக் கொண்டே அவன் கொண்டு போடுவேன்" என்று கொந்தளித்துப் பொங்கிய முத்தம்மாவை,

"ஏ முத்தம்மா நீ சித்த சும்மா இருடி. ஆம்பளையாளுகப் பேசிக்கட்டும்" என்று அடக்கிய குரலில் மட்டுமல்ல, "நம்ம ஊர்ல ஆம்பளை ஆளுகளும் இருக்காங்களாக்கும்" என்ற முத்தம்மாவின் பதிலும் கூட கிராமத்து ஆணாதிக்கத்தின் முகவரிதான்


"மண்ட கொல்லப் பக்கமா வா சாப்டுட்டுப் போவ" (பக்கம் 58) என்று கோவிந்துவின் அம்மா அவரை அழைப்பது கிராமத்து சாதியத்தைத் தோலுரித்துச் சொல்லும்.

"தூண்டிகள் சாம்பலாவதில்லை திரிகள்தான்"

இதை நன்கு உணர்ந்த நல்லவர்கள் குடியானத் தெருவிலும் வடக்குத் தெருவிலும் இருக்கவே செய்கிறார்கள் என்பது எல்லா கிராமங்களிலும் விரவி கிடக்கும் எதார்த்தம்.

எவனோ உசுப்பி விட நரம்பு புடைத்து யோசிக்காமல் உணர்ச்சி வசப் பட்ட நிலையில் எதையோ செய்து விட்டு நாயாய் பேயாய் பொழப்பைக் கெடுத்துக்கொண்டு நீதிமன்றம் அலையும் இளைஞர்களை நிறைய ஊர்களில் பார்க்க முடியும்.





"இந்த நாவலை எங்கு தொடங்க வேண்டுமோ அங்கு தொடங்கவில்லை, முடியும் அப்படித்தான்" என்கிறார் பாரதிபாலன்.

ஆனால் சரியான இடத்தில் தொடங்கி... சரியாய் முடித்திருக்கிறார்.

கிருஷ்ணகிரியிலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் தேவசமுத்திரம் கிராமம். அதன் முகப்பில் தோரணம் கட்டி வரவேற்கிறது காட்டு வீர ஆஞ்சநேயர் கோயில். கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முக்கியமான வழிபாட்டு ஸ்தலம்.

கோயிலைச் சுற்றி ஒரு சுற்றுச்சுவர். ஊரிலிருந்து கோயிலுக்கு வர ஒரு பாதை அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் கடந்து சென்றால், மலைக் குன்றில் இராமநாமக் குறியீடுகள். மூலவர் காட்டு வீர ஆஞ்சநேயருக்கு எனக் கோயில் மத்தியில் தனி சன்னிதி. கருவறைக் கோபுரம். அருகே மகாலெட்சுமி தாயாருக்கென ஒரு சன்னிதி. இந்த இரு சன்னிதிகளும் ஒரு பெரிய மண்டபத்தில் அமைந்துள்ளன. குறைந்தபட்சம் முந்நூறு பக்தர்கள் கூடி ஒரே நேரத்தில் வழிபாடு செய்யலாம்.



மூலவர் சன்னிதிக்கு வலதுபுறம் வெளியே ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமியின் வண்ண ஓவியம், அதனையொட்டி ஒரு மாடத்தில் யோக நரசிம்மர். மாடத்துக்கு மேலே சன்னிதியின் மதிலையொட்டிக் கால பைரவர் காட்சியளிக்கிறார். மூலவர் சன்னிதி இடபுறம் ஒரு பெரிய உருண்டைப் பாறையின் மீது வளரும் நந்தி. இந்த நந்தி தினசரி வளர்ந்து வருவதாக ஐதிகம். அதனால் மண்டபத்தைச் சற்று உயர்த்திக் கட்டியுள்ளனர். கோயிலின் பின்புறம் நாகர் கற்கள் பல அமைந்துள்ள மேடை ஒன்று.

பதினைந்து வருடங்களுக்கு முன்பாக, திருவண்ணாமலையிலிருந்து சித்தர் ஒருவர் இக்கோயிலுக்கு வந்துள்ளார். கோயிலின் மறைந்திருந்த ஒரு மகத்து வத்தை அவரே வெளிப்படுத்தியுள்ளார். மூன்று மாதங்களுக்குள் வேண்டுதல்கள் நிறைவேறும்!'' என்று அருள்வாக்காய் மொழிந்துள்ளார்.

கோயில் சன்னிதியின் பெரிய மண்டபம் எதிரே, பிரார்த்தனை மண்டபம் ஒன்றும் பெரிதாகக் கட்டப்பட்டது. தற்போது அதில் வரிசை கட்டி தொங்க விடப்பட்டுள்ளன பிரார்த்தனைப் பைகள். பக்தர்களின் பிரார்த்தனைப் பைகள் ஒவ்வொன்றுக்கும் வரிசை எண் தரப்பட்டுள்ளது. பிரார்த்தனை நிறைவேறியவர்கள் கோயிலுக்கு வந்து, தங்கள் பையைப் பெற்றுக் கொள்வார்கள்.

அதன் உள்ளே, உரிமட்டையுடன் முழுத் தேங்காய் இருக்கும். அதனை உரித்தெடுத்து அந்தத் தேங்காயினை பூஜைக்குப் பயன்படுத்தி, பிரசாதமாக வீட்டுக்குக் கொண்டு செல்கின்றனர்.





பிரார்த்தனை!

''இந்தக் கோயில் அரியும் சிவனும் ஒண்ணு எனும் தத்துவத்தை உணர்த்தும் கோயில் ஆகும். இங்கு அரியின் பிரதிநிதியாக மூலவர் ஆஞ்சநேயர். சிவனின் பிரதிநிதி யாக நாளும் வளரும் நந்தி சிற்பமாக உருட்டுப் பாறை மீது. இங்கே முழுத் தேங்காயைக் காணிக்கையாகச் செலுத்தி வேண்டுதல் செய்பவர்களுக்கு, மூன்று நாள் அல்லது மூன்று வாரம் அல்லது கோயிலின் பிரார்த்தனை மண்டபத்தில் பிரார்த்தனைப் பைகள் குவிவதும், வேண்டுதல் நிறைவேறிய பைகள் பூஜைக்குப் பிரிக்கப்படுவதுமாகத் தொடர் இயக்கமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறார் காட்டு வீர ஆஞ்சநேயர்!

வாசகர் யோசனை:
ப.கோபி, கிருஷ்ணகிரி

13.06.2010 முதல் 19.06.2010 வரை

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்



மேஷம்: எதிர்பார்க்கும் காரியம் வெற்றிபெறும். பணப்பிரச்னைகள் தீரும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். திடீர் பணவரவு உண்டு. குடும்ப வாழ்வில் குதூகலம் கூடும். குரு வழிபாடு செய்துவர நற்பலன்கள் மிகுதியாகும். மொத்தத்தில் மகிழ்ச்சியான வாரம்.

ரிஷபம்: இல்லற வாழ்வில் அனுச ரணை தேவை. வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். தொழில் துறையில் முன்னேற்றமுண்டு. நெருங்கிய கூட்டாளிகளை விட்டுப் பிரிய நேரிடும். கடன் சுமை குறையும். வம்பு வழக்குகள் முடிவுக்கு வரும். விவாதங்களைத் தவிர்க்கவும். ராகு/கேது வழிபாடு செய்து வரச் சங்கடம் தீரும். மொத்தத்தில் சுமாரான வாரம்.

மிதுனம்: மனசுக்குப் பிடித்த சம்பவங்கள் நடக்கும். நீண்ட தூரப் பயணம் தேடி வரும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சு பலன் அளிக்கும். நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். புதிய துறைகளில் ஈடுபட்டு ஏற்றம் காணலாம். வீடு/மனை வாங்க உகந்த நேரம். வியாபாரம் செழிக்கும். மொத்தத்தில் உற்சாகமான வாரம்.

கடகம்: உல்லாசப் பயணம் செல்வீர்கள். பணி உயர்வு உண்டு. வியாபாரத்தில் வருவாய் கிட்டும். வாகன வசதி ஏற்படும். கடல் கடந்த மனிதர்களிடமிருந்து நல்ல சேதி வரும். கோர்ட் வழக்கு வெற்றி பெறும். குடும்பத்தில் மகிழ்வு பொங்கும். மொத்தத்தில் வெற்றிகரமான வாரம்.

சிம்மம்: வாக்கு வன்மை மேலாகும். திடீர்ப் பயணம் உண்டு. பணப்பிரச்னை இருக்காது. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். சுபச்செலவுகள் மகிழ்வளிக்கும். பூர்விகச் சொத்து விற்பனையாகும். புதிய சொத்து வாங்க வாய்ப்புண்டு. நண்பர்கள் விலகிடலாம். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலன்களைத் தரும்.

கன்னி: சுபகாரியத் தடைகள் விலகித் திருமணம் கூடி வரும். எதிர்ப்புகள் விலகும். கடன் பிரச்னைகள் தீரும். இருந்து வந்த உத்தியோகப் பிரச்னைகள் தீர்ந்து சுமுகமாகும். நீண்ட காலமாக வராத நிலுவைகள் வந்து சேரும். ஆஞ்சநேயரைத் தவறாது வழிபட்டால், நலன்கள் பெருகும். மொத்தத்தில் சஞ்சலங்கள் தீரும் வாரம்.

துலாம்: புதிய முதலீடுகள் செய்ய நல்ல நேரம். வீடு, மனை, வழக்கு ஆதாயம் கிட்டும். கடன் சுமை தீரும். சுபகாரியம் கைகூடும். தொழில் துறையில் நல்ல வருவாய் வரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும். சனிபகவானை வழிபட்டு வர, நற்பலன் அதிகரிக்கும். மொத்தத்தில் மனநிறைவான வாரம்.

விருச்சிகம்: கூட்டாளிகள் விலகுவர். பேச்சில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போதும் எச்சரிக்கை வேண்டும். மறைமுக விரோதத் தொல்லை உண்டு. வேலைப்பளு அதிக மாகும். சிலருக்கு பணிமாறுதல் ஏற்படும். ராகு/கேது வழிபாடு நல்லது. மொத்தத்தில் உஷாராக இருக்க வேண்டிய வாரம்.

தனுசு: வீடு மாற்றம் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். கடன் தொல்லை நீங்கும். எதிரிகள் விலகிப் போவார்கள். இல்லற வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும். பணவரவு பெருகிடும். திடீர் தனயோகம் சித்திக்கும். மொத்தத்தில் இனிமையான வாரம்.

மகரம்: திடீர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். மனத்தில் நினைக்கும் காரியம் கூடிவரும். பணப்பிரச்னை இருக்காது. கடன் சுமை தீரும். சிலருக்கு பூமி வாங்கும் யோகம் உண்டு. வியாபாம் வெற்றி பெறும். நண்பர்கள், உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். மொத்தத்தில் வெற்றி கள் வலம் வரும் வாரம்.

கும்பம்: திருமணத் தடைகள் விலகிடும். கொடுக்கல் - வாங்கல் சிக்கல் தீரும். கடன் சுமைகள் தீரும். உத்தியோகச் சிக்கல் தீரும். பணம் வரும் வாய்ப்புண்டு. சனி பகவான் வழிபாடு நன்மை தரும். மொத்தத்தில் முயற்சிகள் வெற்றியாகும் வாரம்.

மீனம்: கடன் பிரச்னைகள் தீரும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். புதிய வீடு/மனை வாங்கும் யோகம் வரும். திடீர் தனயோகம் வரும் வாய்ப்புண்டு. நீண்ட தூரப் பிரயாணம் உண்டு. ராகு/கேது வழிபாடு நற்பலன்களை அளிக்கும். மொத்தத்தில் மகிழ்ச்சி ததும்பும் வாரம்.



ச.ந.கண்ணன்

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு இது சிக்கலான தருணம். ஐ.பி.எல். குழப்பங்கள் நீடித்து வரும் வேளையில், மறுபக்கம் இந்திய வீரர்களின் ஆட்டம் தொடர்ந்து மோசமாகிக்கொண்டு வருகிறது. எனவே, இந்திய அணியின் எதிர்காலமும் இப்போது கேள்விக்குறியாகியிருக்கிறது.

ஐ.பி.எல்-ஐ விட்டுவிடுவோம். கிரிக்கெட்டைத் தாண்டிய பல சர்ச்சைகள் அதில் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த்தின் அத்தனை காய் நகர்த்தல்களும் தோல்வியில் முடிவதுதான் தீவிரமாகப் பரிசீலிக்கவேண்டியது. முக்கிய வீரர்களுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, இளம் குருத்துகளை ஜிம்பாப்வேவுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அங்கு நடந்தது என்ன? ரோஹித் சர்மாவும் கோலியும்தான் ரன்கள் எடுத்தார்கள். புதிய வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர்கூட எடுபடவில்லை. கிளம்பிச் சென்ற 11 பேரும் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு நாடு திரும்பினால், அந்த அணியின் எதிர்காலம் மிகவும் ஆபத்தான கட்டத்தை நோக்கி நகர்கிறது என்றுதானே அர்த்தம்.



சென்ற வருடம் நெஹ்ராவை மீட்டுத் தந்தது ஐ.பி.எல். ஆனால், இந்தமுறை அதே ஐ.பி.எல் தான் முரளி விஜய்யைத் தவறாகப் பிரதிபலித்துவிட்டது. ஐ.பி.எல்-ல் விஜய்யின் அதிரடி ஆட்டத்தைப் பார்த்து ஷேவாக்குக்கு மாற்று கிடைத்துவிட்டார் என்றுதான் பலரும் நம்பி மோசம் போனார்கள், ஸ்ரீகாந்தைப் போலவே. ஆனால் 20-20 உலகக்கோப்பை, ஜிம்பாப்வே தொடர் என இரண்டு போட்டிகளிலும் கிடைத்த அத்தனை


வாய்ப்புகளையும் வீணடித்துவிட்டார் விஜய். விஜய்யின் ஆட்டத்தில் மட்டுமா தவறு? அணியின் அத்தனை உத்திகளும் ஜிம்பாப்வேயில் பல்லிளித்தது. தினேஷ் கார்த்திக் தொடக்க ஆட்டக்காரராக ஆடவேண்டியவரில்லை. ரைனா மூன்றாவதாகக் களம் இறங்கியிருக்கவேண்டும். யூசுப் பதான் அல்லது ரவீந்தர ஜடேஜா இருவரில் ஒருவர் அணியில் இடம்பெற்றால் போதும். ஆனால் இந்த யோசனைகள் எதுவும் இல்லாமல், குருட்டாம்போக்கில் ஆடித் தோல்வி கண்டது இந்திய அணி. மேலும் வீரர்களின் ஆட்டத்திலும் அணிக்கான நலன் தென்படவில்லை. சுயநலத்துடன் மிகப்பொறுமையாகவே ஆடினார்கள்.

இந்த விஷயத்திலும் ஆஸ்திரேலிய அணியே மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கிறது. சென்ற வருடம், ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது, அந்த அணியில் இருந்த பாதிபேர் புதியவர்கள். ஆனாலும் ரிக்கி பாண்டிங் அந்தப் புதியவர்களைக் கொண்டுதான் ஒருநாள் தொடரை வென்று காட்டினார். இறுதியாக, 'என் வெற்றிகளிலேயே மறக்கமுடியாத வெற்றி இதுதான்' என்றார். ஆனால் நம்மால்தான் ஒரு திறமையான வீரரைக் கண்டடைய பிராப்தம் இல்லாமல் போய்விடுகிறது. ஜிம்பாப்வே சென்ற புதிய வீரர்களிடம் மேலான திறமைகளும் ஆட்ட நுணுக்கங்களும் தென்படவில்லை. இளம் தலைமுறை வீரர்கள் முழுக்க இப்படியிருப்பது இந்திய அணியின் வருங்காலத்துக்கு நல்லதல்ல.

ரஞ்சி போட்டியின் தரத்தையே இந்த இளம் வீரர்கள் பிரதிபலிக்கிறார்கள். மோசமான பிட்சுகளில் ரஞ்சி ஆட்டங்கள் நடைபெறுவதால், பந்து வீச்சாளர்களால் தங்கள் முழுத் திறமையை வெளிக்கொணர முடிவதில்லை. கடந்த ஐந்து வருடங்களில் இந்திய அணியில் ஒரு உருப்படியான வேகப்பந்து வீச்சாளர்கூட முளைக்கவில்லை என்பதே இதற்குச் சான்று.







மீசை வணிகம்

விநோதகனாய்த் தெரியும் ஒருவன்
நகரத்தின் சந்தடி மிகுந்த சதுக்கங்களில் நின்று
தன் கைவசமிருக்கும் மீசைகளை விற்றுவிட்டுப்போகக் காத்திருக்கிறான்
வேறொரு நகரத்தில் நேற்றிருந்தது போலவே

அவனுக்குத் தெரியும் அவனது வாடிக்கையாளர்கள் யாரென்று
மீசையின் மகிமையை அறிந்த அவர்கள்
நகரத்தின் இண்டு இடுக்குகளிலிருந்து கரப்பானைப்போல
வெளிப்படுவார்கள்
இருட்டத் தொடங்கியதும்

நூறுமீசைகளை வைத்துப் பார்த்து ஒன்றைத் தேர்வுசெய்கிறவராய்
அவனது வாடிக்கையாளர் ஒருபோதும் இருப்பதில்லை
கஞ்சாப்பொட்டலம் கைமாறும் லாகவத்துடன்
முகமேற்றி அனுப்பிவிடுவான் மீசைகளை

வேண்டாமென யாரோ மழித்தெறிந்த வெறும் மயிர்களைக்கொண்டு
அவன் படைத்தனுப்பும் புதிய ஆண்கள்
அந்த நொடியிலிருந்தே மீசையை முறுக்கி
வீரத்தையும் அதிகாரத்தையும் ஆண்மையையும் வெளிப்படுத்துவார்கள்
தங்களது ஒட்டுமீசை விழுந்துவிடக்கூடாதென்ற பயத்தோடு

ஆதவன் தீட்சண்யா கவிதைகள்



இவர் த.மு.எ.க. சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர். இதுவரை 'புறத்திலிருந்து', 'பூஜ்ஜியத்திலிருந்து துவங்கும் ஆட்டம்', 'நந்துகி' என்ற மூன்று கவிதைத் தொகுப்புகளைத் தந்திருக்கிறார். தற்போது வசிப்பது ஓசூரில். பி.எஸ்.என்.எல். அலுவலகத்தில் வேலை. சொந்த ஊர் தருமபுரி மாவட்டம் அமமேதுபுரம்.

சாத்தான் ஓதும் வேதம்



கூரையில் வைக்கப்பட்ட தீ
திகுதிகுவெனப் பரவி எரித்துக்கொண்டிருக்கிறது
என்வீட்டை

தசை கருகும் நெடியில் வெளி திணறுகிறது
தணலில் வெந்து கொண்டிருப்பது
படுக்கையாய்க் கிடந்த என்தாயாகவோ
நிறைசூலியான எனது மனைவியாகவோ இருக்கலாம்

நாங்கள் சேமித்துவைத்திருந்த விதைதானியங்கள்
வெடித்துத் தெறிக்கின்றன சோளப்பொரியைப்போல

என் அண்டைவீட்டார்
நீரையிறைத்துக் கொண்டிருக்கின்றனர்
முன்ஜாக்கிரதையோடு
தத்தமது கூரைமீது

எவர்மீதும் சேதாரத்தை விசிறாமல்
தனக்குத்தானே குமைந்திறங்குகிறது சாம்பலாய் என்வீடு

யார்மனதும் தொந்தரவுக்காளாகாத வண்ணம்
இதுகுறித்த புகாரினை வெளிப்படுத்துவது எங்ஙனமென
ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறான்.



கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

விருதுநகர் மாவட்ட வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...



- உடனடித் தேவை?
- உங்கள் ஊர்ப் பெருமை?
- வாட்டம் தரும் வேதனை?
- அமைதி தரும் ஆலயங்கள்?
- பெருமைப்பட வைக்கும் தலைவர்கள்?
- மனசைச் சுத்திகரிக்கும் டூரிஸ்ட் ஸ்பாட்?
- கலை இலக்கியத்தில் உங்க மாவட்டத்தின் பங்களிப்பு?
- அடிப்படைத் தேவைகள் நிறைவேறிடுச்சா... இல்லையா?

வாசகர்களே...



உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கு!

விருதுநகர் மாவட்ட வாசகர்களே...

கெட் ரெடி! கெட் ரெடின்னேன்!

ஆமாம்! உங்கள் விருதுநகர் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனிக் கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- விருதுநகர் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு, கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 18.06.2010

கலக்க வருதுப்பா கல்கி
விருதுநகர் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடுறோம்!

கிருஷ்ணகிரியிலிருந்து பதினைந்து கி.மீ. தூரம். எதிர்ப்படும் நபரிடம் 'ஈமக்கல் திட்டை' எங்கிருக்கு என விசாரிக்கிறோம். ''இன்னும் நாலைந்து கி.மீ. தாண்டிப் போங்க. பீர்பல்லி, மல்லசந்திரம்னு கிராமங்கள் வரும். உயர உயரக் கல் மலைகள் தென்படும். மேல ஏறிப் பாருங்க!''

மல்லசந்திரம் கிராம ஊர் எல்லை முகப்பில் முதல் 'கொட்டாய்' முன்பாக, கார் கிறீச்சிட்டு நின்றது. திண்ணையில் அமர்ந்திருந்த தொப்பி இளைஞர் அண்ணாமலையை, வழித்துணைக்காக உடன் அழைத்துக் கொண்டோம். கல் மலையின் உச்சியை அடைந்தோம். காணக் கிடைக்காத காட்சிகள். அபூர்வமான வடிவத்தில் கற்பலகைக் குடில்கள். ''இதெல்லாம் வேறொன்றுமில்லே சார். பஞ்ச பாண்டவர்கள் குடியிருந்த கல் வீடுகள். பத்தாயிரம் வருஷத்துக்கும் முற்பட்டதுங்க இந்தக் கல் திட்டை.



● அண்ணாமலை

ஃபாரின்லேர்ந்தெல்லாம் வந்து பார்த்துட்டுப் போனாங்க.'' போகின்ற போக்கில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் வழித்துணையாய் வந்திருந்த அண்ணாமலை.

நாம் ஏறி நின்றிருந்த கல் மலையில், இருபதுக்கும் மேற்பட்ட கல் வீடுகள். செங்குத்தாக நாற்புறமும் கல் பலகைகள். அதன் மேலே உத்தரம் போலப் படுக்கை வாக்கில் ஒரு கல் பலகை. ஆக மேலேயும் அடைப்பு. நாலாபுறமும் அடைப்பு. அதில் கிழக்கு திசை நோக்கிய செங்குத்தான கல் பலகையின் மையப் பகுதியில், பெரிதாக வட்ட வடிவத்தில் மிகப்பெரிய துளை. இதுதான் அந்தக் கல் வீடுகளின் அமைப்பு.

''இவை பாண்டவர்கள் குடியிருந்த கல் வீடுகளா?'' தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களின் தொல்லியல் துறை அதிகாரி முனைவர் தி.சுப்பிரமணியனிடம் கேட்டோம்.

''பாண்டவர்கள் குடியிருந்த

தொலைந்து போகும்



கல் வீடுகள் அல்ல அவை. மாண்டவர் குழி என பழங்காலத்துல குறிப்பிடப்பட்டதே, பிற்காலத்துல 'பாண்டவர் குடி'னு மாறிப் போச்சு. தொல்லியல் துறை ஆய்வுகளின்படி, அவை யாரும் வாழ்ந்த வீடுகள் அல்ல. ஈமக்கல் திட்டைகள். பெருங்கற்கால ஈமச் சின்னங்கள். ஆய்வுகளின் அடிப்படையில், சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை'' என்று ஆசுவாசப்படுத்துகிறார்.

''பழங்குடி மலைவாழ் இன மக்கள், இறந்தவர்களைப் புதைக்கும் நான்கு வகைகளில் இதுவும் ஒன்று.

கிழக்கு நோக்கிய கல் பலகைச் சுவரில் வட்ட வடிவப் பெரிய துளை. அதற்கு இடு துளை எனப் பெயர். எதற்கு இந்த இடுதுளை? இறந்தவர்களின் ஆவி உள்ளேயிருந்து வெளியே போவதற்கும், வெளியே சென்று விட்டு உள்ளே திரும்புவதற்குமான வழியே அந்த இடுதுளை. உடல் அழியக் கூடியது. ஆவி அழியாதது என்கிற நம்பிக்கை, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் மத்தியில் நிலவியுள்ளது.

இதுபோன்ற ஈமக்கல் திட்டைகள் தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லசந்திரம், பீர்பல்லி, மகாராஜாகடை, வரவணகுண்டா, செல்ல சந்திரம், தளி போன்ற பகுதிகளில் ஏராளம். கர்நாடகாவின் கோலார், ஆந்திராவின் சித்தூர் போன்ற பகுதிகளிலும் ஈமக்கல் திட்டைகள் உள்ளன.

இதுபோன்ற திட்டைகள் நம் நாட்டில் மட்டுமில்லை. மேல் நாடுகளிலும் உள்ளன. இவை பற்றி விரிவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மனியில் வாழ்ந்த மானிடவியல் ஆய்வாளர் ஃப்ரேசர் என்பவர் பன்னிரண்டு வால்யூம் புத்தகங்களை எழுதிக் குவித்துள்ளார்!'' என்கிறார் சுப்ரமணியன். நாம் நேரில் பார்த்த ஈமக்கல் திட்டைகள் பலவற்றில், கல் பலகைகள் சரிந்தும் சிதைந்தும், சீர்குலைந்தும் காணப்படுகின்றன. காக்கப்படுமா? இந்தத் தொல்லியல் சின்னங்கள்?

வாசகர் யோசனை :
இரா.கணேசன், சேலம்

தொன்மங்கள்!



வாவ் வாசகர்



தாய் வீடு கோகுலம்; வசிக்கும் வீடு கல்கி..!

''**கோ**குலத்துலதான் என்னோட முதல் வாசகர் கடிதம் பிரசுரமாச்சு. அப்ப நான் ப்ளஸ் ஒன் ஸ்டுடண்ட். ரெண்டு வருஷம் கழிச்சு கல்கி படிக்க ஆரம்பிச்சேன். 1987ல் கல்கியில என்னோட முதல் வாசகர் கடிதம். தாய்வீடு கோகுலம்; வசிக்கும் வீடு கல்கி. கல்கி, கோகுலம், மத்த பத்திரிகைகள்னு இதுவரைக்கும் சுமார் ஐந்தாயிரம் கடிதங்களுக்கும் மேலாகப் பிரசுரம் ஆகியிருக்கும். இதுவரைக்கும் மூணு ஆல்பங்கள்ல ஒட்டி முடிச்சிருக்கு. என்னோட வாசகர் கடிதப் பகுதியினை வெட்டி எடுத்து ஒட்டி வைக்கிறதுல இப்ப நாலாவது ஆல்பம், ஒட்டிக்கிட்டிருக்கேன்'' என்கிற ஊத்தங்கரை கோவிந்தசாமியின் கண்களில் பெருமிதம்!

''கல்கியைப் பிரிச்சதும், மொதல்ல நா படிக்கறது தராசு கேள்வி-பதில் பகுதி. அதுல பிரசுரமாகுற போட்டோவுக்குக் கீழே கொடுக்குற கமெண்ட்... நல்ல சுறுசுறு. சூப்பர் நச். அந்தப் பகுதியில பரிசு பெறும் வாசகர்களின் பெயர், முகவரிகளை முன்பு முழுசாப் போட்டாங்க. இப்ப பேரு ஊரு மட்டும்தான் போடுறாங்க. அந்த வாசகரோட முழு முகவரியை வெளியிட்டால், மத்த நபர்கள் குறிப்பிட்ட வாசகரோடு, நட்பு தோழமை ஏற்படுத்திக்க முடியும். தொடர்கள்ல வாமனதேசங்கள் ரியலி டாப். 'வாரே... வாவ்... வாமனதேசங்கள்' என்று உரத்துக் கூற வைக்கின்ற என் மகள்கள் இருவரையும், கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராக இணைத்துள்ளேன்!'' என்று சொல்லும் ஊத்தங்கரை கோவிந்தசாமி இருபத்தைந்து வருடங்களாகக் கல்கி வாசகர். அரூர் மின் வாரிய அலுவலகத்தில் வணிக ஆய்வாளர் பணி. வார இதழ்கள் வாசிப்பது, ஓய்வு நேரப் பொழுதுபோக்கு. மனைவி மலர்விழி. இரண்டு மகள்கள். ரம்யாஸ்ரீ, நித்யாஸ்ரீ.

மின்சாரப் பூங்கா!



தூரத்துலேர்ந்து பார்க்கும்போது, ராட்சத உயர மின் கம்பங்கள். பக்கத்துல நெருங்கிப் போனா, அது உள்ளே அச்சு அசலா, அதுவும் அசத்தலா ஒரு பூங்கா. நாம வந்து நிக்குறது துணை மின் நிலையமா? மூலிகைச் செடிகள், பூக்கள் நிறைந்த பூங்காவா? நம் கண்கள் நம்ப மறுக்கின்றன.

தமிழகத்திலேயே மிகச் சிறந்த துணை மின் நிலையமாக, அடையாளம் காட்டப்பட்டு வருகிறது அதியமான் கோட்டை துணை மின் நிலையம். உள்ளே சென்று பார்த்தால், இயற்கை எழில் அத்தனை கொஞ்சுகிறது. அலுவலக அறைகளின் சுவர்களில் அற்புதமான வாசகங்கள் 'கையுறை போட்டு காலனை ஓட்டு', 'இடுப்புக் கயிறே இணையற்ற நண்பன்', 'வேலையில் விழிப்பு வாழ்க்கையில் செழிப்பு', 'எர்த்ராடுகள் எமனையும் வெல்லும்', 'மின்சாரச் செழுமை நாட்டின் வளமை' இப்படி..... இப்படி....

இருபத்தைந்து வகை மூலிகைச் செடிகள் வளர்ந்து நிற்கும் மூலிகைத் தோட்டம். நான்கு ஏக்கரில் குரோட்டன்ஸ் செடிகள். ஓசோன் படலத்தைக் காக்கும் வகையிலும், உயர் அழுத்த டிரான்ஸ்ஃபார்மர்களால் ஏற்படும் வெப் பத்தைத் தணிக்கும் வகையிலும், இயற்கை முறையில் குளிர்ச்சியை ஏற்படுத்த, இவ் வகைப் பூங்கா நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார் உதவிச் செயற்பொறியாளர் குமார்.

மேலும், செர்ரி பழ மரம் உட்பட தேக்கு, சவுக்கு, நாவல், புங்கன், புளி, வேம்பு என நூற்றைம்பது மரங்கள் மூன்று ஏக்கர் பரப்பில் வளர்ந்தோங்கி நிற்கின்றன. பறவைகள், மீன், முயல், போன்ற செல்லப் பிராணிகளும் இங்கு வளர்க்கப்படுகின்றன.தருமபுரி மாவட்டத்தின் அதியமான் கோட்டை துணை மின் நிலையப் பூங்கா போல, சுற்றுச் சூழலுக்கும் பசுமைக்கும் உத்தரவாதமாக, தமிழகத்தின் மற்ற துணை மின் நிலையங்களும் மாற்றம் பெறலாமே?

வாசகர் யோசனை : **கோவிந்தசாமி, ஊத்தங்கரை**

கருவறையில் உள்ள சிவலிங்கத் திருமேனி சூட்சும லிங்கம் என்றும், கோபுரம் ஸ்தூல லிங்கம் என்றும் பேசப்படுகிறது. விண்ணுயர ஓங்கி நின்று கம்பீரமாக விளங்கும் பெரிய பெரிய கோபுரங்கள் கண்ணுக் கெட்டிய தூரம் வரை சுற்றுவட்டாரத்தில் உள்ள பக்தர்களுக்கு ஸ்தூல லிங்கமாய்த் தரிசனம் தருகின்றன. இதற்காகவே ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோயில் கோபுரத்தைவிட உயர்ந்ததாக எந்தக் கட்டிடமும் அந்த நாட்களில் யாரும் கட்டியதில்லை. கோயிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்ய வாய்ப்போ கால அவகாசமோ இல்லாதவர்கள்கூட, இந்தக் கோபுர தரிசனத்தால் தெய்வ தரிசனம் பெறுகின்றனர். 'கோபுர தரிசனம் பாப விமோசனம்' என்று ஒரு வசனம் உண்டு. பக்தர்கள் கோபுரங்களைப் பார்த்ததும் கைகூப்பி வணங்குவதையும் கன்னத்தில் போட்டுக் கொள்வதையும் பார்க்கிறோம். மன்னர்களும் செல்வந்தர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் போட்டி போட்டுக் கொண்டு கோயில் கோபுரங்களைக் கட்டி வைத்து, அதன் மூலம் தம் பெயரையும் புகழையும் நிலைநாட்டி விட்டுப் போய் விட்டார்கள். அவற்றையெல்லாம் ஒழுங்காகப் பராமரிக்கக்கூட முடியாமல் நாம் திணறுகிறோம். அறங்காவலர்களின் மெத்தனமும், அரசு அதிகாரிகளின் அலட்சியப் போக்கும் கைகோத்து நின்றதன் விளைவுதான் காளஹஸ்தி ராஜகோபுரம் இடிந்ததன் விளைவு!

கோயில் என்னவோ பிரபலமான கோயில்தான். அன்றாடம் விளக்கெரிக்கக்கூட வகையில்லாத கோயில்களில் ஒன்றல்ல இது. நவக்கிரஹ ஸ்தலங்களில் இராகு கேதுவுக்குரிய ஸ்தலம் என்றால் கேட்கவா வேண்டும்? அதுவும் சென்னை திருப்பதி மார்க்கத்தில் வேறு இருக்கிறது. இந்தக் கோயிலில்

கைவிடமாட்டார் காளத்தியப்பர்!



ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற நாட்களில் இராகு காலங்களிலும் பார்க்க வேண்டுமே! அப்படி ஒரு தடபுடல். ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடும் இடம். கோடிக்கணக்கில் பணம் புரளும் இடம். கால சர்ப்பதோஷ பரிகாரம் என்று டிக்கெட் போட்டுப் பண வசூல் அமர்க்களமாக நடக்கிறது. இந்த வசூல் வேட்டையில் காட்டும் அக்கறையில் நூற்றில் ஒரு பங்காவது, கோயில் பராமரிப்பில் காட்டியிருந்தால், சுமார் ஐந்நூறு ஆண்டுகள் பழைமைவாய்ந்ததும் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டதுமான இந்த இராஜகோபுரம் பத்திரமாக இருந்திருக்கும். இறைவனின் கண்களில் இரத்தம் வடிகிறது என்பதற்காகத் தன் கண்களையே தோண்டி எடுத்து வைத்து அப்பிய கண்ணப்ப நாயனார் வணங்கி வீடுபேறுபெற்ற கோயிலின், இன்று உள்ள அவல நிலை கண்டு யார் கண்ணிலும் கண்ணீர் கூடக் கசியவில்லையே!

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோயில்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்துவது என்ற ஆகம விதியே கோயில் பராமரிப்புக்காக இயற்றப்பட்ட விதிதான். இப்போதெல்லாம் காக கணக்கு காட்டி விட்டு, வெறும் வர்ணப் பூச்சு மட்டும் செய்து விட்டு, கும்பாபிஷேகம் என்ற பெயரில் நடக்கும் கோலாகலம் வெறும் பகட்டு தான் என்பதை யார் எடுத்துச் சொல்வது? கோயில்கள் பழுதடைவதும் கோபுரங்கள் இடிவதும் புதிதல்லதான். தென்காசி கோபுரம் இடிதாக்கி அழிந்து பல காலம் கேட்பாரற்றுக் கிடந்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான், மீண்டும் கம்பீரமாக எழுந்து நின்றது. மயிலை கபாலீசுவரர் கோயில் இராஜ கோபுரத்தின் மீது இடி விழுந்து, உச்சி யில் இருந்த மகாநாசிகை என்னும் பகுதியில் சிறிது சேதம் அடைந்ததும் சமீபத்தில் நிகழ்ந்தது. இவையெல்லாம் இயற்கையின்



த.கீ.நீலகண்டன்

உற்பாதங்கள். தவிர்க்க முடியாதவை. ஆனால் சுமார் பத்தாண்டு காலமாகக் கண்ணுக்கெதிரிலேயே சிறிது சிறிதாகப் பழுதுபட்டு பழுதுபட்டு, இன்று மொத்த கோபுரமும் இடிந்து விழுந்து தரைமட்டமானது இயற்கை உற்பாதமே அல்ல! 'லைலா' புயலின் மீது வீண் பழி போடுவானேன்!


"ராஜகோபுரம் இடிந்து விழுந்ததால் தற்போது ராகு திசை அல்லது வேறு திசையில் ராகு புத்தி நடப்பவர்கள், கேது திசை நடப்பவர்கள், அல்லது வேறு திசைகளில் கேது புத்தி நடப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்கிறது ஜோதிடர்கள் வட்டாரம்."

வெயிலிலும் காய்ந்து மழையில் நனைந்து நிற்கும் கோபுரங்களில் விழும் விரிசல், அமிலத்தன்மைவாய்ந்த வெளவால் புழுக்கை, மாடத்தில் வாழும் புறாக்களின் எச்சம், பறவைகளின் எச்சத்தில் கலந்து வந்து விழுந்த விதைகளில் இருந்து முளைக்கும் செடி கொடிகள் (ஏன் சில சமயம் அவை மரங்களாகவே வளர்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம்!) வேர்கள் புகுந்து புறப்பட்டு விளைவிக்கும் சேதம், இவை தவிர உள்ளூர் மக்களின் வரம்பு மீறிய ஆக்கிரமிப்பு, அக்கம் பக்கத்தில் எழும் உயர்ந்த அடுக்கு மாடிக் கட்டடங்களுக்காகப் பூமியில் இறக்கப்படும் கான்கிரீட் அஸ்திவாரம், என்று பல்வேறு காரணங்களால் ஆலயங்கள் ஆபத்துக்கு உள்ளாகின்றன. அவ்வப்போது கவனம் செலுத்திச் சுத்தம் செய்து பராமரிக்காவிட்டால், நம் நாட்டின் ஆன்மிக அஸ்திவாரம் மட்டுமின்றிக் கலைச் செல்வங்களையும் நிரந்தரமாக, படிப்படியாக



இழக்க நேரிடும்.

இடிந்து விழுந்த கோபுரத்தின் அடியில் தங்கப் புதையல் இருக்கிறது என்று ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டு, கொஞ்சநஞ்சம் மீதமிருக்கும் கல் காரம் என்னும் அடிப் பகுதியையும் சுரண்டிப் பார்க்கிறார்கள் என்று செய்தி வருகிறது! இதற்கிடையே, கோபுரம் இடிந்து தரைமட்டமானதால், ஆறு இராசிக்காரர்களுக்கு ஆபத்து என்று வேறு ஒரு பீதியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். அந்த ஆறு இராசிக்காரர்கள் பயப்பட வேண்டாம். தென்காசி கோபுரத்தைக் கட்டிய பராக்கிரம பாண்டியன், பின்னாவில் அந்தக் கோபுரத்திற்குத் தீங்கு நேரிடும் என்று உள்ளுணர்வால் முன்னமே உணர்ந்துதானோ என்னவோ "இந்தத் தென்காசி கோபுரத்திற்குத வாராத தோர் குற்றம் வந்தால், அதை நீக்கிப் புதுப்பித்துக் கட்டுபவர்களின் பாதங்களில் பாரறிய இன்றே விழுந்து வணங்குகிறேன்" என்று கல்வெட்டில் எழுதி வைத்துப் போய் விட்டான். அதே போல், பயந்து போயிருக்கும் 'அந்த' ஆறு இராசிக்காரர்களே, நீங்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து வீழ்ந்த கோபுரத்தை விரைவில் கட்டி முடியுங்கள். காளத்தியப்பர் கைவிட மாட்டார்! ●


PICTURE STORY SPECIAL!
Now on Sale
GOKULAM
THE Magazine for Children
June 2010 Rs.10/- Only

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தலையாய பிரச்னைகள் என்ன? அவற்றுக்குத் தீர்வுதான் என்ன? நுகர்வோர் அமைப்பு நிர்வாகிகள் இரண்டு பேரையும், கல்கி வாசகர் ஒருவரையும், கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டருடன் சந்திக்க வைத்தோம். அதிலிருந்து சில பகுதிகள்:

கோபிநாத், தலைவர், கிருஷ்ணகிரி மாவட்ட நுகர்வோர் உரிமைப் பாதுகாப்புச் சங்கம்.

● காலாவதி மருந்துப் பொருட்கள், காலாவதி உணவுப் பொருட்களைத் தடுக்க, மாவட்ட நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கு? குறிப்பா, சாதாரணக் கடைகள்ல விக்கற தண்ணீர் பாக்கெட் தரமற்றதாக இருக்கே. அவற்றைத் தடுக்க முடியாதா?

சண்முகம் - மாவட்ட கலெக்டர்

● மருந்துக் கடைகள், உணவுப் பொருள் கிடங்குகள்ல தக்க நடவடிக்கைகள் மூலமாக ஆய்வு செய்து, காலாவதி பொருட்களைச் சந்தையில விற்கறதைத் தடுத்து வர்றோம். தண்ணீர்ப் பாக்கெட்டை சாதாரணக் கடைகள், பெரிய கடைகள்னு எல்லா இடங்கள்லயும் பரிசோதனை செய்து நீக்கி வர்றோம். ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத தண்ணீர் பாக்கெட்டுகளை விற்கக் கூடாதுன்னு கடைக்காரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கு. தேதியிடப்படாமல் வெளிவரும் தண்ணீர் பாக்கெட்டுகளைத் தடைசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இப்ப பெரிய கிராமங்கள்ல கூடத் தண்ணீர் பாக்கெட்டுகள் கடைகளில் விற்கப்படுது. ஒவ்வொரு யூனியன் அளவுலயும் மாவட்ட நிர்வாகத்தோட நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஆனந்தன், பொதுச் செயலாளர், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம், கிருஷ்ணகிரி.

● கிருஷ்ணகிரி மாவட்டத்துல ஏரிகளோட நிலைமை ரொம்ப பரிதாபமா இருக்கு. ஆக்கிரமிப்புகள் அதிகமாயிடுச்சு. மிச்சமிருக்கிற ஏரி குளங்கள்ல தூர் வாரப்படவே இல்லையே?

மாவட்ட கலெக்டர்:

● ஏரிகளோட நிலைமை எங்கேயும் பரிதாபமாக இல்லை. காலப்போக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏரி



கள் ஒரு சிலதில், சில பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கலாம். மறுக்கவில்லை. இருந்தாலும், அவற்றை அகற்றும் பணிகளில் உள்ளாட்சி நிர்வாகம் ஈடுபடுத்தப்பட்டிருக்கு. சாயல்குடி ஏரியில் குப்பைகள் கொட்டப்பட்டிருப்பது உண்மைதான். அவை அகற்றப்பட்டு, குறிப்பிட்ட ஏரி தூர்வாரப்பட உள்ளது. மிச்சமிருக்கும் ஏரி குளங்கள் தூர் வாரப்படவே இல்லை என்கிற உங்கள் குற்றச்சாட்டு உண்மைக்குப்

புறம்பானது. காரணம், தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ், அந்தந்தக் கிராம மக்களைக் கொண்டே அந்தந்தப் பகுதி ஏரி குளங்கள் தூர் வாரப்பட்டு, புதியனதாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

மாதவராமன்,
கல்கி வாசகர்

அவதானப்பட்டி படகு இல்லம், பூங்கா தவிர வேறு எதுவும் பொழுதுபோக்கு மையமில்லை இங்கு. சுற்றுலா வளர்ச்சிக்கு என்ன செய்வதாக உத்தேசம்? பின் தங்கிய மாவட்டம் ஆன கிருஷ்ணகிரி, கல்வியில் என்ன வளர்ச்சி கண்டிருக்கு?



கலெக்டர் அய்யா... கவனிங்க..!




சின்ன வயது திருமணங்கள் குறித்துப் பத்திரிகைச் செய்திகள் வந்துகிட்டே இருக்கு! மாவட்ட நிர்வாகம் என்ன பண்ணுது?

மாவட்ட கலெக்டர்:

சுற்றுலாத் தலம், பொழுதுபோக்கு மையம் பெரிதாக ஏதும் இல்லை என்பது உண்மைதான். மாவடத்துல வனப் பகுதி அதிகம். ஒசூர் வனத்துறைப் பகுதிகள்ல பத்து கி.மீ. - இருபது கி.மீ. நீளத்துக்கு ட்ரெக்கிங் பார்க் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கு. அது நிறைவேற்றப்பட்டதும், சுற்றுலாப் பயணிகளுக்கு, சிறந்த பொழுது போக்கு மையமாகச் செயல்படும். கே.ஆர்.பி. அணைக்கட்டுப் பூங்கா புதுசாப் பொலிவூட்டப்பட இருக்கு. அதன் சாலைகள் பழுதுநீக்கப்பட்டுப் பளபளப்பாகப் போடப்பட இருக்கின்றன. மாவட்டத்தில் மத்திய அரசின் மாடல் பள்ளிகள் நான்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த வருடம் ப்ளஸ் டூ தேர்ச்சி விகிதம் சென்ற ஆண்டைக் காட்டிலும் ஐந்து சதவிகிதம் அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டப் பகுதிகளில், மாவட்ட நிர்வாகத்தின் பார்வைக்கு வந்தவற்றில் சின்ன வயது பெண் திருமணங்கள், உரிய நடவடிக்கைகள் மூலமாகத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த ஒன்னரை வருடத்தில் மட்டும், சட்டத்துக்குப் புறம்பான சுமார் நாற்பதுக்கும் மேலான பால்ய வயதுத் திருமணங்களைத் தடுத்து நிறுத்தியுள்ளது மாவட்ட நிர்வாகம்.''

வாசகர் யோசனை:
மாதவராமன், தருமபுரி

பிறமொழிக் கதை



இந்த மாதம் முதல்முறையாக வீட்டின் வரவும் செலவும் சீராகிக் கொஞ்சம் உபரிப்பணமும் மிஞ்சியது. ஏனென்று தெரியாமலேயே நான், என் வழக்கத்துக்கு விரோதமாக - சூரிய ஒளி பொருந்திய தினங்களில் - வானம் கொள்ளும் வண்ணத்தைப் போல அழகிய விண் நீலம் உடைய பிரமாதமான ஆங்கிலேயத் துணியை வாங்கி நேர்த்தியான சூட் - கோட்டை தைத்துக் கொண்டேன்.

வீரத்தினால் விம்மிப் புடைத்த கடலோடியின் தோள்களில் உள்ள நட்சத்திரங்களைப் போல, சூரிய ஒளியில் பொத்தான்கள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. அதனுடைய விலை ஏற்படுத்திய தலைச்சுற்றல் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. நான் என் தலையையும் தோள்களையும் நிமிர்த்திக் கொண்டு, 'நீ எப்படி உடுத்திக் கொள்கிறாய் என்பதை எனக்குச் சொல்லு. நீ யார் என்பதை நான் உனக்குச் சொல்லுவேன்' என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

எவ்விதமான தயக்கமும் இல்லாமல் நான் பெரிய தெருவிலிருந்த பிரம்மாண்டமான

சூட்டும் கோட்டும்



துனிசிய மூலம்: அலி தெப்

தமிழில்: திலகவதி

உணவு விடுதிக்கு நடந்தேன். நான் எதிர்பார்த்ததைப் போலவே, என்னுடைய நண்பர்கள் என்னுடைய ஆடையைப் பற்றி வெகுவாகச் சிலாகித்துத் தங்களுடைய விரல்களால் தொட்டுத் தடவினார்கள். மயிலைப் போல் கர்வத்தோடு நான் திக்குமுக்காடினேன். பிறகு காகிதக் கைக்குட்டைகள் அடங்கிய ஒரு பொட்டலத்தையும், சிகரெட்டுகளையும் ஆவலோடு நீண்ட அவர்களுடைய கைகளில் அளித்தேன். அவர்களில் ஒருவன் மகிழ்ச்சியோடு, ''நான் வழக்கமாகப் புகைப்பதில்லை. ஆனால், உண்மையிலேயே அவை அருமையானவை. என்ன ஆனந்தம்?'' என்றான்.

''சாதாரண சிகரெட்டுகளில் தாரையும் நிக்கோட்டினையும் திணித்திருப்பார்கள்'' நான் முணுமுணுத்தேன்.

குடித்ததற்கான பணத்தையும் கணிசமான இளமை ஊழியனுக்கும் நான் அளித்தேன். அவன் எனக்குத் தன் வணக்கங்களைச் சொன்னான். விலை உயர்வைப் பற்றியும், தரமான வாழ்க்கை வாழ அதிக செலவும் செய்யவேண்டி இருப்பதைப் பற்றியும் மேலோட்டமான பேச்சுக்கள் நடந்தன.

அந்தச் சமயத்தில், அவர்களில் ஒருவன் இந்தச் சட்டையும் கழுத்துப்பட்டியும் எந்த ரகத்தைச் சேர்ந்தவை என்று என் காதுக்குள் முணுமுணுத்தான். பிறகு

அவன் என்னை, தன்னுடைய சரக்குகளின் உயர்ந்தத் தரத்துக்காகவும் எண்ணற்ற வகையறா பொருட்களின் கையிருப்புக்காகவும் மிகவும் புகழ் பெற்ற ஒரு கடைக்கு அழைத்துச் சென்றான். அவனுடைய நல்ல ரசனையும் நட்புணர்வும், என்னுடைய சட்டைப் பைகளைக் காலி செய்துவிடத்தக்கதாக இருந்தன. மிகுந்த சிரமத்துடனேயே நான் வீடு திரும்புவதற்கான பயணச் சீட்டை வாங்கவேண்டியிருந்தது.



ஒரு வாரம் முழுவதும் நான் கடுமையான எளிமையைக் கடைப்பிடித்து என்னைச் சிரமங்களுக்கு ஆளாக்கிக்கொண்டு, என்னுடைய கணக்கு வழக்குகளைச் சீர்செய்வதில் கவனம் முழுவதையும் செலுத்தினேன். அதிகப்படியான முட்டை மற்றும் வெண்ணெய்யையும் ஆடம்பரங்களையும், தவிர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானேன். என்னுடைய இறைச்சி மற்றும் சிகரெட் செலவையும் பாதியாகக் குறைத்து, என் நண்பர்களைப் பார்த்து பொழுதுபோக்குகளில் கலந்து கொள்ள நேரம் இல்லாதது போலப் பாசாங்கு செய்தேன்.

பெருமையில் பூரித்தவனாக, பெண்களின் ரசனை மேம்பட்டதாகவும் உறுதியானதாகவும் அவர்களுடைய பார்வை கூர்மையானதாகவும் இருக்குமாகையால், பெண்களின் பக்கம் கவனமாகப் பெரிய தெருவில் நடைபோட்டுக் கொண்டிருந்தேன். யாரோ என் காதுகளில் ''தவறு உங்கள் காலணிகளில் இருக்கிறது'' என்று முணுமுணுப்பது கேட்பது போல் இருந்தது. நான் திரும்பி ஓர் இளம்பெண்ணின் முகம் இலேசாகச் சிவப்பதைக் கவனித்தேன். விரல் விட்டு என் காலணிகளின் வயதை எண்ணினேன். அடக்கொடுமையே, மாதங்கள் எவ்வளவு விரைவாகப் பறக்கின்றன. ''குற்றமற்ற முழுமைக்கும் எனக்கும் நடுவில் ஒரு ஜோடிக் காலணிகள் மட்டும்தான் இருக்கின்றன. லிபர்ட்டி நிழற்சாலையில் ஒரு ஜோடிக் காலணிகளை வாங்கிக்கொண்டு நான் என் நண்பர்களிடம் திரும்பி வந்தேன். அவர்கள் புகழ்வதற்கான தங்களுடைய வெளிப்பாடுகள் அனைத்தையும் என்னை நோக்கித் திருப்பினார்கள்.

வீட்டுக்குப் போகும் வழியில் தட்ப வெப்ப நிலை திடீரென்று மாறுதல் அடைந்து, என்னுடைய செருக்குமிக்க மூக்கின்

''உங்க மனைவிக்கு 'வீசிங்' ப்ராப்ளம் இருக்கு.''

''அப்போ வீட்டுக்குப் போனதும் பாத்திரங்களை எல்லாம் ஒளிச்சி வைச்சிட்டுமா டாக்டர்?''

- அரூர். மு.மதிவாணன்

மீது சில மெல்லிய சின்னச் சின்ன மழைத் துளிகள் விழுந்தன. 'மோசமான வானம்'; தரம் குறைவானதாக இருந் தாலும், நான் வாங்கிய குடை என்னைக் காத்தது.

பார்சலோனா சதுக்கத்தில் இளம் பிச்சைக்காரர்கள் குறுக்கிட்டார்கள். அவர் களுடைய சோகமான முகங்களும், நீட்டிய கைகளும், கெஞ்சல்களும் என்னை மூச்சுத்திணறச் செய்தன. அவர் களில் மூன்று பேர் இருந்தார்கள். அவர் களுடைய தொல்லையிலிருந்து தப்ப, ஒவ்வொருவருக்கும் ஐம்பது காசுகளைக் கொடுத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். இதைக் காட்டிலும் எவ்வ ளவோ அதிகமாகக் கொடுக்கும் தகுதி உள்ளவர் நீங்கள் என்று, திரும்பத் திரும்பச் சொல்லியபடி, அந்தப் பக்கம் போன எல்லோரிடமும் காசைக் காட்டியபடி அவர்களுடைய தலைவன் என்னைத் தொடர்ந்து வந்தார். நான் ரெட்டிப்பு மடங் குத் தொகையைக் கொடுத்து அவனுடைய மௌனத்தை வாங்கினேன்.

கார்களின் மீதிருந்த தூசுகளையும், மேலே முட்டிமோதிக் கொண்டு நடக் கும், நடந்து போகிறவர்களையும் தவிர்த்த படி நான் பக்கவாட்டுப் பாதையில் கவ னத்தோடு நடந்தேன். கூட்டத்தையும் பேருந்துகளையும் கண்டால் ஓடினேன். காலடிகளுக்கு மெருகேற்றவோ, கவனத் தோடு சட்டைகளைத் தேய்க்கவோ நான் மறக்கவில்லை. அவற்றைச் சீக்கிரமாக உலரச் செய்ய நான் தீயை அடிக்கடி பயன்படுத்தினேன். திடீரென்று ஜன வரி குளிர் ஞாபகத்துக்கு வந்தது. ஒரு கோட்டை வாங்கவும், குளிர்காலம் போன தும் என்னுடைய சூட்டை மாற்றவும் நான் திட்டமிட்டேன். கடனுக்காக நான் என் கையை நீட்டுவதா? அல்லது கம் பெனியின் பணப்பெட்டியிலிருந்து நேரடியாக எடுத்துக் கொள்வதா? இறுதியில் நான் இரயில் வண்டியில் ஏறினேன். பயணிகளின் துர்நாற்றம் பிடித்த மூச்சுக்காற்றைச் சுவாசித் தேன். ஒரு இருக்கையின் கைப்பிடி மீது சாய்ந்தேன். ஒரு பெண்மணி தன் பக்கத்தில் இருந்தவரிடம், 'அவர்கள் நம்முடைய இரண்டாம் வகுப்பு இருக்கைகளுக்குக்கூட போட்டியிடு கிறார்கள்' என்று குறைசொன்னாள். எனவே, நான் முதல் வகுப்புக்குள்

''நம்ம ஹோட்டல்ல நிறைய மைசூர்பாகு விக்காம மீதி ஆயிடுச்சு... என்ன பண்ணலாம்?''

''புதுசா வீடு கட்டறவங்ககிட்டே செங்கல் ஏதாவது வேணுமான்னு கேட்டுப் பார்க்கலாமா முதலாளி.''

- அரூர், மு.மதிவாணன்



நுழைந்தேன். அங்கு கட்டணமாக மேலும், அதிகமானத் தொகையைக் கட்ட வேண்டி இருந்தது. நான் ஒரு பல்பொருள் அங்காடிக்குள் நுழைந்தேன். நான் கடைச்சரக்குகளை வாங்கிக் கொஞ்ச காலம் ஆகிவிட்டிருந்தது. என்னைக் கண்டதும் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் மகிழ்ச்சியோடு உண்மையிலேயே கிறீச் என்று கத்தி என் கைகளைக் குலுக்கித் தன்னுடைய தட்டையான குரலை உயர்த்தி என்னிடம் கடன் கேட்டார். அந்தச் சூட்டையும் கோட்டையும் மட்டும் நான் அணிந்து கொள்ளாமல் இருந் திருந்தால் நான் கொடுக்க நிச்சயமாக மறுத்திருப்பேன்.

பல பொருட்களை வாங்கி அவற் றையும் நெஞ்சுக்கு நேராக ஏந்திக் கொண்டிருந்தேன். விற்பனைப் பொறுப் பில் இருந்த பெண், எனக்கு முகமன் கூறிப் பொருத்தமான கூடை ஒன்றைக் கழற்றிக் கொடுத்தாள். நான் வாங்கியவற்றை அதற் குள் வைப்பதைத் தவிர மாற்றுவழி ஏதும் எனக்கு இருக்கவில்லை. சரியான ரகத்தைச் சேர்ந்த என்னைப் போன்றவர்கள், விலையைப் பற்றிய எண்ணம் இல்லாமல் வாங்குவார்கள். நான் பணப்பதிவேட்டில் குறிக்கப்பட்ட கூட்டுத் தொகையைக் கூட சட்டை செய்து பார்க்கவில்லை. நான் வீடு திரும்பியபோது, என்னுடைய ரத்த அழுத் தம் உச்சகட்டத்தில் இருந் தது. என்னுடைய தலை உண்மையாகவே கொதித்துக் கொண்டி ருந்தது. நான் எந்தப் பக்கம் நடந்தேன், என்னுடைய அங்கிகளையும், காற்சட் டையையும் எங்கே எடுத்து எறிந்தேன் என்பதை நான் காணவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு இந்த நூற்றாண்டின் குறைகளைச் சபித்தபடி, முட்டாள்களின் தவறுகளை நொந்து கொண்டேன். இறுதி யாக நான் என்னுடைய பழையத்தன்மைக்கு மாறினேன். அதிலிருந்து யாரும் என்னைத் தொல்லை செய்வதில்லை.



என்னுடைய செருக்குமிக்க மூக்கின் மீது சில மெல்லிய சின்னச் சின்ன மழைத்துளிகள் விழுந்தன!

தொகுதிக்கு மூன்று பேர்?

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் கணினி கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி நெட் ஒர்க்கிங் செய்து கொள்ள, பல்கலைக் கழக மான்யகுழு பத்து கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. எனவே, அரசு சார்ந்த பல்கலைக் கழகங்கள், தனியார் நிறுவனங்கள் இந்த வேலையைச் செய்து கொடுக்க டெண்டர்கள்விட ஏற்பாடு செய்து வருகின்றன. இந்த நிலையில், தமிழகத்திலேயே உயர்வான பொறுப்பை வகிப்பவரின் செயலாளர் ஒருவர், தமது மகன் நடத்தும் கணினி நிறுவனத்துக்கே அந்த டெண்டர் வழங்கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கிறாராம். அமைச்சரிடம் சொன்னால், 'இதுக்கெல்லாம் நான் ஒன்றும் செய்ய முடியாது' என்று நழுவி விடுகிறாராம்.



இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் இறுதிக் கட்டப் போர் நடக்கும் முன்பு, இங்கிருந்த அவர்களின் ஆதரவாளர்களான திருமாவளவன், சுப வீரபாண்டியன் மற்றும் சிலர் ஈழத் தமிழர்களின் அழைப்பின் பேரில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு அடிக்கடி விசிட் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் கடந்த ஒரு வருட காலமாக ஈழத் தமிழர்கள் இவர்கள் மீது கடுப்பில் இருக்கிறார்கள். மிக முக்கியமான கட்டத்தில் கருணாநிதி தங்களைக் கைவிட்டு விட்டதாகப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். திருமாவளவன், கருணாநிதியுடன் அரசியல் கூட்டணியில் இருப்பதை அறவே வெறுக்கிறார்கள். தற்போது அவர்களை மிகவும் கவர்ந்த தமிழகப் பிரமுகர் சீமான் தானாம்.

செம்மொழி மாநாட்டுக்குப் பிறகு, சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கும்படி தமிழக அமைச்சர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறதாம். நவம்பர் அல்லது 2011 ஜனவரி மாதங்களில் முன் கூட்டியே தேர்தல் நடத்தப்பட்டு விடும் என்கிறார்கள். மாவட்டம் தோறும் ஆராய்ந்து ஒரு தொகுதிக்கு மூன்று பேரைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும்படி தனியார் நிறுவனம் ஒன்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதாம். அந்த மூன்று பேர் குறித்த பின்னணி விவரங்கள் உளவுப் பிரிவின் மூலம் ஆராயப்படுமாம். இறுதியாக வேட்பாளர் போடுகையில், பன்னிரண்டு மாவட்டங்களில், தாம் கை காட்டுபவரையே வேட்பாளராகப் போட வேண்டும் என்கிறாராம் அழகிரி. மற்ற கட்சிகளிலிருந்து தி.மு.க.வில் சமீப காலங்களில் இணைந்த பிரமுகர்களுக்குக் குறைந்தது பத்து சதவிகித இடங்கள் கொடுக்கப்படும் என்கிறார்கள்.

- சஞ்சயன்

உயிர்ச்சுமை

சந்துருவுக்கு வீடு திரும்புவதை நினைத்தாலே வயிற்றிலிருந்து ஒரு அக்னிச்சுழல் எழும்பி தொண்டையில் துக்கம் நிரம்பியது. அவனை அறியாமல் விழிகளில் பொங்கியது நீர்.

வசிப்பிடம்தான் எல்லோருக்கும் இளைப்பாறல்... ஆனால், ஒரு சில சமயம் விடற்று இருப்பதும் ஒரு சவுகர்யம் என்று தோன்றியது.



நெய்வேலி பாரதிக்குமார்



மணி தன் இறுதி நிமிடங்களை சிரமப்பட்டு நகர்த்திக்கொண்டிருக்கிறது. அதன் ஈனமான குரைப்பொலி இல்லாத வீடு அமானுஷ்யமாக இருக்கிறது. எத்தனை மெலிதாக வண்டியின் சத்தத்தைக் குறைத்துக்கொண்டு சென்றாலும், சட்டென்று தான் படுத்திருந்த இடத்திலிருந்து தலையைத் தூக்கிக் காதுகள் விரைக்க வாசல் பக்கம் திரும்பிக் குரைக்கும் அதன் கம்பீரமான அழகு, எல்லாக் கவலைகளையும் கணநேரத்தில் துரத்திவிடும்.

மனிதர்களின் ஆதிக்க மனோபாவத்தின் வடிகாலாய் வரும்தோறும்.. தனக்குக் கீழே ஏதோ ஒரு ஜீவன் வாலாட்டியபடி, குழைந்து நக்கிக்கொண்டிருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பை நாய்தானே நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்பது கிருஷ்ணனின் வாதம். சந்துருவின் தரப்பில் அதற்கு வேறு அர்த்தம் உண்டு. சதா அன்பை யாசிக்கும் மனிதனுக்கு, சலிப்பின்றி நாயைத் தவிர வேறு எது அன்பை அப்படி வஞ்சனையின்றித் தரமுடியும்.

செல்வ விநாயகர் ஆலயத்தின் பிரகாரம் தண் என்று காற்றை வாரி அவன் முகத்தை வருடி ஆறுதல் சொன்னது. 'ஒரு நாள் எப்படியும் இழக்க போகிறோம் என்று தெரிந்துதானே எல்லாவற்றையும் பெறுகிறோம்'. சில நொடிகள் கழித்து சலனமற்ற மௌனத்தில் காற்று அசையாமல் அதை மெய்ப்பித்தது.

யாருக்கும் நாய்களை, குருவிகளை, கிளிகளைப் பரிசளிக்காதீர்கள் என்று இப்பொழுதெல்லாம் எல்லோரிடமும் சிபாரிசு செய்கிறான் சந்துரு. மணியை விளையாட்டாக ஏழு வருடங்களுக்கு முன்பு பரிசளித்துச்சென்ற சந்தானத்தை, எல்லோரும் இப்போது திட்டித் தீர்க்கிறார்கள். ஆனால் அவன் அதை இங்கு விட்டுச்சென்றபோது, எல்லோருக்கும் ஒரு புது உலகம் தங்களுக்குள் தோன்றியது போல் இருந்ததை மறந்துவிட்டார்கள்.

பொமரேனியன் க்ராஸில் பிறந்த மணி, பழுப்புக் கலந்த வெள்ளை நிறத்தில் புஸு, புஸுவென்று, விரல் விட்டு அளைகையில் விளைந்த நெற்பயிரை வருடுவது போல் இருக்கும். எந்த மின்சக்தியும் இல்லாமல் ஒளிரும் அதன் கண்களை உற்றுப்பார்க்கும் எவரும் அதனிடம் மயங்காமல் இருக்கமுடியாது.

சின்னச் சின்னப் பிணக்குகள், மனித உறவுகள் மீதான அதிருப்திகள் என்று களையிழந்துக் கிடந்த வீட்டை 'மணி'யின் வருகைதான் ரம்யமாக்கியது. சரியான சமயத்தில் கொடுத்தான் சந்தானம் என்று அவ்வப்போது நினைத்துக்கொள்வான் சந்துரு. அன்பின் அடையாளமாகத்தான் அதனைத் தந்தான் சந்தானம். வயோதிகத்தாலும் நோயாலும் அவதிப்படும் மணி இப்பொழுது கூடுதல் சுமையாகத் தெரிந்தது வீட்டில் சிலருக்கு.

வெத்திலைப் பாட்டிதான் கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தாள் சந்தானத்தை... யாரையாவது திட்டியபடி, குறை சொன்னபடி இருந்தால்தான் பாட்டிக்கு பொழுது நகரும். இப்பொழுது கொட்டிகொண்டிருக்கிறாள். மணி வருவதற்கு முன் வீட்டுப் பெண்பிள்ளைகள், மணி வந்த பிறகு மணி, இப்பொழுது சந்தானம்.... பாட்டி மீது இப்பொழுதெல்லாம் கோபம் வரவில்லை. பாவமாக இருந்தது. அன்பை உணராத, மனிதர்கள் துரதிர்ஷ்டசாலிகள்தானே...

'அந்தக் குமாரு பய கேட்டு கிட்டு கெடந்தான். அப்பவே குடுத்துத் தொலைச்சிருக்கலாம்.

இப்ப வாந்தி எடுத்துகிட்டு, சீக்கா கெடக்கு. எப்ப ஒழியுமோ தெரியலை...' என்று புலம்பிக் கொண்டிருக்கும் வெத்திலை பாட்டிக்கு, இரண்டு வருடங்களுக்கு முன் கால் அடிபட்டு நடக்க முடியாமல் படுத்த படுக்கையாக கிடக்கிறாள். எல்லாமே பெட்டில்தான்.

என்றாலும், மணிக்கு பாட்டி மேல் துவேஷம் ஏதுமில்லை. பதிலுக்கு குரைக்காது. ஆனால் தோட்டக்கார முருகனைக் கண்டால் எப்பொழுது பார்த்தாலும் குரைக்கும். சஞ்சீவிதான் அதற்கு விளக்கம் சொன்னான், சில மனிதர்களின் வாசம் நாய்களுக்குப் பிடிக்கும். அவர்களோடு சட்டென்று எளிதாக ஒட்டிக்கொள்ளும். சந்துருவுக்கு பல இடங்களில் அதே அனுபவம்தான். எந்த ஜாதி நாயானாலும் சந்துருவிடம் மிகச் சுலபத்தில் சிநேகமாகப் பழகி விடும். சில மனிதர்களின் வாசம் நாய்க்குப் பிடிக்காது. அவர்களைக் கண்டால் சதா குரைக்கும் என்பான் சஞ்சீவி. மனிதர்களின் நல்ல எண்ணங்கள்தான் அவனைச் சுற்றி வாசனையாகவும், ஒளியாகவும் சுழல்கிறது என்பது சஞ்சீவியின் உபரித் தகவல். நாய்க்கு மனிதர்களின் வாசம் பிடிக்கிறதோ இல்லையோ, சந்துருவுக்கு நாய்களின் வாசம் என்றால் ரொம்ப இஷ்டம்... அந்தச் சுகத்தை முழுமையாக உணர நாயைக் குளிப்பாட்டிப் பாருங்களேன். தன் மீது பரவிய நீர்த்திவலைகளை சடசடவென்று அது உதறுகையில், அதன் அருகில் இருப்பவர்கள் அருவியின் தெறிப்பில் கிடைக்கும் சிலிர்ப்பை அனுபவிக்கலாம்.

மணிக்கு நான்கு நாட்களாக அன்ன ஆகாரம் ஏதுமில்லை. எப்பொழுதாவது ஒரு முறை கொஞ்சம் பால்... கண்கள் ஒளி இழந்து ஜுரக்களை சுழன்றது. அதற்கு இஷ்டமான ரஸ்க்கை போட்டால் கூடத் தீண்டத் திராணியில்லாமல் அப்படியே கிடக்கிறது. அதன் ஜீவன் துளித் துளியாகக் கரைந்துகொண்டிருப்பதைக் காணச் சகியாத நிலையை பார்த்து அப்பா 'எங்கையாவது இதை விட்டுத் தொலை' என்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டார், இயலாமையின் குரூரம் உணராமல்.



எப்போதோ ஒருமுறை எல்லோரும் வெளியே போக நேரும்போது, வர மறுக்கும் நாயைக் கவனிக்கும் வேலையைச் சொல்லிப் போனால் மகா எரிச்சலடைவார்.

மணி சார்ந்த நாய்களின் இனத்தில் இல்லை. துரத்தலும், கடித்தலும் அதன் அடையாளம் இல்லை. அதன் நரம்பில் ஊறி முகிழ்க்கும் அன்பை அது நாவால் நிரட்டித் தீண்டி, ஈரமிக்க மொழியில் உரையாடும். அன்பின் பிரளயம் மணி. அதன் சிலிர்ப்பை வாசிக்க முடியாதவர்களால் ஒரு போதும் அதன் அன்பை உணரமுடியாது.

மணிக்கு குழந்தைகளிடம் அலாதிப்

பிரியம். மணியின் காதுகளைப் பிடித்து இழுத்து, வாய்க்குள் விரலைவிட்டு விளை யாடும் பிள்ளைகளை ஒரு போதும் மிரட் டியதே இல்லை. அத்தனை வலிகளைப் பொறுத்ததாலோ என்னவோ, பிரியா அதன் வலிகளைப் புரிந்தவளாக இருந் தாள்.

இப்படித்தான் ஒரு தடவை ப்ரியா 'கடவுள் ரொம்ப பெக்யூலியர் கேரக்டர்' என்றாள்

'எப்படி?'

'உலகத்திலேயே ரொம்ப நன்றி உள்ள ஜீவன்னா நாய்தான்னு சொன்னே. ஆனா அதுக்கு போய் பதினைந்து வருஷம்தான் ஆயுள் குடுத்துருக்கிறார். நன்றி உள்ள ஜீவனுக்கு கடவுள் தரும் பரிசு அவ் வளவுதானா?'

குழந்தைகள் எத்தனை சுலபமாகக்

''நீங்க வீட்டுல இருங்க. உங்க பேருக்கு அர்ச்சனை பண்ணிட்டு வந்துடறேன்!''

''அப்ப... ரெண்டாவது அர்ச்சனைன்னு சொல்லு!?''

- கோவிந்தன்

கனமான கேள்விகளைக் கேட்டு விடு கிறார்கள். அதன் பளுவைச் சுமக்க முடி யாமல் நழுவுகிறது மனது.

'அப்படியில்லடா! இந்த உலகம் நன்றியுள்ள பிறவிகளுக்கானது இல்லை. அப்படியான அன்பானவற்றைத் தன்னரு கில் அழைச்சுக்கிறார்.'

'வெத்திலைப் பாட்டி மேல கடவுளுக் குப் பிரியமே இல்லை போலிருக்கு' ரகசியக் குரலில் களுக்கென்று சிரித்தபடி சொன்னாள் ப்ரியா.

''அப்படியெல்லாம் பேசக்கூடாது'' என்று அடக்கினான் சந்துரு.

'நீ ஒரு தடவை யயாதி கதை சொன் னியே.. அது மாதிரி மத்தவங்க ஆயுள் காலத்திலேர்ந்து அதுக்கு லைஃப் தர முடியாதா?'

'நாம வாழுற ஆயுள் காலத் துல நாயோட ஆயுள் காலமும் இருக்கு. அதுக்கு ஒரு கதை இருக்கு தெரியுமோ?'

'சொல்லுப்பா'

'கடவுள் ஒவ்வொரு விலங்கா கூப் பிட்டு அதன் ஆயுள் காலத்தை ஃபிக்ஸ் பண்ணினாராம். குரங்கைக் கூப்பிட்டு உனக்கு இருபது வருஷம் ஆயுள் அப் படின்னாராம். குரங்கு, வேண்டாம் கட வுளே! மரத்துக்கு மரம் தாவுர பொழப்பு எனக்கு! அதுக்கு பத்து வருஷம் போதும் னுச்சாம். சரின்னு அதை பூமிக்கு அனுப் பிட்டாராம். அடுத்து கழுதையை கூப் பிட்டு உனக்கு ஐம்பது வருஷம்னாராம். காலம் முழுக்க பொதி சுமக்கற எனக்கு எதுக்கு அத்தனை வருஷம்? இருபது வருஷம் போதும்னுச்சாம். சரின்னுட்டாராம். அப்புறமா, நாய் வந் துச்சாம்; அதுக்கு முப்பது வருஷம் னாராம். தெருத் தெருவாக அலைச்சல் வாழ்க்கை எனக்கு. ஏன் அவ்வளவு? பதினைந்து வருஷம் போதும்னுச்சாம். சரின்னு அதை அனுப்பிட்டாராம். கடைசியா மனுஷன். எல்லாமே குறைச்சுக் கேக்குதேன்னு உனக்கு நாற்பது வருஷம் போதுமான்னாராம். மனுஷங்கதான் பேராசைக்காரவங்களாச்சே! இத்தனை அழகா உலகத்தை படைச்சுட்டு நாற்பது வருஷம் குடுத்தா எனக்கு போதாதே, நூறு வருஷம் வேணும்னானாம். கடவுளும் யோசிச்சு பார்த்துட்டு சரி நாய், குரங்கு, கழுதை திருப்பிக் கொடுத்த வருஷங்களை நீ வச்சுக்கன்னாராம், அதனாலதான் மனு ஷன் அந்தந்த வயசுல அந்தந்த குணத் தில, இருக்கான். ஆனா வேடிக்கை யைப் பாரு, நல்லதை எடுத் துக்க தெரியாத மனுஷன்,

நாய்கிட்டேர்ந்து அலைச்சலை எடுத்துகிட்டான்; நன்றியை மறந்துட்டான்' என்று சிரித்தான் சந்துரு.

செல் ஒலித்தது. துர்க்காதான் பேசினாள்.

''எங்கே இருக்கீங்க. இன்னிக்கு ஏதாவது ஓ.டி. பார்க்கறீங்களா? நேரமாச்சே காணுமேன்னு பார்த்தேன்.''

''கோயில்ல இருக்கேன் துர்க்கா. மனசு சரியில்லை. வந்துடறேன்.''

சிறிது நேர மௌனத்துக்கு பிறகு ''போதும். கடவுளுக்கு ரொம்ப நெருக்கடி குடுக்காதீங்க. இப்பவே ரொம்ப இழுத்துகிட்டு இருக்கு. இன்னும் கொஞ்ச நாளுக்கு இருக்



''கடவுளுக்கு ரொம்ப நெருக்கடி கொடுக்காதீங்க. மணி இப்பவே ரொம்ப இழுத்துக்கிட்டு இருக்கு.''

கட்டும்னு அப்ளிகேஷன் போட்டிங்கன்னா பாக்க சகிக்காது. சீக்கிரம் நல்லபடியா கொண்டு போயிடுன்னு வேண்டிக்கங்க.''

''சரி, சரி'' செல்லை ஆஃப் செய்தான். எல்லோரும் எத்தனை சுலபமாக முடி வெடுத்துவிடுகிறார்கள். பாவம்! அவளும் தான் என்ன செய்வாள். மணி உடம்பு சரியில்லாத காலங்களிலெல்லாம் அது கக்கி வைப்பதை அவள்தான் கழுவி வைக்க வேண்டியிருக்கிறது. வீடு நோக்கி நடந்தான் சந்துரு.

சந்துரு உள்ளே நுழையும்போது, கொஞ்சம் பிரகாசமாகி எழ முயற்சித்துப் பின் ஹீனமான முனக லோடு படுத்துக் கொண்டது மணி.

'டாக்டர்கிட்ட சாயந்திரம் கூடக் காண்பிச்சாச்சு... ரொம்ப வைத்தியம் பண்ணிக்கிட்டு இருக்க வேணாம், பிரயோஜனமில்லன்னுட்டார். கையை சுத்தமா கழுவிட்டு சாப்பிட வாங்க' என்றாள்.

முகம் கை, கால் கழுவிவிட்டு சாப்பிட அமர்ந்தான். தட்டில் பிசைய, பிசைய மனம் பிழிவது போல் இருந்தது. சாப்பிட முடியாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். சட்டென்று உள் நுழைந்த காற்று ஜில்லென்று முகத்தில் அறைந்துவிட்டு வெளியேறியது. ஏதோ தோன்ற கையை உதறிவிட்டு மணியிடம் போனான்.......

.... முடிந்து போயிருந்தது.

ஒருகணம் அதன் முன் அமர்ந்த சந்துரு துக்கம் தாங்காமல் ஓவென்று கதறி அழுதான். பதறியடித்து வந்த துர்க்கா அவன் தலையைக் கோதிவிட்டு 'மெல்ல... மெல்ல! பிரியா தூங்கிட்டு இருக்கா'. சட்டென்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

அந்தக் கண்ணுக்குத் தெரியாத காற்று இத்தனை ஸ்தூலமான உடலைச் சுமந்து திரிந்தபோது கொண்டாடியவர்கள் எத்தனை பேர்.

உடல் தளர்ந்து, சரிந்தபோது, கனமற்ற அந்தக் காற்றைச் சுமக்க முடியாமல் தவிக்கின்ற பொழுதுகள் மிகக்குறுகியதாக இருந்தாலும் எத்தனை கொடுமை?

பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில், எல்லையற்ற வெளியில் விடையற்றுத் திரியும் எல்லா கேள்விகளோடு மணியின் உயிரும் கலந்தது... ●



அழிவின் விளிம்பில் தென்கரைக்கோட்டை!

நாயக்கர் காலத்து கோட்டை ஒண்ணு இப்ப விழுமோ... எப்ப விழுமோன்னு இருக்கு. வந்து பாருங்க ஸார்'' - டிரைவர் சேகர்தான் கூட்டிப் போனார் தென்கரைக் கோட்டைக்கு. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் வம்ச மன்னர்களின் கோட்டையாம் அது! கிட்டத்தட்ட நாற்பத்தொன்பது ஏக்கர் பரப்பு. நடுவே கல்யாண ராமர் திருக்கோயில். கோயில் மட்டும்தான் காலத்துக்கு ஈடு கொடுத்து, ஆங்காங்கே சற்றே சிதிலமானாலும், கம்பீரமாக இருக்கிறது. கோட்டைச் சுவரின் அகழிகள் இருந்த இடத்தில் இப்போது மதுப்புட்டிகளும், பாலிதீன் தம்ளர்களும் கோரமாகக் காட்சி தருகின்றன. தானியம் கொட்டி வைக்கும் கிடங்கு ஒன்றில், பாம்புகளின் நடமாட்டம் ஜாஸ்தியாக இருக்கிறது. கோயிலுக்குப் பின்புறம் இருந்த யானை மண்டபம் பாழடைந்து ஒரு பூனை கூட உட்புக முடியாதபடிக்குப் புதர்க்காடாய்க் காட்சி தருகிறது. நஞ்சுண்டேஸ்வரர் கோயிலில் இருக்கும் லிங்கத்தின் பீடம் தருமபுரி மாவட்டத்திலேயே மிகப் பெரிதாம். தரிசிக்க முடியாமல் அவ்ளோ வௌவால் வாசனை! அண்ணன் - தம்பிகளாக இருந்த இரண்டு நாயக்க மன்னர்களுக்கு இடையே நிகழ்ந்த அதிகாரப் போட்டிதான் கோட்டை அழிவுக்குக் காரணம் என்கிறார்கள். கல்யாணராமன் கோயிலிலிருக்கும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங்கள் கேட்பாரற்று நிற்கின்றன. சப்த ஸ்வரங்களை எழுப்பும் ஏழு கற்றூண்களைக் கற்களால் அடித்தே சிதைத்திருக்கிறார்கள். இந்தக் கோட்டைக்குள் புதையல் இருப்பதாகக் கிளம்பிய புரளியை நம்பி, நாசக்காரர்கள் ஆங்காங்கே குழிகளைத் தோண்டி வைத்திருக்கிறார்கள். இதில் அக்கால நடுகற்கள் கேட்பாரற்று பெயர்த்தெறியப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் கலைப் பொக்கிஷமாக இருக்க வேண்டிய பூமி, மத துவேஷத்தாலும், பராமரிப்பின்றியும் சிதைந்து கொண்டிருப்பதுதான் தென்கரைக் கோட்டையின் துக்கச் செய்தி.

வாசகர் யோசனை:

மாதவராமன், கிருஷ்ணகிரி


மாங்கனிக்
கண்காட்சி
மல்கோவா



கோபுரம்!



சேலத்து மாம்பழம்னு பேருதான். விளையற தென்னவோ, கிருஷ்ணகிரி மாவட்டத்துல! அத னாலதான் கிருஷ்ணகிரியில அகில இந்திய மாங் கனிக் கண்காட்சி நடக்குது. சமீபத்தில் நடந்த பதினேழாவது அகில இந்திய மாங்கனிக் கண் காட்சியின் போட்டி அரங்குல மட்டும் ஐம்பது ரகங்களைச் சேர்ந்த ஐந்நூற்று பன்னிரண்டு மாங் கனிகள் பார்வைக்கு இருந்தன. அதுல இரண்டு கிலோ எடை கொண்ட கெடாமர் முதல் ஐம்பது கிராம் எடை கொண்ட சக்கரக்குட்டி மாம்பழம் வரை அடக்கம். தமிழ் நாட்டுலேர்ந்து மட்டுமில் லாமல், கர்நாடகா, மஹாராஷ்டிரா, ஆந்திரா மாநில விவசாயிகளும் இம்மாநாட்டில் கலந்துகிட்டு, தங்கள் மாங்கனிகளைப் பார்வைக்கு வைச்சிருந் தாங்க. மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பா கண்காட்சியில கட்டியிருந்த பத்து அடி உயரம் கொண்ட மல்கோவா மாங்கனிக் கோபுரம் கண் காட்சியின் ஸ்பெஷல் அட்ராக்ஷன். கோவையைச் சேர்ந்த சக்தி என்பவரது தலைமையில், 700 கிலோ காய்கறிகளைக் கொண்டு ஓணான், பறவை, கோழி கள் போன்ற வடிவங்களை உருவாக்கி அசத்தி யிருந்தனர். இந்த மாங்கனிக் கண்காட்சியால் மண்ணின் விவசாயம் ஊக்கப்படுத்தப்படுகிறது.

தகவல் : **தோட்டக்கலைத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம்**

பதினைஞ்சு வயசுப் பெண்ணுக்குக் கல்யாணம். பத்திரிகை அடிச்சாச்சு. மறுநாள் காலை கல்யாணம். மொத நாளு சாயந்திரம்தான் எங்களுக்குத் தகவல் வந்தது. உடனே அந்த ஊரு விஏஓவைப் போய்ப் பார்த்தோம். விவரம் சொன்னோம். அவரு கிளம்பி வந்து, கிராம ஊராட்சித் தலைவரையும் உடன் அழைச்சிக்கிட்டு, பொண்ணு-மாப்ள வீட்ல உட்கார்ந்து பேசினோம். நைட்டு ஆயிடுச்சு. விடிஞ்சதும் நடக்க இருந்த கல்யாணத்தை எப்படியோ தடுத்து நிறுத்திட்டோம். பொண்ணுக்கு இன்னும் மூணு வயசு கூடுனதும் கல்யாணம் பண்ணிக்கங்கன்னு சொன்னோம். இரண்டு வீட்டாரும் ஒத்துக்கிட்டாங்க!'' என்கிறார் ஸ்வார்டு ட்ரஸ்ட் சென்னம்மாள். கிருஷ்ணகிரி மாவட்டம் நடுப்பட்டு கிராமத்தில் நிகழ்ந்த சம்பவம் இது.

தினசரிகளில் செய்திகளாகவும், புலனாய்வு இதழ்களில் விரிவான கட்டுரைகளாகவும் இடம்பெறும் இதுபோன்ற மிக மிக இளம் வயதுத் திருமணங்கள், தமிழ்நாட்டையே அவ்வப்போது திரும்பிப் பார்க்க வைக்கின்றன. தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டப் பகுதிகளில், தற்போதும் இக் கொடும் பழக்கத்தின் நிழல் படிந்து கொண்டேயிருக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிபட்டி கிராமம். சமீபத்தில் (சரியாக மே மாத இறுதியில்) நடைபெற இருந்த திருமணத்தைத் தகவல் அறிந்ததும், தருமபுரி மாவட்ட கலெக்டர் அமுதா, குறிப்பிட்ட கிராமத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்தியுள்ளார். இரு வீட்டாரிடமும் கடுமையாக எச்சரித்து அறிவுறுத்தி, அத்திருமணத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.

இதுபோல ஒவ்வொரு இடத்துக்கும் கலெக்டரே நேரில் சென்று தடுத்துக் கொண்டிருக்க முடியுமா? பெண்ணின் திருமண வயது பதினெட்டு. ஆணின் திருமண வயது இருபத்தியொண்ணு. திருமணச் சட்ட விதிகளைப் புறந்தள்ளும் மனோபாவம் இன்னமும் ஏன் இவர்களிடையே நீடிக்கிறது...?

''இது இப்பத்திய பழக்கமில்லே. நூறு வருஷத்துக்கு முன்னாடி பரவலா (தமிழ்நாட்டுல) இருந்த பழக்கம், இப்ப தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டப் பகுதிகள்ல மட்டும் கெட்டியா ஒட்டிக்கிச்சு. இன்னைக்கு இருக்கற தலைமுறையில, கொள்ளுத் தாத்தா - கொள்ளுப் பாட்டி கல்யாணம் எல்லாமே மிகமிகச் சின்ன வயசுல நடந்ததுதான். இப்ப எனக்கு வயசு நாப்பது. என்னோட பதினாலு வயசுல என்னை என் தாய் மாமனுக்கே கட்டி வெச்சுட்டாங்க!'' என விமர்சிக்கிறார் பெயரும், ஃபோட்டோவும் வெளியிட


● ஸ்டாலின்


● சென்னம்மாள்


● சம்பூர்ணம்

வேண்டாம் என மறுத்துவிட்ட ஒரு பெண்.

கிராமங்கள்ல நடக்குற பெரும்பாலான பால்ய வயதுத் திருமணங்கள் பற்றி நமக்குக்






இன்னுமா இந்தத் திருமணம்?

கிடைத்த அதிர்ச்சி தகவல் - இவை எல்லாமே நெருங்கிய உறவுக்குள் நடப்பவை. குறிப்பாகத் தாய் மாமன் உறவுப் பையன்களே இதில் அதிகம். 'பெண்ணின் அம்மாவுக்கு, தன் அப்பா வீட்டுச் சொத்தைப் பிறிதொரு பெண் வந்து அனுபவிக்கக் கூடாது. ஆளக் கூடாது என்கிற எண்ணம்' எனச் சொல்லப் படுகிறது கிராமப்புறங் களில்.

''தாய் மாமன் உறவுப் பையன்ங்க பெங்களூரு திருப்பூருனு வெளியூர் வேலைக்குக் கிளம்பிப் போய்டுறான்ங்க. அங்கேர்ந்து வரும்போது யாரோ ஒருத்திய கட்டிக்கிட்டு வந்துட்டா என்ன பண்றதுன்ற பயத்துலயே, உள்ளூர்ல பொண்ணுங்க வயசுக்கு வந்ததுமே, அவங்களுக்குக் கண்ணாலம் கட்டி வெச்சிடுறாங்க!'' என்கிறார் மத்தூர் மகளிர் சுயஉதவிக்குழு நிர்வாகி சம்பூர்ணம்.

'' நவீன விஞ்ஞான மருத்துவ உலகில், இன்று சராசரி மனித ஆயுள், அதிகரித்தே வருகிறது. இந்நிலையில், குழந்தைத் திருமணங்கள் எனப்படும் மிகமிக இளம் வயதுத் திருமணங்கள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியவை. ஆரோக்கியமான சமூகத்தின் அவமானச் சின்னங்கள். நவீன உலகிலும், அந்தந்த வயதில் அந்தந்த வயதுக்குரியவர்களாகவும் வாழ வைப்பதும் வாழ விடுவதும் நமது சமூகக் கடமை. இன்னுமா இந்தத் திருமணங்கள்...?'' எனக் கேட்கிறார் சமூகநல ஆர்வலர் ஸ்டாலின்.

வாசகர் யோசனை :
மலை ரத்தினசாமி



● சுகா

''இதுவரை திருநெல்வேலி மாவட்டத்தை மையப்படுத்தி வெளிவந்த படங்கள் பெரும்பான்மையானவை, அந்த நகரத்து மொழியை முழுமையாகப் பதிவு செய்யவில்லை. திருநெல்வேலி மைய நகரத்தின் தமிழைச் சரியாகச் சொல்ல முயலும் முயற்சிதான் படித்துறை'' என்கிறார் இயக்குநர் சுகா. இவர் தமிழ் சினிமாவுக்குப் புதுமுகமாக இருந்தாலும், இவரது தந்தை நெல்லை கண்ணன், நாடறிந்த அரசியல் பேச்சாளர். சுகா பாலுமகேந்திரா பள்ளியில் அஸோஸியேட் டைரக்டர் வேறு.

''தமிழில் இதுவரை வெளிவந்த படங்களில் அழகம்பெருமாள் இயக்கிய 'டும் டும் டும்' மட்டும்தான் திருநெல்வேலி நகரத் தமிழை ஓரளவுக்குப் பதிவு செய்தது. அங்காடித் தெருவில் கூட திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு ஊர்களில் உள்ள வழக்கு மொழியைப் பயன்படுத்தினார்கள்.

திருநெல்வேலி மைய நகரத்து மொழிக்கும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் பேசப்படும் மொழிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாச விகிதம்தான் படித்துறை'' என்னும் சுகா,

''ரத்தம், அரிவாள், கட்டப் பஞ்சாயத்து எனத் தமிழ் சினிமா இதுவரை சொன்ன திருநெல்வேலி மாவட்டத்தை நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், நான் செல்லுலாயிடில் காண்பிக்கப் போவது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைவிடப் பெரிய கோவிலான நெல்லையப்பர் காந்திமதி கோவிலைத்தான். தமிழகத்தின் மூன்றாவது பெரிய தேர், தேரோடும் நெல்லை நகர வீதிகள், என அழகான நெல்லையை 'படித்துறை'யில் பதிவு பண்ணியிருக்கேன். இந்த நகரத்தில் வாழும் சில குடும்பங்களின் கதைதான் படித்துறை,'' என்கிறார்.

அதென்ன படித்துறை...?

''ஆறோடும் எல்லா நகரங்களிலும் இந்தப் படித்துறை இடம் பெற்றிருக்கும். பல்வேறு மனிதர்கள் இந்தப் படித்துறையில் அமர்ந்திருப்பார்கள், நடந்திருப்பார்கள். பல்வேறு சடங்குகளை இந்த ஆற்றோரப் படித்துறை பார்த்திருக்கும். பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் மௌன சாட்சியாக மட்டுமே இந்தப் படித்துறை ஆண்டாண்டு காலமாக இருந்து வரும். மாற்றங்களின் நடுவே மாறாத அம்சம் படித்துறை என்பதால் இத்தலைப்பு என் படத்துக்கு'' என்கிறார்.



- ராகவ்குமார்


பக்குவப்படுத்தும்
படித்துறை!



"இந்தியா, இலங்கைக்கு கிள்ளுக்கீரை!"

திருமா வருத்தம்!

கொதித்துப் போயிருக்கிறார் திருமாவளவன். "ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த ராஜபட்சேவுக்கு தடபுடலான வரவேற்பு. என்ன அநியாயம்? என்று சூடாகத் துவங்கிய அவரிடம் நம் கேள்விகளை வைத்தோம்.

இலங்கைத் தமிழர்களின் இப்போதைய நிலை?


"அங்கு நடக்கும் நிகழ்வுகளைக் கேட்டால் மனிதாபிமானம் உள்ள யாருக்கும் கண்ணீர்தான் வரும். இன்னமும் வதை முகாம்களில் எவ்வளவு தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள் என்ற சரியான விவரம் கூட யாருக்கும் தெரியாது. வதை முகாம்களை விட்டுத் தங்கள் கிராமங்களுக்குச் சென்ற தமிழர்கள், அங்கே அவர்கள் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதைப் பார்த்து ஆடிப் போய்விட்டார்கள். எங்கெல்லாம் தமிழர்கள் அதிகமாக இருந்தார்களோ, அங்கெல்லாம் சிங்களர்கள் குடி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தமிழர்கள் அடிமையாக வாழும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழலில் ரத்தக் கறையுடன் வரும் ராஜபட்சேவுக்கு, இந்திய அரசின் சிவப்

"மத்திய அரசின் முட்டாள்தனமான கொள்கையால் இலங்கை, சீனாவுடன் நெருக்கம் காட்டுகிறது!"

புக் கம்பள வரவேற்பு கொடுமையிலும் கொடுமை.''

தமிழர்களின் மறுவாழ்வுக்கு முதல்வர் கூட மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரே?

''ஒரு கடிதம் என்ன? இதுவரை பலமுறை கவலை கொப்பளிக்க அவர் கடிதம் எழுதிவிட்டார். ஒரு முன்னேற்றமும் இல்லை. ஏதாவது அரசியல்ரீதியான அதிரடி இருந்தால்தான் மத்திய அரசின் போக்கில் மாறுதல் இருக்கும்.''



★ கருணாநிதி

இந்த நிலைக்குக் காரணம் மத்திய அமைச்சர்களா அல்லது அதிகாரிகளா?

''இந்திய அரசின் வெளியுறவுத் துறை அதிகாரிகள், அந்தக் காலத்திலிருந்து இலங்கை சிங்கள அரசுக்கு ஆதரவாகவே இருந்து வந்திருக்கிறார்கள். இது இப்போதும் தொடர்கிறது. நாம் நமது கோரிக்கைகளை இந்திய அரசுக்கு வைக்கவில்லை; இலங்கை பேரிலான சிங்கள அரசுக்குத்தான் வைக்கிறோமோ?'' என்ற கேள்வியே என் மனதுக்குள் எழுகிறது. அந்த அளவுக்கு அதிகாரவர்க்கம் சிங்கள ஆதரவுப் போக்கில் இருக்கிறது. மேலும், மத்திய அரசின் முட்டாள்தனமான கொள்கைகளால், இலங்கையோ சீனாவுடன் நெருக்கம் காட்டுகிறது. எனவே, நம்மைக் கண்டு பயப்படவில்லை. மின்னுக்கிரையாகப் பார்க்கிறது.''

தமிழகத்தின் குரல் இந்த விஷயத்தில் ஒன்றுபட்டு ஒலிக்காதது பலவீனம்தானே!

''தமிழக அரசியல் களத்தில் உள்ள சூழல் காரணமாகப் பிரிந்து இருந்தாலும், இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வைப் பொறுத்தமட்டில் எல்லோரும் ஒரே குரலில்தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.''

மத்திய அரசில் இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தைக் கவனிக்கத் தனி இலாகா வேண்டிக் குரல் கொடுப்பீர்களா?

''நடைமுறைக்குச் சாத்தியமான ஒன்றைப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்னைக்குத் தனி இலாகா என்று போராடினால், நமது நாட்டில் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அப்புறம் பல கோரிக்கைகள் இது போலக் கிளம்பும். வெளியுறவுத்துறை தமது அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும். தவிர, மத்திய அரசு 'கூட்டு நடவடிக்கைக் குழு' ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இதில் மத்திய மாநில அமைச்சர்கள், நடுநிலையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், மற்றும் முக்கியப் பிரமுகர்கள் இருக்க வேண்டும். இக்குழு இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு குறித்து ஸ்பாட் விசிட் உட்பட தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவர்களுக்கு நஷ்டஈடு வாங்கித் தரவும், இந்தியா கொடுக்கும் உதவித் தொகை சரியாகப் போய்ச் சேருகிறதா என்று கண்காணிக்கவும் வேண்டும். முதல்வரிடம் சொல்லி இந்தக் 'குழு'வுக்காகப் போராடுவோம்.''

★ ராஜபட்சே



- ப்ரியன்

அரசாங்கப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் சந்தானகுமார். அப்பாவின் திடீர் மறைவினால், படிப்பை அத்துடன் நிறுத்திவிட்டுக் குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டிய சூழ்நிலை. படிப்போ, தொழிற் பயிற்சியோ இல்லாத காரணத்தால், விவசாயக் கூலி வேலை செய்து ஈட்டிய சொற்ப வருமானத்தில் கஷ்ட ஜீவனம். ஆனால் இன்று சந்தான குமார் கூலி வேலை பார்க்கவில்லை. காற்றாடி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் எலக்ட்ரீஷியனாக வேலை பார்க்கிறார். மாதம் ஐந்தாயிரம் ரூபாயில் கஷ்டமில்லாமல் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்; தங்கைகளைப் படிக்க வைக்கிறார்.



TVS- வேகத்தில்

பேலகொண்டபள்ளி என்ற கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் நல்ல வகுப்பறைகள் கிடையாது. மாணவிகளுக்குக் கழிப்பறை வசதி இல்லை. பொதுத் தேர்வு தேர்ச்சி சதவிகிதம் நாற்பதைத் தாண்டியதில்லை. ஆனால், இன்று இதெல்லாம் பழைய கதை. ஓசூர் வட்டாரத்தில் இது ஒரு முக்கியமான பள்ளியாகிவிட்டது.



* டி.வி.எஸ்.நிறுவனத் தலைவர் வேணு ஸ்ரீனிவாசன்

ஓசூர் பக்கம் போனால் இதுபோன்ற சந்தோஷக் கதைகள் நிறையக் கேட்கலாம். இந்தக் கதைகளுக்குப் பின்னணியில் இருப்பவர்கள் ஸ்ரீனிவாசா சர்வீசஸ் டிரஸ்ட் - டி.வி.எஸ். குழும நிறுவனங்கள் சமூக அக்கறையுடன் அமைத்துள்ள தொண்டு நிறுவனம். ஓசூரைச் சுற்றியுள்ள 45 கிராமங்களில் இது மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

''சுமார் இருபது, முப்பது வருடங்களுக்கு முன், ஓசூர் ஒரு சின்ன ஊர். நல்ல சாலை வசதி கிடையாது. மாட்டு வண்டிதான் பிரதானப் போக்கு வரத்து வாகனம். விவசாயத்தை நம்பிய ஏழை மக்கள் நிரம்பிய பகுதி. அப்போது நான் அங்கே பணியாற்றி இருக்கிறேன். ஆனால், இன்று ஓசூர் தமிழ்நாட்டின் ஒரு முக்கியமான தொழில் நகரமாகிவிட்டது. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிக்



முன்னேற்றம்!

கொண்டிருக்கிறது. குடிசைகளே கண்ணில் படவில்லை; ஒரு குடும்பத்தின் சராசரியான மாத வருமானம் பத்தாயிரம் ரூபாய் என்ற அளவுக்கு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. இதற்கு டி.வி.எஸ். குழுமத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் மட்டுமில்லாமல் ஒசூரில் உள்ள அனைத்துத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பும்தான் காரணம்,'' என்கிறார் ஒய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், ஸ்ரீனிவாசன் சர்வீசஸ் டிரஸ்ட்டின் தலைவருமான அஷோக் ஜோஷி.

பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அவர்களுடைய பலம் என்ன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் தூண்டுகோலாக இருந்துவருகிறோம். 'ஏழு ஆண்டுகளுக்கு முன், ஆறு சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு டி.வி.எஸ். நிறுவனங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் வீட்டுப் பெண்கள் சேர்ந்து சப்பாத்தி செய்வது எப்படி என்று பயிற்சி அளித்தார்கள். அவர்கள் சிறிய அளவில் ஆரம்பித்து, இன்று தினம் 25 ஆயிரம் சப்பாத்தி தயாரித்து டி.வி.எஸ். நிறுவனங்கள் மட்டுமின்றி, ஒசூரில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் கேன்டீன்களுக்கும் சப்ளை செய்கிறார்கள். அவர்களுடைய ஆண்டு வருமானம் சுமார் ஒன்றரை கோடியைத் தாண்டிவிட்டது!

''கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் சுமார் மூவாயிரம் சுய உதவிக்குழுக்கள் ஆரம்பித்திருக்கிறோம். இவற்றால் பயன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை நாற்பத்தேழாயிரம்! ஆயிரம். இந்தக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் சிறுகச் சிறுக சுமார் ஏழு கோடி ரூபாய் அளவுக்குச் சேமித்து, அதன் அடிப்படையில் வங்கிகள் மூலமாக 26 கோடி ரூபாய் கடன் வாங்கி, பல்வகைத் தொழில்களிலும் ஈடுபட்டு, வருமானம் ஈட்டுகிறார்கள். இதனால் இந்தப் பெண்களின் குடும்ப வருமானம் சராசரியாக ஆயிரம் முதல் இரண்டாயிரம் வரை அதிகரித்துள்ளது,'' என விளக்குகிறார் அஷோக் ஜோஷி.



– எஸ். சந்திரமௌலி

திராவிடக் கட்சிகளுக்கு 'மாற்று' என்று தமிழக அரசியலில் சுட்டப்படும் விஜயகாந்த், பா.ம.கவின் கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட விருத்தாசலம் தொகுதியில், தனி ஆளாக நின்று ஜெயித்தபோது நிமிர்ந்து பார்க்க வைத்தார். அடுத்தடுத்த தேர்தல் தோல்விகளும், அனுபவங்களும் அவரை, கூட்டணி குறித்து யோசிக்க வைத்திருக்கின்றன.

ப்ளஸ்:

- சினிமா பாஷையில் நகராட்சி, ஊராட்சி, கிராமப் பகுதிகளை 'பி' அண்ட், 'சி' சென்டர் என்பார்கள். அந்தப் பகுதிகளில் உள்ள இளைஞர்களைத் தமது திரைப்படங்கள் மூலம் ஆதரவாளராகப் பெற்றிருப்பது.
- தமது படங்களில் அக்கிரமக்காரர்களையும், ஆட்சியாளர்களையும் எதிர்த்தும் 'களம்' காணுவது போன்று வைக்கப்பட்ட காட்சிகளால் 'நல்லவர், வல்லவர்' என்ற இமேஜைப் பெற்றிருப்பது.
- என்னுடைய கூட்டணி கடவுளோடும், மக்களோடும்தான் என்று சொல்லி, வெற்றி-தோல்வி குறித்துக் கவலை கொள்ளாமல் தனியாகவே தேர்தல் களம் காண்பது.
- ஜாதிமத வேறுபாடின்றி எல்லாப் பிரிவினரிடமும் இவருக்கு ஆதரவு உண்டு. வன்னியர் நிறைந்த விருத்தாசலத்தில் வென்றதே இதற்கு உதாரணம்.
- முப்பது வயதுக்குட்பட்ட இளம் ரத்தங்களை தே.மு.தி.க.வின் அடித்தளமாகப் பெற்றிருப்பது.
- பண்ருட்டி ராமச்சந்திரனின் அனுபவமிக்க அரசியல் ஆலோசனை.
- இரு திராவிடக் கழகங்களுக்கும் மாற்று



(+) பிளஸ் (-) மைனஸ் = பெரும்புள்ளி

வேண்டும் என்று விரும்புபவர்களின் நம்பிக்கை இவர்தான்.

● இவரைப் போலவே தைரியசாலியான மனைவி பிரேமலதாவை தேர்தல் பிரசாரகராகவும், ஆலோசகராகவும் பெற்றிருப்பது.

மைனஸ்

● ரமணாவுக்குப் பிறகு வந்த இவரது படங்கள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, முழு நேர அரசியல்வாதியாக மாறாமல் இருப்பது.

● சட்டமன்ற விவாதங்களில் பேசாமல், விவாதங்களில் பங்குபெறாமல் மௌனகாந்தாக இருப்பது!

● ''சில சமயங்களில் தலைவர் சர்வாதிகாரத்தனமாக நடந்து கொள்வதுதான் எங்களுக்கு வருத்தமளிக்கிறது'' என்கிறார் மதுரை தே.மு.தி.க. பிரமுகர் ஒருவர்.

● மைத்துனர் சுதீஷ் கட்சி விஷயங்களில் ஆதிக்கம் செலுத்துவது.

● மாவட்டங்களில் உள்ள கட்சிப் பிரமுகர்கள் இதனால் கட்சியைக் கைகழுவி விடுவது.

● தேர்தல் சமயத்தில் மட்டும் கடும் சூறாவளிச் சுற்றுப்பயணம். மற்ற நேரங்களில் மக்கள் பிரச்னைக்காகத் தெருவில் இறங்கிப் போராடாமல் இருப்பது.

● 'அ.தி.மு.க.வோடு கூட்டணி காண்பார்' என்ற வதந்தியால் அவரது நடுநிலைத் தன்மை ஆட்டம் காண்பது!

- ஸ்ரீநி



ஆடும் அடித்தளம்!



• **ஆறுமுகம்,**
திருவண்ணாமலை

எமன் உங்களைப் பேட்டி எடுக்க வந்தால்?

''செத்த' கறிக்க வா'' என்பேன்....!

• **அ.ராஜா ரஹ்மான், கம்பம்**

சென்னைப் பட்டணம் எப்படி வந்து சேர்ந்தீர்கள்?

அழுதபடி வந்தேன். VIA அம்மா வயிறு!

• **ஜெ.வி.ஜெ.கண்ணன், திருச்சி**

நெட்டையனை நம்பினாலும் குட்டையனை நம்பக்கூடாது என்று கூறுகிறார்களே ஏன்?

குட்டையன் வாமனனை நம்பி, வரமாக மூன்றடி மண் கொடுத்து ஏமாந்தான் மகாபலி. நெட்டையன் திருவிக்கிரமன் அதே மகாபலிக்குச் சிரஞ்சீவி பதவி அளித்தான்!

• **ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி**

பெண் பூனை, ஆண் பூனை இரண்டில் எது குறுக்கே போனால் அபசகுனம்?

பெண் பூனை போனால் அபசகுனம்! ஆண் பூனை போனால் டபுள் அபசகுனம். ஏனென்றால் ஏற்கனவே ஒரு பெண் பூனை போயிருக்கும்!

• **எம்.அசோக்ராஜா, திருச்சி**

உங்களால் புரிந்துகொள்ள முடியாதது எது?

ஞாபகமாக மோகனாகப் படுத்து, மோகனை மறந்து தூங்கி, மறக்காமல் அதே மோகனாக எழுந்திருப்பது புரியாத புதிர்!

• **எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

நம் உடலில் பல தொழிற் சாலைகள் உள்ளன. உங்களுக்குப் பிடித்த தொழிற்சாலை எது?

எல்லாத் தொழிற்சாலைகளும் ஓய்வெடுக்கும்போது, உழைக்கும் கனவுத் தொழிற்சாலை!

• **என்.பாலகிருஷ்ணன்,**
மதுரை

எதிர்காலம் யார் கையில்?

கையில் நிகழ் காலத்தை வைத்துக் கொண்டு எதிர்காலத்துக்கு அலைவானேன்!

• **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

மின்சாரம் கண்டுபிடிக்காதிருந்தால்?

நெனைக்கப் பாக்கவே ஷாக்கிங்கா இருக்கு!

• **பா.அசோக், திருவில்லிப்புத்தூர்**

உங்களுக்கு எந்த ''க்யூவில்'' நிக்க ஆசை?

''ஐ-க்யூவில்''!

• **மங்களம் மைந்தன், திருச்சி**

ஐம்புலன்களை அடக்குவதுதானே ஆன்மிகம்?

ஐம்புலன்ஸ் ஆம்புலன்ஸ்லதான் அடங்கும். ஐம்புலன்களுக்கு அடங்காமல் இருப்பதுதான் ஆன்மிகம்!

• **அ.அன்பழகன், கே.கே.நகர்**

பயம் வந்தால் தொடை நடுங்கி ஆடுவது ஏன்?

அது THIGH அப்படித்தான் ''தை தையென'' ஆடும். பயத்THIGH விட்டால் தைரிய வழி பிறக்கும்....!

• **என்.கோமதி,நெல்லை**

ஜோக்குகளில் வருகிற திருடன் பெயர் கபாலியாகவே இருக்கே...ஏன் கிரேஸி?

எங்கு செல்வம் 'கற்பக' விருட்சமாய்க் கொட்டிக் கிடக்குமோ, அங்கு

உரிமையோடு வருபவன் 'கபாலி'யாகத் தானே இருக்க முடியும். மைLAWப்பூர் சட்டப்படி கபாலி திருடனல்ல, காவல் காரன்!

● **ஆர்.அஜிதா, பெரிய பள்ளிவாசல்**

ஆலகால விஷமும் எப்போது அமிர் தம் ஆகும்?

கவிதை அரங்கேறும் நேரம் எது?

பரமசிவன் கழுத்தில் NECKtar....!

● **அருந்ததி, பெங்களூர்**

பறவை, விமானம் இரண்டுக் கும் என்ன வித்தியாசம்?

பறவை சிட்டுக் குருவி.... விமா னம் ஜெட்டுக் கருவி!

● **அ.ஷண்முக சுந்தரம், பெங்களூர்**

ஆத்திகனும் இல்லை, நாத்திகனும் இல்லை என்பவனை ''அக்னாஸ்டிக்'' என்று ஆங்கிலத்தில் கூறுகிறார் கள். தமிழில் அவனை எப்படி அழைக்கலாம்?

சாத்விகன் அலை யஸ் ரெண்டுங் கெட் டான் என்று அழைக்கலாம்...!

● **லலிதா, சென்னை**

மு து மை ம யை மறக்க என்ன வழி?

காலண்டரை பார்க்காதீர்கள். திங்கக் ''கிழ''மை, செவ்வாய்க் ''கிழ''மை, புதன் ''கிழ''மை என்று மறக்க நினைத்த கிழத்தை நினைவுபடுத்தும்!

● **எ.பாலசுப்ரமணியம்,விருதுநகர்**


கவிதை அரங்கேறும் நேரம் எது?

ஒத்திகை இல்லாமல் அரங்கேறும் ஒரே நிகழ்ச்சி கவிதை. இன்னும் சொல்லப் போனால் கவிதை நம்மை அரங்கேற்றுகிறது!



''நக்ஸலைட் மாவட்டம், தண்ணீர்ப் பிரச்னையுள்ள மண், வானம் பார்த்த பூமி, உற்பத்தியில பின்தங்கிய பூமி... இப்படி ஏகப்பட்ட மைனஸ் இருக்குதுங்க எங்க மாவட்டத்து மேல. இதெல்லாம் இயற்கை அமைப்பாலும், சில அரசியல் லாப-நஷ்டங்களால தொடர்றதுதான். ஆனா, தருமபுரி நகராட்சி மாதிரி தமிழ் நாட்டுல வேறெந்த நகராட்சியிலேயும் வளர்ச்சித் திட்டங்கள் சுணக்கமா நடக்கறது இல்லை. காரணம், நகராட்சித் தலைவரோ, வேறெந்த மாநகராட்சி உறுப்பினர்களோ இல்லைங்க. ஒரு தனியார் கான்ட்ராக்ட் நிறுவனம்தான் காரணம்'' என்று குண்டைத் தூக்கிப் போடுகிறார் தருமபுரி





நகராட்சியின் பதினேழாவது வார்டு கவுன்சிலர் டி.ஆர்.மாதேஷ். இவர் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்.

''ஸார், மறைச்சுப் பேசி என்ன ஆகப் போகுது. நேரடியாவே சொல்லிடறேன். நகராட்சியில விடற மொத்த கான்ட்ராக்ட்ல எண்பது சதவிகிதத்துக்கு மேல எடுத்து வேலை செய்யற 'சன் கன்ஸ்ட்ரக்ஷன்' நிறுவனம்தான் காரணம். எத்தனையோ போராட்டங்கள் நடத்திட்டோம். யார் யார்கிட்டேயோ மனு கொடுத்துட்டோம். சன் கன்ஸ்ட்ரக்ஷனை நடத்துறவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்ங்கறதால, எந்த நடவடிக்கையும் இல்லைங்க. பத்தொன்பதாவது வார்டுல சாக்கடை வசதியே இல்லை. பாய் விரிச்சது மாதிரி நகராட்சி முழுக்க ரோடு போட்டிருக்காங்க பேந்துக்கிட்டே இருக்கு. முப்பத்து மூணாவது வார்டுல சாக்கடைக் கால்வாய் கட்டுனாங்க. அடுத்த வாரமே இடிஞ்சு போச்சு. என்னோட வார்டுல போட்ட ரோடு மூணு மாசத்துலேயே பல்லை இளிக்குது. லாபம் தாங்க இவங்களுக்கு முக்கியம்; வேறெதுவும் கவலை இல்லை. தரக்குறைவா செய்யற வேலையையும்கூட எவ்ளோ இழுக்க முடியுமோ அவ்ளோ இழுக்கறாங்க'' என்று ஆதங்கப்படுகிறார் மாதேஷ்.

''நகராட்சியை விரிவுபடுத்துங்க! வருமானம் கூடும், வரிகள் குறையும்னு உள்ளாட்சித் துறைக்கு தீர்மானம் இயற்றி அனுப்பி வெச்சோம். நகராட்சி விரிவாக்கம் கிடையாதுன்னு திருப்பி அனுப்பிச்சுட்டாங்க. நகராட்சி முழுக்கக் குப்பைகள் தான். தேவையான குப்பைத் தொட்டிகள்

செயல்மறந்துபோன சன் கன்ஸ்ட்ரக்ஷன்?





...மாதேஷ்

இல்லை. தருமபுரி நகராட்சி அரசு ஆஸ்பத்திரியில லஞ்சம் தலைவிரிச்சு தலைகீழா ஆடுது.

நாற்பது வருஷ ஒப்பந்தம் முடிஞ்சும் மாநகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தை மாவட்டப் பஞ்சாயத்து ஒப்படைக்காம சுணக்கம் காண்பிக்குது. இந்த வளாகம் மாநகராட்சி கைக்கு வந்ததுன்னா கணிசமாக நகராட்சி வருமானம் கூடும். அது மட்டுமில்லே... தருமபுரிக்கு தொழிற் பேட்டை ரொம்ப முக்கியம் ஸார்,'' என்கிறார் அவர்.

என்ன சொல்கிறார் தருமபுரி நகராட்சித் தலைவர் ஆனந்தன்?...

''நகராட்சி விரிவாக்கத் திட்டத்தைத் திருப்பி அனுப்பலைங்க. 2007லயிருந்து ஆலோசிச்சிக்கிட்டிருக்கோம். நிலுவையில் தான் இருக்கு...''(!?) என்றவர், மாதேஷ் சொன்ன பிரச்னைகள் எங்க நகராட்சியில இருக்கறது உண்மைதாங்க,'' என ஒப்புக் கொண்டார்.

''சன் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தை நடத்துற தருமபுரி நகராட்சி துணைத் தலைவர் தங்கராஜ்தாங்க காரணம். 'சன் கன்ஸ்ட்ரக்ஷன்' எடுத்துச் செய்யற வேலைகள் தாமதமாகுதுன்னு நகராட்சி நிர்வாகம் சார்புல கோர்ட்டுக்குப் போனோம். அவங்க ஸ்டே வாங்கிட்டாங்க. சாக்கடை வசதிகள் வேலை தாமதமாகுதுன்னு குடிநீர் வடிகால் வாரியம் சன் கன்ஸ்ட்ரக்ஷனுக்கு அபராதம் போட்டது. அதைக் கட்டிட்டு வேலையை இன்னும் தாமதப்படுத்துறாங்க. நகராட்சியில குடிதண்ணீர்ப் பிரச்னை கிடையாது; பஞ்சம்பள்ளியிலேர்ந்து தண்ணீர் வருது. மக்கும் குப்பை, மக்காத குப்பைன்னு பிரிக்கறதுக்கு, தடங்கம் கிராமத்துல திட்டப் பணிகள் நடக்குது'' என்கிறார்.

தங்கராஜ் தரப்பில் விவரம் கேட்க அவரை பலமுறை கைபேசியில் தொடர்புகொள்ள முயன்றோம். பதில் இல்லை...

வாசகர் யோசனை:
சீனிவாசன், தருமபுரி





எட்டுத் திக்கு

திருப்பதிக்கு லட்டு மாதிரி, கிருஷ்ணகிரிக்கு ஜமுனா ஸ்வீட்...

"நாம பொறந்து வளர்ந்த ஊர்ல, ஒரு நல்ல ஸ்வீட் கடை போடணும். நம்ம ஊரு மக்களுக்கு நல்ல ஸ்வீட் தரணும்... அப்படிங்கற எண்ணத்துலதான் மொதல்ல ஆரம்பிச்சோம். அதுவே, ஒரு பெரிய ஃபேக்டரி ஆகும், எட்டுத்திக்கும் எங்க ஸ்வீட் போகும்னு நாங்க நெனைச்சுக் கூட பார்க்கலை!'' என்கிறார் ஜமுனா பால்கோவா உரிமையாளர்களில் ஒருவரான சுந்தரேசன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் இயங்கி வருகிறது ஜமுனா பால்கோவா தயாரிப்புத் தொழிலகம். வேன்களில் பால் வந்து இறங்கிக்கொண்டே இருக்கிறது. பால் கொள்முதல் செய்வதிலேயே தொடங்கி விடுகிறது, ஜமுனா பால்கோவா தரத்தின் கண்டிப்பு.

''பலகட்டப் பரிசோதனைகளுக்குப் பின்னரே, பாலை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். சரியில்லைன்னா அந்தக் கேன் பாலைத் திருப்பி அனுப்பிச்சுடுவோம். கோவாவுக்கும் சரி, பால்கோவாவுக்கும் சரி... பால் சுத்தமானதா தரமானதா இருக்கணும்!'' என்கிறார் முப்பத்தெட்டு ஆண்டு காலமாக இங்கு வேலை செய்து வரும் முதியவர் ஒருவர்.

கோவா என்பது சர்க்கரை சேர்க்காமல் சுண்டக்காய்ச்சி வற்ற வைத்த பால். சர்க்கரை சேரும்போது அதுவே பால்கோவா என்ற இனிப்பாகிறது. கோவாவுலேர்ந்து நிறைய வகை இனிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. காவேரிப்பட்டணம் ஜமுனா பால்கோவா, தமிழ்நாடு



த்திக்கும்...

உட்பட அஞ்சு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுது.

''குடியாத்தம் நகர்ல எங்க மாமா, பால்கோவா ஃபேக்டரி வைச்சிருந்தாங்க. அப்ப நானும், என் அண்ணார் ஜெகதீசனும் படிச்சுக்கிட்டே, மாமா பேக்டரியில போயி வேலை பார்த்தோம். தொழில் கத்துக்கிட்டோம். பொறந்த ஊரான காவேரிப்பட்டணத்துல ஃபேக்டரி போட்டோம். எங்க மாமாப் பொண்ணு பேரு ஜமுனா. எங்க அண்ணார் பொண்ணு பேரும் ஜமுனா. அந்தப் பேர்லயே பால்கோவா தயாரிச்சோம்'' என்கிறார் சுந்தரேசன்.

''காவேரிப்பட்டணத்துல ஃபேக்டரி வாசல்ல, கிருஷ்ணகிரியில ஒரு கடைன்னு வியாபாரம் விரிவடைஞ்சது. ஸ்வீட் கடைகளுக்கு ரா மெட்டீரியலா பயன்படுத்தப்படும் கோவா தயாரிச்சு வெளியூர்களுக்கு அனுப்ப ஆரம்பிச்சோம். ஜமுனா பால்கோவா கம்பெனி கோவாவுக்கு நல்ல மார்க்கெட் பிடிக்க ஆரம்பிச்சது.



நவீன எந்திரங்களை இறக்குமதி செஞ்சோம். உதாரணத்துக்கு, ஒரு எந்திரத்துல இரண்டாயிரத்து எண்ணூறு லிட்டர் பால் ஊத்தினா, அதுவே காய வைச்சு நல்லா சுண்ட வைச்சு தொள்ளாயிரம் லிட்டர் கோவா பாலாகக் கொடுத்துடும். கோவா பால்ல பக்குவமா சில பொருட்கள சேர்த்து, தரம்மிக்க கோவா உற்பத்திப் பண்றோம். இந்தக் கோவாவைப் பயன்படுத்தி, சுமார் இருநூறு வகையான இனிப்புகள் தயாரிக்கப்படுது'' என்கிறார் சுந்தரேசன்.

வாசகர் யோசனை: **மாதவராமன், கிருஷ்ணகிரி**



"மாப்பிள்ளை பெரிய அரசியல்வாதிங்கறத் துக்காக இப்படியா?"

"ஏன் என்ன பண்ணினார்?"

"சீர்வரிசை லிஸ்ட்டுல சைக்கிள் செயின், ஆஸிட், அரிவாள் எல்லாம் இருக்கே!"



"என்னப்பா இது! சாம்பார்ல உயிரோட ஒரு 'ஈ' கெடக்குதே?"

"கொஞ்சம் வெயிட் பண்ணுங்க... உங்க இட்லிக்கு அடியில இருக்கிற பல்லி வந்து அதைத் தின்னுடும்!"

ஆஸிட்... அரிவாள்... சீர்வரிசை..!

ஏ.விக்டர் ஜான்



"மாப்பிள்ளை கிரிக்கெட்ல பௌலரா இருக்காரா?"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"போண்டாவைத் திங்கறத்துக்கு முன்னாடி பாண்ட்ல போட்டு இப்படித் தேய்க்கிறாரே!"

"மன்னர் சந்தோஷமாக உள்ளாரே ஏன்?"

"ஒரு வழியா போருக்குப் புறப்படலாம் என்று கிளம்பும்போது கால் சுளுக்கிக் கொண்டதாம்?"



மு.மதிவாணன்

"என் மனைவிக்கு பதி பக்தி அதிகம்... உன் மனைவிக்கு...?"

"பதியைப் பயப்படுத்தற புத்தி அதிகம்..."



கே.ஆனந்தன்



" இவர் பலான பேஷண்டா
இருப்பார் போலிருக்கே?"
" எப்படிச் சொல்றீங்க டாக்டர்?"
" இவர் கிட்னியில் 'இது குப்புசாமியிடம்
திருடியது'ன்னு போட்டிருக்கே!"



"தலைவருக்காக செருப்பா உழைச்சேன்!"
"சரி அதுக்கென்ன இப்ப?..."
"உதறிட்டுப் போயிட்டாரே!"



"நேத்து உங்க மாமியாரை தேள் கொட்டிடுச்சுன்னு கூட்டிக்கிட்டு வந்தீங்க. இப்போ உங்களையும் தேள் கொட்டிடுச்சுன்னு! வந்திருக்கீங்களே!"
"சந்தோஷம் தாங்க முடியாம தேளுக்கு முத்தம் கொடுத்துட்டேன் டாக்டர்!"

வட்டமேஜை

'**ஊ**ர்வசி... ஊர்வசி... தேவையில்லை பார்மஸி...' என்று பாடும் அளவுக்கு வாசகர்களுக்கு அவர் அளிக்கப் போகும் சிரிப்பு டானிக் அமையும் என்று 'காலை எழுந்தவுடன் சிரிப்பு' தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

- அமிர்தா, சென்னை-26.

'**அ**தியமான் கோட்டை அதிசயம்' என்று, முக்கியமான தகவல்களைப் படத்துடன் அச்சிட்டு வெளியிட்டிருப்பது அனைத்து வாசகர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமே!

- வே.அருணாதேவி, வடபாதிமங்கலம்

மாவோ இயக்கத்தைப் பற்றிய தலையங்கம் அருமை! மக்களின் உயிர்களைக் காப்பது பாரதத்தின் உரிமை! மாவோயிஸ்ட்களைக் கட்டுப்படுத்துவது அரசின் கடமை! மாவோயிஸ்ட் கை ஓங்கினால் பாரதம் ஆகும் வெறுமை!

-இராம.வேதநாயகம், திருவாரூர்

'**கா**தில் விழுந்தவை' பகுதியில் இடம்பெற்ற '3' சங்கதிகளும் ''ட்ரிபிள் ஷாட்' போல இருந்தன!

-கே.அருள், வேலூர்

இந்த டீலிங் ரொம்பப் பிடிச்சிருக்கு!

ப்ளஸ் படிச்சப்போ சிரிப்பா வந்துச்சு. மைனஸ் படிக்கிறப்போ, 'உங்களையெல்லாம் நெனைச்சா எனக்கு பாவமா இருந்துச்சு...' 'பட், எனக்கு அந்த டீலிங் ரொம்பப் பிடிச்சிருந்துச்சு.'

-எம்.ராஜன், மதுரை

தீர்த்தமலை பற்றிப் படித்ததும் உடன் செல்ல ஆவல் பிறந்தது.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

தாய்நாட்டைக் காக்கும் பணியில் தன்னலம் கருதாது கருமமே கண்ணாயிருக்கும் தானம் பட்டிக்கு சல்யூட் கொடுத்து 'மிலிட்டரிப்பட்டி' என அழைக்கலாமே!

- எஸ். உஷா சுதர்சன், திருச்செங்கோடு



கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

'தண்ணீர்ப் பகிர்வு ஒரு முக்கியப் பிரச்னையாக இருக்கப் போகிறது!' என்ற பிரதமரின் எச்சரிக்கை கவனிக்கத்தக்கதுதான். அதை அவர் நாடு முழுவதும் கேட்கும்படி ராட்சத சங்கெடுத்து ஊதுவது பெரிதல்ல! நதிகளைத் தேசியமயமாக்கும் திட்டத்தினை தலையாயப் பிரச்னையாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுத்த முனைந்திட வேண்டும்! பிற்காலத்தில் தண்ணீர்ப் பிரச்னை பூதாகாரமெடுக்கும் அபாயம் அக்கண்களுக்கு நிச்சயம் தெரியும்! புவி வெப்பமய மாதல் போல், பாரதத்தில் மாநிலத்துக்கு மாநிலம் நீர்ப் பகிர்வில் குழாயடிச் சண்டை நடக்கும் காலம் தொலைவில் இல்லை!

- அ.ராஜப்பன், கருமத்தம்பட்டி

ஸ்ரீநிவாசராகவனின் ஆலயம் தொடர் ஆரம்பம் சமயபுரம் ஸ்ரீமாரியம்மனின் திருமுக தரிசனத்தோடு ஆரம்பித்தது மெய் சிலிர்க்க வைத்தது! அன்று தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் எழுதியதைப் போல், மீண்டும் ஒரு ஆலய தரிசனம். **-ஈ.ஆர்.மயிலப்பன், ஈரோடு**

அமரர் கல்கி பக்கம் வாரம்தோறும் சிந்தனையைத் தட்டுகிறது.

- தஞ்சை ஹேமலதா, வெண்டையம்பட்டி

அனுஷ்காவை 'வெண்ணெய்ச் சிற்பம்' அப்படின்னு சொல்லிட்டீங்களே தலைவா! உமது குசும்புக்கு ஒரு அளவு இல்லையா?

- எம்.கே.அருள்ராஜா, முனியங்குறிச்சி

எழில்வரதன் அவர்களின் வட்டாரக் கதையைப் பாராட்ட வார்த்தைகளில்லை.

- ஷியாமளா ரங்கநாதன், மந்தைவெளி

இந்திரா பார்த்தசாரதியின் சிந்தனை வீச்சும் செழுமை நடையும் மிக அருமை. இளமைப் பாலம் இனிய தாலாட்டு. தற்காலத்தில் படித்தவர்கள் கூட நல்ல தமிழில் எழுதவும், பேசவும் திணறுகிறார்கள். காரணம்- கற்பதிலும் கற்பிப்பதிலும் நல்ல தமிழ் இடம்பெறவில்லை. ஊருணி நிறைந்தால் ஊர்க்கேணி சுரக்கும் என்பார்கள். கல்கியில் அருமையான கட்டுரைகள் இடம்பெறுகின்றன. பொழுதுபோக்குடன், மொழிப் பயிற்சியை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன. கல்கியின் இந்தச் சீரிய பணிக்குப் பாராட்டுதல்கள்.


- துரை இராஜசேகரன், பொள்ளாச்சி

கல்கி இணைய இதழில் சிறந்த கடிதம் எழுதி கிழக்குப் பதிப்பகத்தின் ரூ.250/- மதிப்புள்ள நூல்களைப் பரிசாகப் பெறுபவர் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த பி.கோபி இவரது கடிதம்:

பிரிந்து போன மனங்களைக் கூட கல்கியின் தராசு பதில்கள் பகுதி ஒட்ட வைத்திருக்கிறது என்பதை, வாவ் வாசகர் மதிவாணன் மூலமாக தெரிந்து கொண்டேன். எங்கள் 'இதய நாயகன்' என்றும் கல்கிதான்.

வாசகர்களே... கிருஷ்ணகிரி மாவட்டக் கலெக்டர் சண்முகத்தின் நேர்காணல் இந்த இதழில் அச்சாகும் நேரத்தில் அவர் விருதுநகர் மாவட்டத்துக்கு மாற்றலாகி இருக்கிறார். அங்கு அவரை மீண்டும் சந்திப்போம். **(ஆர்).**

காசிக்கு இணையான சந்திரசூடேஸ்வரர்





குளிர்போர்த்தி இருக்கும் ஓசூரை அருள் போர்த்திக் காக்கிறார் ஸ்ரீசந்திர சூடேஸ்வரர். ஓசூர் என்று தமிழிலும் ஹோசூர் என்று பிறமொழிகளிலும் இவ் வூர் விளிக்கப் பெற்றாலும், ஆதிபெயர் ஓச ஊரு. கன்னடத்தில் ஓச என்றால் 'புதிய' என்று பொருள். எனினும், பதி மூன்றாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் ஓசூரை, செவிட நாடு என்றும், மலைமீது வீற்றிருந்து ஓசூரைக் காக்கும் சந்திர சூடேஸ்வரரை 'செவிட நாயனார்' என் றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. பிராகா ரங்களிலும், தூண்களிலும் இன்றும் 'செவிட நாயனார்' பெயரைப் படிக்க லாம்.

படைத்தல், காத்தல், அழித்தல்... தொழில்களை முறையே செய்யும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் ஒரே நேர்க் கோட்டில் தனித்தனி மலைக் கோயில்கள் இருப்பது தமிழகத்தி

லேயே இங்கு மட்டும்தான்.

சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில், ஒசூரின் கிழக்குப் பகுதியின் திலகமாக இருக்கும் சந்திர சூடேஸ்வரர் ஸ்தலத்தின் தற்போதைய முழுமையான பெயர் அருள்மிகு மரகதாம் பிகை சமேத ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் திருக் கோயில். சிவபெருமான் இம்மலையில் உடும்பு வடிவெடுத்துக் காட்சி கொடுத்த தால் கௌதேய பர்வதம்; பார்வதிதேவி மரகதவடிவம் பெற்றதால் மரகதாத்ரி; கைலாசத் துக்கு இணையாக இம் மலையில் வீற் றிருந்து அருள் பொழியும் ஈசனை வழிபட்டதால், தென்கைலாயம். இவ் வாறு இந்தத் தலம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. எனவே, காசி விஸ்வநாதருக்கு இணையாக ஸ்ரீசந்திரசூடேஸ்வரரும் வணங்கப் படுகிறார். பிரம்ம தீர்த்தம், பர்வதம், மரகதம், சாம்பவம், மச்சம், பாண்டவர், சிவகங்கை, அனுமன், விஷ்ணு... ஆகி யோரின் பெயரால் வழங்கப்படும் தீர்த்த நிலைகளும் உள்ளன. இதில் பாண்ட வர்கள், தங்கள் வனவாசத்தின்போது மரகத சரோவரத் தீர்த்தத்தில் நீராடி பத்ரகிரி சந்திரசூடேஸ்வரனை வழிபட்ட தாக கோயில் ஸ்தல புராணம் கூறுகிறது. இம் மலையின் அடிவாரத்தில் இருக்கும் பச்சைக் குளம்தான் இத்தீர்த்தம் என்றும் கூறுகின்றனர்.

இக்கோயிலின் நுழைவாயில் ஜலகண் டேஸ்வரர் (லிங்க வடிவம்) சக்தி மிக்க வராகப் போற்றப்படுகிறார். வறட்சிக் காலத்தில் இச்சந்நிதியை நீரால் நிரப்பிப் பதினாறு நாட்கள் பூஜைகள் நடத்தினால், மழை பொழியும் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. மூன்று ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் கோயிலுக்கு முன்பாக, காமாட்சி ஈஸ்வரர், தன் இணையான காளிகாம்பாளுடன் குடிகொண்டருளும் கோயில் விசேஷமாய் இருக்கிறது.

ஸ்ரீசந்திரசூடேஸ்வரரை இருநூறு படி யேறிச் சென்றுதான் தரிசிக்க முடியும். இது திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வதற்குச் சமம் என்கின்றனர். எனி னும், ஒவ்வொரு பௌர் ணமி அன்றும் மாலை ஐந்து மணிக்கு இங்கு தனி யாக கிரிவலமும் உண்டு!



கோயிலுக்குள் நுழைகையிலே, வெளிப்பிராகாரத் தில் முற்றுப் பெறாத கோபுரமும், அடுத்து தெற்கு பார்த்த ஐந்து நிலை கோபுரங்களும் கம்பீரத் தோற்றம் தந்து அழைக்கின்றன. சுதையாலான நந்தி, பிரதான வாயிலில் மேற்கு நோக்கிய வாறு காட்சியளிக்கிறார். பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடவரைகள், சிற்ப வேலைப்பாடுகளால் மிளிர்கின்றன. தனிச் சன்னிதியில் வள்ளி தெய்வானை யுடன் சுப்ரமண்யரும், நுழையும்போது எதிர்ப்புறம் மகா கணபதியும் அருள் பாலிக்கிறார்கள்.

பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்து தெளிவான வரலாற்று ஆதாரங்களுடன் விளங்கும் அருள்மிகு மரகதாம்பிகை சமேத ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் திருக்கோயி லில், மாசி மாதம் 13 நாட்கள் திருவிழா கொண்டாட்டம். விழா நிறைவாக ரதோத்சவம் நடைபெறுகிறது.

வாசகர் யோசனை:

மாதவராமன், தருமபுரி

போடுங்கய்யா தீர்மானம்-8

தமிழில் பன்னிரண்டு ஆண்டுகள் முழுமையாகக் கற்றும், மாணவர்கள் தமிழில் எழுதும் படைப்பாற்றல் இன்றியும், எழுத்துப் பிழையுடன் எழுதுவதையும் இன்றைய வாழ்க்கையில் நாம் காண்கிறோம். தகவல் தொடர்பு சாதனங்களில் எழுத்து உச்சரிப்புப் பிழை ஏற்படுவது சகஜமான ஒன்றாக உள்ளது. இதை நீக்க... குறிப்பாக 'ழ' கர உச்சரிப்புக் கென்று பயிற்சியளிக்கும் 'ஒலி ஒளி' படமெடுத்துப் பயிற்சி அளித்து அக்குறை நீக்கலாம். வேலையின்றி இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் வல்லுநர்களை உச்சரிப்பு பயிற்சி பட்டறைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



ஆரம்பக் கல்வி நிலையில் தமிழை இரண்டாம் வகுப்பு வரை பயிற்றுமொழியாக மாற்றியமைப்பது மட்டுமின்றி உச்சரிப்புக்கான பயிற்சியைப் பரவலாக்க மாநாட்டில் தீர்மானம் போட வேண்டும்.

- புலவர் பி.ஆர்.லட்சுமி

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed
post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.